॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ஸ்ரீ சாரதா பீடம்

இயற்றியது :

ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் M. A., B. L.,
ரிடையர்டு அட்வொகேட்,
திருநெல்வேலி.

பிரசுரித்தது :

கோயமுத்தூர் சிருங்கேரி ஸ்ரீ சங்கர மடம்
கட்டிட நிர்மாண ஸமிதி.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.

1959

[ரூபாய் 1-25

# ஸமர்ப்பணம்.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸம்ஸ்தானத்திற்கு தக்ஷிணதேசத்தில் பிராசீனமாய் ஏற்பட்டிருக்கிற அநேக மடங்களில், கோயம்புத்தூர் ராஜவீதியிலுள்ள இந்த மடம் மிகவும் முக்யமானது. மைசூர் ராஜ்யத்திலிருந்து சிருங்கேரி ஆசார்யர்கள் தமிழ் ஜில்லாக்களுக்கோ, மலையாள பிரதேசத்திற்கோ விஜயம் செய்யவேண்டுமானுல் கோயம்புத்தூர் மார்க்கமே மிகவும் ஸௌகர்யமானது. தத்காலம் பீடாதிபத்யம் வஹித்துவரும் **ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் அவர்கள்** 1956-ம் வருஷம் சிருங்கேரியிலிருந்து புறப்பட்டு, யாத்ரா கிரமமாக மேற்கு ஸமுத்திரக் கரையோரமாக ஸஞ்சாரம் செய்துகொண்டு, தெற்கே கன்யாகுமாரிவரை விஜயம்செய்து, ஆங்காங்குள்ள சிஷ்யர்களை அநுக்ரஹித்துக்கொண்டு 1958-ம் வருஷம் நவராத்ரிக்கு முன்னதாகவே கோயம்புத்தூருக்கு விஜயம் செய்து தன் குருநாதாளுடைய ஆராதனையையும், நவராத்ரி மஹோத்ஸவத்தையும் வெகு சிறப்பாக இங்கேயே நடத்தி பரமாநுக்ரஹம் செய்தார்கள்.

அந்த சமயம் அங்கே கூடியிருந்த சிஷ்யர்கள் எல்லோரும் வெகு உத்ஸாஹத்துடன் ஓட்டுக்கட்டடமாயிருந்த இம்மடத்தை கல்கட்டடமாக விஸ்தாரமாக மாற்றியமைக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தின் அநுமதியைப்பெற்று ஒவ்வொருவரும் ஏராளமாகப் பண உதவிசெய்தும் பழயகட்டடத்திலுள்ள சாமான்களை உபயோகித்துக்கொண்டும் இப்பொழுது சுமார் 1½ லக்ஷம் ரூபாய்வரை மதிப்பிடக்கூடிய கட்டடத்தை வெகு அழகாக ஏற்படுத்தியிருக்கிருர்கள். இவ்வளவு சீக்கிரத்தில் இக்கட்டடம் வெகு நேர்த்தியாகவும் ஸகலவிதமான ஸௌகர்யங்களுடனும் ஏற்பட்டிருப்பது

ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் அநுக்ரஹ விசேஷமென்றே சொல்லவேண்டும். இந்தக் கட்டட நிர்மாணத்தில் பல விதத்திலும் பங்கு எடுத்துக்கொண்ட யாவரும் ஆசார்ய கைங்கர்யமாக எண்ணியே இதில் விசேஷ ஊக்கத்துடன் ஈடுபட்டிருப்பதால் தங்கள் பெயர்களை வெளிப்படுத்திக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. நம் பிரார்த்தனைக்கு இணங்கி சிரமத்தைப் பாராமல் ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் இன்று நேரில் இங்கு விஜயம்செய்து புதிய ஸ்ரீ மடத்தில் கிருஹப்ரவேசமும்செய்வித்து சிஷ்யர்களை அநுக்ரஹித்திருப்பதும் நம்முடைய பாக்ய விசேஷமேயாகும்.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு பீடத்தின் வரலாற்றை சிஷ்யர்கள் யாவரும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமானபடியால், அதை சுருக்கமாகப் பிரசுரிக்க வேண்டுமென்று தோன்றி, அச்சிட்டு இந்த ஸ்ரீமடம் கிருஹப்ரவேச சமயத்தில் வெளியிட்டுள்ள இப்புஸ்தகத்தை ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பாதாரவிந்தங்களில் அனந்தகோடி வந்தனங்களுடன் மிகத் தாழ்மையாக ஸமர்ப்பணம் செய்கிறோம்.

विकारिसंवत्सरमार्गशीर्षसुपंचमीभार्गववासरेऽस्मिन् ।
कोयंपुरीदिव्यमठालयस्य चोद्घाटनापुण्यमहोत्सवेऽत्र ॥

श्रीशारदापीठविराजमानजगद्गुरूणां चरणारविन्दे ।
श्रीशारदापीठसुनामधेयं ग्रन्थोपहारं च समर्पयामः ॥

विद्यातीर्थगुरुश्चास्मान् सदाऽभिनवपूर्वकः ।
शारदापूजनासक्तः पायाल्लोकसुपूजितः ॥

விகாரி-௵ மார்க்கசீர்ஷ
சுக்லபஞ்சமீ
4—12—59.

ஸ்ரீமடம் கட்டட நிர்மாண ஸமிதியார்,
கோயம்புத்தூர்.

# அட்டவணை.

| அத்யாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பூர்வாசார்யர்கள் | 1 |
| 2. | ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் அவதாரம் | 6 |
| 3. | ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் சிஷ்யர்கள் | 11 |
| 4. | ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் திக்விஜயம் | 18 |
| 5 | ஸ்ரீ வித்யாசங்கரர் வரை | 25 |
| 6. | ஸ்ரீ வித்யாரண்யர் முதல் | 34 |
| 7. | ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் | 48 |
| 8. | ஸ்ரீ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் | 57 |
| 9. | ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் | 70 |
| 10. | ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் | 80 |
| 11 | ஸ்ரீ சிருங்ககிரி ஸம்ஸ்தானம் | 86 |

அனுபந்தம்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சாரதா பீடம் ஸ்ரீ ஜகத்குரு பரம்பரை | i |
| 2. | ஸ்ரீ மடம் கட்டிடங்களும் நிலங்களும் | iii |
| 3 | ஸ்ரீ சங்கராசார்ய அஷ்டோத்தர சத நாமாவளி | 1 |
| 4. | ஸ்ரீ குரு பரம்பரா ஸ்தோத்ரம் | 9 |

## படங்கள் விபரம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கர மடம், கோயமுத்தூர். | அட்டையில் |
| 2. | ,, ,, | முகப்பில் |
| 3. | ஸ்ரீ சங்கர பகவத்பாதர் நான்கு சிஷ்யர்களுடன் | 11 |
| 4. | ஸ்ரீ வித்யாசங்கரர் ஆலயம், சிருங்கேரி | 30 |
| 5. | ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் | 48 |
| 6. | ஸ்ரீ ஸச்சிதானந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் | 57 |
| 7. | காலடி கோவில்கள் | 66 |
| 8. | ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் | 70 |
| 9. | ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் | 80 |
| 10. | ஸ்ரீ மஹா ஸந்நிதானம் ஊர்வலம் | 84 |
| 11. | ஸ்ரீ சாரதாம்பாள், சிருங்கேரி | 88 |
| 12. | ஸ்ரீ சங்கர மடம், கோயமுத்தூர் | 92 |



*Foundation laid by*
Dr. Sir C. P. Ramaswami Aiyar
on 9—2—59.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சங்கர மடம்
(உட்புறம்)
கோயமுத்தூர்

*Opened by*
His Holiness Sringeri Jagadguru
Sri Abhinava Vidyatheertha Swamigal
on 4—12—59.

உ

॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ஸ்ரீ சாரதா பீடம்.

## அத்யாயம் 1

### பூர்வாசார்யர்கள்

ஸகல ஜகந்நியந்தாவான பரமாத்மா, கல்பாரம்பத்தில் பிராணி வர்க்கங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு முன்னாலேயே, அவர்களுக்குப் புருஷார்த்த ஸாதனங்களைப் போதிக்கக் கூடிய வேதத்தை, ஜகத் ஸ்ருஷ்டியதிகாரம் பெற்ற முதல் ஜீவனான பிரஹ்மதேவனுக்கு உபதேசித்தார். அவர் அதையே பரமப் பிரமாணமாக வைத்துக்கொண்டு, முன் கல்பங்களிலிருந்தபடி ஸூர்யன் சந்திரன் முதலான ஸகல தேவதைகளையும், மனுஷ்ய வர்க்கங்களையும், பசு, பக்ஷி, செடி, கொடி, விருக்ஷாதி ஸகல ஜீவராசிகளையும் அவரவர்கள் பூர்வ கர்மானுஸாரமாக ஸ்ருஷ்டிசெய்து, அவர்கள் அப்யுதயம், நிச்ரேயஸம் என்ற இருவித புருஷார்த்தங்களையும் அடைவதற்கு ஸாதனமாக அவ்வேதத்தையே போதித்தார். அப்படியே குரு சிஷ்யக்கிரமமாக உலகத்தில் வேதம் பிரசாரம் அடைந்து வருகிறது.

அவ்வேதத்தில் வேதாந்தம் என்று சொல்லப்படுகிற உபநிஷத் பாகங்களில், பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமான ஆத்மஞானம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அவ்வுபதேசங்களைக் குருமுகமாகக் கற்று அனுபவத்திற்குக் கொண்டுவந்து கிருதார்த்தர்களாகக் கூடியவர்கள் எக்காலத்திலும் சிலரே இருக்கமுடியும். ஆகையால் அவ்வாத்மஞான குரு பரம்பரை, ஸாமான்யமான வேதாத்யயன குரு பரம்பரையிலிருந்து வேறுபட்டிருப்பது

ஸஹஜமேயாகும். அந்த ஆத்மஞான குருக்களின் பரம்பரையை நாம் அனுஸந்தானம் பண்ணும்போது சுருக்கமாக,

सदाशिवसमारम्भां शंकराचार्यमध्यमाम् ।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥

ஸதாசிவஸமாரம்பாம் சங்கராசார்யமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

என்று சொல்கிறோம். விஷ்ணு பக்தியுள்ளவர்கள் "ஸதாசிவஸமாரம்பாம்" என்பதற்குப் பதிலாக "நாராயண ஸமாரம்பாம்" என்று சொல்வார்கள். அத்வைதிகளுக்கு ஸதாசிவர், நாராயணர் என்ற மூர்த்தி பேதத்தினால் ஸ்வரூப பேதமேற்படாதென்ற உணர்வு இருப்பதினால், இவ்விரண்டுவித பாடங்களும் அவர்களிடத்திலேயே காணப்படுகின்றன.

பகவான் ஒருவர்தான் உண்டு. அவர் ஞானஸ்வரூபி. அவருக்கு அக்ஞானமிருந்து வேறொரு குருவின் உபதேசத்தினால் ஞானம் ஏற்பட்டு அவ்வக்ஞானம் நிவர்த்தியாகி விட்டது என்று சொல்வதற்கில்லாமல் இருப்பதால் அவர் ஒருநாளும் சிஷ்யராக இருந்திருப்பதில்லை. அவர் என்றைக்கும் குருதான். அவரைத் தவிர குரு பரம்பரையில் வரும் யாவரும் ஒரு காலத்தில் சிஷ்யராகவிருந்து குருவின் உபதேசம்பெற்று ஞானியாகி மற்றவர்களுக்கும் உபதேசம் செய்யக்கூடிய குருவாக ஆனவர்கள். அப்படியே குரு பரம்பரை ஏற்பட்டு இப்பொழுது நமக்கு ஞானகுருவாக விளங்கும் ஆசார்யார்வரைக்கும் தொடர்ந்து வந்திருக்கிறது. குருவிற்கு குரு, அவருக்கு குரு, அவருக்கு குரு என்று இப்படியே கவனித்துக்கொண்டுபோனால், எவருக்கு குரு கிடையாதோ, எவருக்கு இன்னொருவரிடம் உபதேசம் பெற அவசியமில்லையோ, அவரே ஞானஸ்வரூபி என்று

நிறுத்திவிட வேண்டும். அவர்தான் ஈசுவரன் என்று, பகவான் பதஞ்ஜலி மஹரிஷி ஈசுவரனுக்கு லக்ஷணம் சொல்லும்போது "பூர்வேஷாமபி குரு:" என்று சொல்லியிருக்கிறார்.

இவ்விதம் பரமாத்மாவிடம் ஸாக்ஷாத்தாக ஆத்மஞானத்தையடைந்த பிரஹ்மதேவன் தன் புத்திரராகிய வஸிஷ்ட மஹர்ஷிக்கு இவ்வேதாந்த தத்வத்தை உபதேசித்தார். அவ்வஸிஷ்டரும் பிரஹ்மவித்தாக இருந்து தன் புத்திரனான சக்தி என்ற மஹர்ஷிக்கு உபதேசித்தார். அவர்மூலமாக அவர் புத்திரன் பராசர மஹர்ஷியும், பராசரரிடமிருந்து அவர் புத்திரன் கிருஷ்ணத்வைபாயனரென்றும் பாதராயணரென்றும் வேதவ்யாஸர் என்றும் சொல்லப்படுகிற மஹர்ஷியும், வியாஸரிடமிருந்து அவர் புத்திரனான சுகப்ரஹ்மம் என்று பிரஸித்திபெற்ற மஹர்ஷியும், கிரமமாக அடைந்தார்கள். இவ்விதமாக பிரஹ்மா முதற்கொண்டு சுகதேவர் வரையிலும் இந்த வேதாந்த-தத்வ ஞானம் பித்ரு புத்திரக் கிரமமாகவே ஏற்பட்டு வந்தது. இம்மஹர்ஷிகள் யாவரும் புராண பிரஸித்தர்களாக இருப்பதால் அவர்களுடைய மஹிமை யாவருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கக் கூடியதால் இப்பொழுது அவர்களைப்பற்றி பிரஸ்தாபிக்க அவசியமில்லை.

சுகப்பிரஹ்மத்திலிருந்து குரு பரம்பரை புத்திரக்ரமத்தில் வராமல் சிஷ்ய கிரமமாகவே வந்திருக்கிறது. சுகருக்கு புத்திர ஸந்தானமிருந்ததாக எந்தப் புராணத்திலும் தெரியவில்லை. அவரிடம் உபதேசம் பெற்று ஆத்ம ஸாக்ஷாத்காரமடைந்து கிருதார்த்தரானவர் கௌடபாதாசார்யார் என்பவர். அவர் அக்காலத்தில் மிகப் பிரஸித்தராயிருந்தபடியால் அவர் பெயரைச் சொல்வதுகூட அபசாரமென்று நினைத்து அவருடைய தேசத்தைக் குறிப்பிட்டே அவரைப் பற்றிப் பிரஸ்தாபித்து வந்திருக்கிறார்கள். அவர் கௌட தேசத்திய பிராஹ்மணர் என்று மாத்திரம் தெரிகிறது.

எவ்விதம் தென் தேசத்தில் வேதாந்த சாஸ்திரத்தில் பிரமாண பூதர்களான மஹான்களில் திரவிடாசார்யார் என்ருெருவர் பிரஸித்தியடைந்திருந்தாரோ, அப்படியே வடதேசத்தில் கௌடபாதர் இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர் ஸன்யாஸியென்பதில் ஆக்ஷேபணையில்லை. அவ்வாசிரமத்தில் அவருக்கு ஏற்பட்ட பெயர் யோகபட்டம் என்னவென்று தெரியாமலிருக்கையில் அவருடைய பூர்வாசிரமப் பெயர் என்ன என்பது நமக்குத்தெரிய முடியாமல் போனதில் ஆச்சரியம் இல்லை. இக்காலத்தில் சிலர், அவர் பூர்வாசிரமத்தில் பதஞ்ஜலியின் சிஷ்யராகவிருந்து பிரஹ்ம ரக்ஷஸ்ஸாக ஆனவர் என்று கல்பிக்கிருர்கள். இவ்வித கல்பனை ஒரு பெரிய அபசாரமேயாகும். இக் கௌட பாதாசார்யார் தான் மஹர்ஷிகளின் காலத்திற்குப் பிறகு வேதாந்த சாஸ்திரத்தை நன்கு தெளிவுபடுத்திக் கொடுத்திருக்கிருர். அவர் பல கிரந்தங்களை இயற்றியிருப்பதாகத் தெரிகிறது. அவைகளில் முக்கியமானது மாண்டூக்ய உபநிஷத்திற்கு அவர் செய்திருக்கும் காரிகைகளேயாகும். அவ்வுபநிஷத்திற்கு வியாக்யான ரூபமாக ஆகமப் பிரகரணம் என்றும், ஜகத் மித்யையென்று காட்டக்கூடிய வைதத்யப் பிரகரணம் என்றும், பிரஹ்மத்திற்கு வேருக ஒரு பதார்த்தமும் கிடையாதென்றி அத்வைத ஸித்தாந்தத்தைத் தெளிவுபடுத்தி அத்வைத பிரகரணம் என்றும், இந்த ஸித்தாந்தத்திற்கு விருத்தமான கக்ஷிகள் யாவும் யுக்திக்குப் பொருந்தக்கூடியதில்லை என்று கண்டித்து அலாத சாந்திப் பிரகரணம் என்றும், நான்கு பிரகரணங்களாக வகுத்துக் காரிகைகளை ரசனை செய்திருக்கிருர். இக் காரிகைகளிடத்தில் முன்னோர்களுக்கு எவ்வளவு கௌரவ புத்தியிருந்து வந்ததென்பதற்கு, ஆகமப் பிரகரணத்திலுள்ள சுலோகங்களை மாண்டூக்ய உபநிஷத் மூலத்துடனேயே அத்யயனம் செய்து வந்ததால் அவைகளும் உபநிஷத் வாக்கியங்கள்தான் என்று சிலர் வியவஹரிப்பதுடன், அத்வைதத்தைக் கண்டிக்கும் மத்வாசார்யார்

முதலானோர், அவ்வார்த்தைகளும் சுருதி வாக்கியமென்று நினைத்து, வேறுவிதமாக அர்த்தங்கள் கல்பிக்கத் தலைப் பட்டிருக்கிறார்கள், என்பதே அத்தாக்ஷியாகும்.

இம் மஹானிடம் சிஷ்யராயிருந்து ஆத்ம ஸாக்ஷாத் காரம் அடைந்து எப்பொழுதும் யோக நிஷ்டையிலேயே இருந்துவந்தவர் கோவிந்த பகவத்பாதர் என்ற பெரியார். இவர் பதஞ்ஜலி பகவானின் அவதாரம் என்று சொல்வார்கள். பதஞ்ஜலி ஆதிசேஷனின் அவதாரம் என்று புராணங்களில் பிரஸித்தியிருப்பதால் இவரையும் ஆதிசேஷனுடைய அவதாரம் என்றும் சொல்லுவதுண்டு. மனுஷ்யர்களின் த்ரிகரணங்களாகிய மனஸ், வாக், காயம் என்ற மூன்று கருவிகளும் பரிசுத்தமாயிருந்தால்தான், பகவானைக் கிரமப் படி ஆராதித்து சிரேயஸ்ஸை ஸம்பாதிக்க முடியுமென்று கருதி மிகக் கருணையுடன் மனஸ் சுத்திக்காக யோக ஸூத்திரங்களையும், வாக்கின் சுத்திக்காக வியாகரண மஹா பாஷ்யத்தையும், சரீர சுத்திக்காக வைத்திய சாஸ்திரத்தையும், பதஞ்ஜலி பகவான் இயற்றினாரென்று சொல்லுவதுண்டு. அதை யனுஸரித்து ஸ்ரீ சங்கர விஜய காவ்யத்தில் கோவிந்தபகவத்பாதரை சங்கரபகவத்பாதர் ஸ்தோத்ரம் செய்யும்போது ஆதிசேஷனாகவும் பதஞ்ஜலியாகவுமே பாவித்தாரென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவர் பிரஹ்மவித், யோகநிஷ்டர் என்று தெரிகிறதே தவிர, இவர் எந்த தேசத்தவர், இவருக்கு பூர்வாசிரமப் பெயர் என்ன, முதலான விஷயங்கள் யாதொன்றும் தெரியவில்லை. அப்படியிருந்தும் கல்பனையில் ருசியுள்ள சிலர் இவர் பூர்வாசிரமத்தில் ஜாதிக்கு ஒன்றாக நான்கு ஸ்திரீகளைக் கல்யாணம் செய்துகொண்டார் என்றும், மற்றும் அபசாரத்திற்கு ஆஸ்பதமான பலவித கல்பனைகளையும் செய்கிறார்கள். அக் கல்பனைகளுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாதென்பதுடன் அவைகள் எவ்விதத்திலும் கோவிந்த பகவத்பாதரின் பெருமைக்குப் பொருந்தக் கூடியவையல்ல வென்பதை

ஸாமான்ய மனிதர்கள்கூட நன்கு உணர்வார்கள். இம் மஹானுக்குத்தான் நம் பரமாசார்யரான சங்கரபகவத் பாதர் சிஷ்யராகி அத்வைத தத்வ பிரசாரம் செய்து உலகத்தை உஜ்ஜீவிக்கும்படி செய்தார்.

---

## அத்யாயம் 2

### ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் அவதாரம்

பகவான் கீதையில், "எப்பொழுதெல்லாம் தர்மத் திற்கு வாட்டம் ஏற்பட்டு, அதர்மம் தலைதூக்குகிறதோ, அப்பொழுதெல்லாம் நான் அவதரிக்கிறேன்" என்று கொடுத்த வாக்கைப் பரிபாலித்துக்கொண்டு, இப்புவியில் அவசியம் ஏற்படும்போது அம்சத்துடன் அவதரிக்கிறரென் பது யாவரும் அறிந்த விஷயம். பகவானுடைய அவ தாரத்தின் முக்கிய பிரயோஜனம், தர்ம ஸம்ஸ்தாபனமாக இருந்தபோதிலும் அதற்கு அங்கமாக தர்மத்திற்கு கெடுதல் செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டியதும், தர்மானுஷ் டானம் செய்துகொண்டு துஷ்டர்களின் கொடுமையினால் பீடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற ஸாதுக்களை ரக்ஷிக்க வேண்டியதும் அவசியமாக ஏற்படுகிறது. அதற்கு வேண் டிய லௌகிக ஸ்தானம், சக்தி, செல்வாக்கு, அதிகாரம் முதலானவையெல்லாம் க்ஷத்திரியர்களுக்கே உரியதென்று, பகவான் க்ஷத்திரியகுலத்தில் ராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்து, சிஷ்டபரிபாலனம் துஷ்டநிக்கிரஹம் இவை களைச்செய்து, தானும் விதிவத்தாகத் தர்மத்தை அனுஷ் டித்துக் காட்டி, தர்மஸம்ஸ்தாபனம் செய்தார். ஆனாலும் அவ்வவதாரங்களில் பிரவிருத்தி தர்ம மார்க்கத்தையே பிரதானமாக அனுஷ்டித்துக் காட்டவேண்டியிருந்த தாலும், க்ஷத்திரிய ஜாதியில் அவதரித்தபடியால் ஸன்யாஸ

தர்மங்களையாவது, ஸன்யாஸம்பெற்று அனுஷ்டிக்கவேண்டியதான சிரவணம், மனனம், முதலியவைகளையாவது, அவைகளால் ஏற்படக்கூடிய ஞானம், ஆத்மநிஷ்டை இவைகளின் ஸ்வரூபத்தையாவது, எடுத்துச்சொல்லவோ, அனுஷ்டித்துக்காட்டவோ இடமில்லாமல் போய்விட்டது. இக்குறையை நிவர்த்தித்து ஜனங்களுக்கு ஞானமார்க்கத்தை நன்கு உபதேசிக்கக் கருதியே, பரமேசுவரன் பிராஹ்மண ஜாதியில் ஸ்ரீ சங்கரபகவத்பாத ரூபமாக அவதரித்து, தானே பிரஹ்மசர்யத்திலிருந்து ஸன்யாஸம்பூண்டு, வேதாந்த தத்வத்தை ஜனங்கள் ஸுலபமாக அறிந்து கிருதார்த்தர்களாகும்படி பிரஸ்தானத்ரய பாஷ்யங்களையும், மற்றும் பலவித கிரந்தங்களையும் இயற்றினரென்று நன்கு புலப்படுகிறது.

இப்பெரிய கார்யத்தை நிறைவேற்ற அவதரிக்க வேண்டுமென்ற ஸங்கல்பம் பகவானுக்கு ஏற்பட்டாலும், பகவானுடைய அவதாரத்திற்கு யோக்கியமான நல்ல உத்கிருஷ்டமான குலம் வேண்டுமேயென்று யோசிக்கும் ஸமயத்தில், கேரள தேசத்தில் காலடி என்கிற அக்ரஹாரத்தில் வித்யாதிராஜர் என்று அன்வர்த்தமான பெயரையுடைய ஒரு மஹானுக்கு அவருடைய யோக்கியதைக்குத் தக்க ஒரு குமாரர் சிவகுரு என்ற நாமதேயத்துடன் இருந்தார். அவரே தனக்கு அவதாரம் செய்யும்போது பிதாவாக ஏற்படப்போகிறாரென்று நினைத்தே, சிவகுரு என்று அவருக்குப் பெயரிடும்படி வித்யாதிராஜரின் மனதில் பகவான் விருத்தியை உண்டுபண்ணினரென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அந்த சிவகுரு என்ற மஹானுக்கு லௌகிகமாயும் வைதிகமாயும் ஸகலவிதமான ஸம்பத்துக்களும் இருந்தும் புத்திர ஸம்பத்து இல்லையேயென்று அவர் வருந்தி, ஸமீபத்திலுள்ள விருஷபாசலேசுவரர் ஸன்னிதிக்கு தன் தர்மபத்னியுடன் போய் தபஸ் செய்தார். அவர்களுடைய விசேஷமான பக்தியையும் சிரத்தையையும் கண்டு,

ஈசுவரன் இவர்களே தனக்குப் பெற்றோர்களாகவிருக்கத் தகுந்தவர்களென்று தீர்மானித்து, அவர்களுக்கு ஸ்வப்னத்தில் தர்சனம் கொடுத்து அனுக்ரஹித்தார். அவர்களுக்குப் புத்திரன் ஏற்படுவானென்றும், ஆனால் அவன் மூடனாக தீர்க்காயுஸ்ஸுடன் இருக்கவேண்டுமா, ஸர்வக்ஞனாக இருக்கவேண்டுமா, என்பதை அவர்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்றும் உத்திரவிட்டார். இதைக் கேட்ட அந்த ஸாத்விக தம்பதிகள் மூட புத்திரனாயிருந்தால் எப்பொழுதும் துக்கத்திற்கே காரணமாவானாகையால் ஸர்வக்ஞபுத்திரனே வேண்டுமென்று இருவரும் பிரார்த்திக்க அவ்விதமே ஏற்படுமென்று சொல்லிப் பகவான் மறைந்தார். பிறகு, இவர்களுக்கு ஏற்பட்ட விசேஷ அனுக்ரஹத்தை நினைத்து நினைத்து முன்னைவிடப் பகவானிடத்தில் அதிக பக்திசிரத்தையுடன் தங்கள் நித்திய கர்மாக்களையும் பகவதாராதனையையும் நடத்திவந்தார்கள். ஆர்யாம்பாள் என்ற மாதுசிரோமணி கருத்தரித்து நாளுக்குநாள் மிகச் சோபையுடன் விளங்கிவந்தாள். பகவானே அவளுடைய கர்ப்பத்தில் வாஸம் செய்யும்போது அவளுடைய சோபைக்கு நிகரேது. கிரமமாக கர்ப்பம் மனுஷ்ய ரீதியை அனுஸரித்து விருத்தி அடைந்துவந்து, கடைசியில் வைசாக மாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமி திதியும் திருவாதிரை நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் சுப முகூர்த்தத்தில் பகவான் இப்புவியில் அவதரித்தார்.

தங்களுக்கு வயதான பிற்பாடு ஈசுவரானுக்ரஹத்தினால் இக்குழந்தை ஏற்பட்ட ஸந்தோஷத்தில் சாஸ்திர ரீதியாகச் செய்யவேண்டிய ஜாதகர்ம தானம் முதலான ஸகல கார்யங்களையும் யதோக்தமாகச் சிறப்பாக சிவகுரு நடத்தினார். குழந்தை வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து ஒரு வயதானவுடனேயே பேசுவதற்கு ஆரம்பித்துவிட்டது. மூன்றாவது வயதில் சௌளமும் கிரமப்படி நடந்தது. வேதத்தைத் தவிர இதர ஸகல வித்யைகளையும் கொஞ்ச

மேனும் சிரமமில்லாமல் அந்த பாலகர் கற்றுக்கொண்டு விட்டார். ஸகல வித்யைகளுக்கும் நிதியாயிருக்கிற தக்ஷிணாமூர்த்தி இந்த பாலனாக அவதரித்திருக்கிற ஸமயத்தில், புதிதாகக் கற்றுக்கொண்டுதானா இவருக்கு ஞானம் ஏற்படவேண்டும்? இருந்தாலும் உலக ஸம்பிரதாயத்தை யனுஸரித்துக் கற்றுக்கொண்டார் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இப்பாலகருக்கு புத்தி வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதால் சீக்கிரமே உபநயனம் செய்வித்து வேத வேதாங்கங்களை அப்யஸிக்கும்படி செய்யவேண்டுமென்று சிவ குருவுக்கு ஆவல் மிகுதியாக இருந்தும், தன் மனோரதத்தைத் தானேயிருந்து பூர்த்தி செய்வதற்கு இடமன்னியில் காலகதியால் அவர் விண்ணுலகம் போய்விடும்படி ஏற்பட்டது. ஆகையால் இப்பாலகனுக்கு ஐந்தாவது வயது வந்தவுடன் தாயார் ஆர்யாம்பிகையே பந்துக்களின் ஸஹாயத்தை வைத்துக்கொண்டு இவருக்கு உபநயனம் செய்துவைத்தாள். உடனே குருகுலவாஸம் செய்து ஸ்வல்ப காலத்திற்குள் நான்கு வேதங்களையும், ஆறு வேதாங்கங்களான சிக்ஷை, நிருக்தம், வியாகரணம், சந்தஸ், ஜ்யோதிஷம், கல்பம் இவைகளையும், மற்றும் இதிஹாஸ புராணாதிகள், தர்க்கம், மீமாம்ஸை, யோகம் முதலான ஸகல வித்யைகளையும் அதி ஸுலபமாக கிரஹித்துக்கொண்டு, குருவின் அனுக்ரஹம் பெற்று, கிருஹத்திற்குத் திரும்பி வந்து, தாயாரை கிரமப்படி சுசுரூஷை செய்து ஸந்தோஷிப்பித்துக்கொண்டு வந்தார்.

குருகுல வாஸம் செய்யும் காலத்தில் பிக்ஷாடனம் செய்துவருகையில், ஒரு கிருஹத்திலுள்ள பெண்மணி பிக்ஷை யிடுவதற்குக்கூட ஸௌகர்யமில்லாமல் தன் கையில் அகப்பட்ட நெல்லிக்கனியை மாத்திரம் மிகவும் சிரத்தையுடன் அளிக்க, அதைக்கண்டு கருணை கூர்ந்து இப்பாலகர், மஹாலக்ஷ்மியை ஸ்துதித்து, அவள் மூலமாய் ஸ்வர்ண நெல்லிக்கனியாய் வருஷிக்கும்படி செய்தார். ஒரு ஸமயம் தன் தாயார் நதிக்கு ஸ்நானத்திற்குப் போய்விட்டுத் திரும்புகையில் சிரமப்பட்டதை யறிந்து, தன் மஹிமை

யினால் அந்த நதியையே தன் கிருஹத்திற்கு ஸமீபத்தில் பிரவஹிக்கும்படி செய்தார். இவ்விதம் பல அமானுஷ மான லீலைகளைச் செய்துவந்தும் அவர் அவதார புருஷர் என்பதை உணராமல் புத்திர வாத்ஸல்யத்தினால் அவருக்கு சீக்கிரமாகவே விவாஹம் செய்துவைக்க வேண்டுமென்றே தாயாரின் மனோபாவம் இருந்து வந்தது. இவருக்கோ அவ்வித உத்தேசம் கொஞ்சமேனும் இல்லாமல் ஸன்யாஸம் வாங்கிக்கொள்வதிலேயே இருந்தது.

இப்படியிருக்க ஒரு நாள் நதியில் ஸ்நானத்திற்கு இறங்கின இவருடைய காலை ஒரு முதலை கவ்விக்கொள்ள, தான் இனி ஜீவிக்க முடியாது, ஒருக்கால் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டால் வேறு ஜன்மமாகிவிடுமென்ற நியாயத்தினால் பிழைக்கலாமே தவிர வேறு வழியில்லையென்று சொல்ல, எப்படியாவது பிழைத்தால் போதுமென்ற எண்ணத்துடன் தாயார் அனுமதிகொடுக்க, பிரவாஹத்திலிருந்தபடியே ஆதுர ஸன்யாஸவிதானப்படி ப்ரைஷோச்சாரணம் செய்தார். உடனே முதலையும் காலை விட்டுவிட்டது. இவர் கரையேறி வந்து தாயாரை நமஸ்கரித்துவிட்டு, பந்துக்களிடம் தன் தாயாரை ஒப்பித்துவிட்டு, அவள் ஸ்மரிக்கும்போது வருவதாக அவளுக்கு வாக்குக் கொடுத்து ஸமாதானப்படுத்திவிட்டு, கிரமப்படி மஹாவாக்யாதி உபதேசங்களை உத்தேசித்துத் தக்க குருவைத் தேடிக்கொண்டு, நர்மதாதீரம் வந்து ஸ்ரீ கோவிந்த ப்கவத்பாதரை தர்சித்து, அவரிடமிருந்து உபதேசம் பெற்று, அங்கே நர்மதா தீரத்திலேயே கொஞ்ச நாள் தங்கிவிட்டு, குருவின் ஆக்ஞை ப்ரகாரம் கங்கா நதி தீரத்தில் ஸஞ்சாரம் செய்துகொண்டு காசி க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார். காசியில் இருக்கும் ஸமயம் பிரதானமான உபநிஷத்துக்களுக்கும், பகவத் கீதைக்கும், பிரஹ்ம ஸூத்ரங்களுக்கும், ஆசார்யர் பாஷ்யங்கள் எழுதி பிரவசனம் செய்து வந்தார்.



ஸ்ரீ சங்கரபகவத்பாதர்

## அத்யாயம் 3

### ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் சிஷ்யர்கள்.

காசியில் தங்கியிருந்த ஸமயம் சோழ நாட்டிலிருந்து தேடிவந்த வைராக்கியசாலியான ஒருவருக்கு ஸன்யாஸம் கொடுத்து ஸனந்தனர் என்ற பெயருடன் தனக்கு சிஷ்யராகச் சேர்த்துக்கொண்டார். பின்னுல் ஒரு ஸமயம் நதிக்கு அக்கரையிலுள்ள ஸனந்தனரை ஆசார்யாள் கூப்பிட்ட போது, எல்லையில்லாத ஸம்ஸாரக் கடலேயே தாண்டி வைக்கக்கூடிய குருபாதமிருக்க இந்த நதியைத்தாண்ட முடியாதாவென்ற தீர்மானத்துடன் ஜலத்தில் கால் வைக்க, அந்தந்த இடங்களில் கங்கா தேவி தாமரைப் புஷ்பங்களை ஆவிர்பவிக்கச் செய்து இவர் காலேத்தாங்கும்படி செய்த தால் ஒருவித சிரமமுமில்லாமல் ஆசார்யார் ஸந்நிதியில் வந்து நின்றதைப் பார்த்து, எல்லோரும் வியப்பு அடைந்த ஸமயத்தில், இவருடைய குருபக்தியைக் கண்டு மகிழ்ந்து இவருக்கு அன்று முதல் பத்மபாதர் என்ற நாமத்தை ஆசார்யார் சூட்டினுர்.

ஒரு ஸமயம் ஆசார்யாள் மத்தியானம் ஸ்நாநம் செய்து விட்டு நதியிலிருந்து திரும்பும்போது எதிரில் ஒரு சண்டாளன் தோன்ற, அவனை விலகும்படி ஆசார்யார் சொன்னவுடன் "யாரை விலகச்சொல்கிறீர்? சரீரத்தையா, ஆத்மாவையா?" என்று அந்த சண்டாளன் கேட்டதும், அவனும் ஞானியென்று உணர்ந்துகொண்டு, "ஜாக்ரத், ஸ்வப்நம், ஸுஷுப்தி என்கிற நிலைகளில் ஏகரூபமாயும், பிரஹ்மா முதல் எறும்பு வரை ஸகல பிராணி வர்க்கங் களிலும் ஊடுருவியிருந்து வருபவராயுமிருக்கும் பிரஹ்ம தத்வத்தைத் தானென்று தெரிந்து கொண்டவர் சண்டாள னுயினும் பிராஹ்மணராயினும் பூஜிக்கத்தக்கவரென்பதே என் அபிப்பிராயம்" என்று ஆசார்யார் ஆத்ம தத்வத்தை மனீஷாபஞ்சகம் என்ற சுலோகங்களால் வெளியிட, அச்

சண்டாள ரூபம் மறைந்து சந்திரசூடனான விசுவேசுவரர் ஆசார்யாருக்குத் தர்சனம் அளித்து, இந்த ஆத்ம தத்வ ஞானத்தை உலகத்தில் பிரசாரம் செய்யும்படி ஆக்ஞை யிட்டு அனுக்ரஹித்து மறைந்தார்.

மற்றொரு ஸமயம் ஆசார்யார் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒரு கிழவர் ஸபைக்கு வந்து பல விதமான கேள்விகள் கேட்டு இருவருக்குள்ளும் சாஸ்திர வியவஹாரம் முடிவுடையாமலே இருந்துவருவதைப் பார்த்து, ஆச்சர்யமடைந்த பத்மபாதர் தன் பக்திச் சிறப்பினால் உற்று நோக்குங்கால் அக் கிழவர் வியாஸ பகவானென்று உணர்ந்து தெரிவிக்க, உடனே அவரும் தன் வாஸ்தவ ஸ்வரூபத்துடன் தர்சனம் கொடுத்து, ஆசார்யாருடைய பாஷ்யத்தை மெச்சினதுடன் அவருக்கு இன்னும் பதினாறு வருஷம் ஆயுள் கொடுத்து வேதாந்த தத்வத்தை நாடெங்கும் பிரசாரம் செய்யும்படி சொல்லி விட்டு மறைந்துவிட்டார்.

இவ்விதம் பரமேசுவரரும் வியாஸரும் தன் குருநாதர் ஏற்கனவே ஆக்ஞையிட்டதை யனுஸரித்து, இவரால் செய்யவேண்டிய கார்யத்தை ஞாபகப்படுத்தினபடியால், அத்வைத ஸித்தாந்தம் பிரசாரமடைய வேண்டுமானால் வெறும் கர்மாவினாலேயே மோக்ஷத்தையடைந்துவிடலா மென்று மீமாம்ஸகர்கள் சொல்லி வரும் கக்ஷியை நிராகரணம் செய்ய வேண்டியது முதலில் மிக அவசிய மென்று தீர்மானித்துக்கொண்டார். வேதப்பிராமாண்யத்தை நன்கு ஸ்தாபித்து கர்மாக்களின் பெருமையை வற்புறுத்தியவரும் முருகக்கடவுளின் அவதாரமானவரு மான குமாரிலபட்டரையே கண்டு வாதத்தில் ஜயித்து அத்வைத ஸித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளுமாறு செய்து விடவேண்டுமென்று நினைத்து ஆசார்யார் காசி க்ஷேத்திரத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் அவ்விதம்

போய்க்கொண்டிருக்கையில், அந்த குமாரிலபட்டர் பிரயாகையில், தான் பால்யத்தில் பௌத்த மதத்தை நன்கு கற்றுக்கொள்ளவேண்டியதற்காக பௌத்த வேஷம் போட்டுக் கற்றுக்கொண்டு பிறகு அப் பௌத்த குருவையே நிந்திக்கும்படி ஏற்பட்டதால் குருத்ரோஹ பிராயச்சித்த மாக, உமியைக்குவித்து அதில் தீயிட்டுப் படுத்துக்கொண்டு பிராண த்யாகம் செய்யத் தீர்மானித்திருக்கிறார் என்ற விஷயம் தெரிய வந்தது. உடனே அதிவேகமாய் பிரயாகை சென்று அவரை இக் கடுமையான கார்யத்தை நிறுத்தி எழுந்திருந்து வந்து தன்னுடன் வாதிக்கவேண்டுமென்று பல முறை கேட்டும் அவர் இசையவில்லை. தனக்கு அந்த்ய காலத்தில் ஆசார்யாரின் தர்சனம் கிடைத்ததில் மிகவும் ஸந்தோஷத்தையடைந்தவராய், வாத விஷயத்தில் தனக்கு எவ்விதத்திலும் ஸமானராயிருக்கிற தன் சிஷ்யரான விசுவரூபரென்ற மண்டனமிச்ரரை ஜயித்தால் உலகமே ஜயிக்கப்பட்டதாகுமென்று ஸமாதானம் சொல்லிவிட்டு ஆசார்யார் முன்னிலையில் பரமபதமடைந்தார். அதன் பிறகு அவருடைய வார்த்தையை அனுஸரித்து, மண்டன மிச்ரர் ஊராகிய மாஹிஷ்மதீ நகரம் போய், அவருடைய க்ருஹத்தை தேடிக் கண்டுபிடித்தும் வாசற் கதவு தாப்பா ளிட்டிருந்தபடியால் யோக சக்தியினால் ஆகாசமார்க்கமாய் அவ்வீட்டு நடு முற்றத்தில் இறங்கினார். அப்பொழுது மண்டனமிச்ரர் சிராத்தத்திற்கு ஆரம்பிக்கும் ஸமயம். ஸந்யாஸிகளை கர்மாக்களை விட்டுவிட்ட ப்ரஷ்டர்கள் என்று நினைக்கும் மனப்பான்மையுள்ள அவருக்கு சிராத்த காலத்தில் திடீரென்று அமார்க்கமாய் வீட்டில் நுழைந்த ஸன்யாஸியைக் கண்டு கோபம் வருவது ஸஹஜம்தானே? உடனே இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட, அங்கு சிராத்தத்திற்காக வரிக்கப்பட்டு வந்திருக்கும் பெரியோர் களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு வியவஹாரத்தை நிறுத்திக்கொண்டு, மண்டனமிச்ரர் இவரை பிக்ஷை செய்யும்படி கேட்க, இவர் தான் அன்ன பிக்ஷைக்காக

வரவில்லை, வாத பிக்ஷைக்காகவே வந்திருப்பதாகச் சொன்ன உடன், அவ்விதமே செய்வதாகச் சொல்லி, முதலில் சிராத்த கர்மாவைச் செய்து முடித்தார். மறுநாள் மண்டன மிச்ரரின் பார்யையும் ஸரஸ்வதீ தேவியின் அவதாரமுமான உபயபாரதீ யென்றும் ஸரஸவாணீ என்றும் நாமம் பூண்ட பதிவிரதாசிரோமணியான மாதையே மத்யஸ்தமாகவைத்து வாதிக்கத் தொடங்கினார்கள். அவள் தனக்கு வீட்டுக் கார்யங்கள் பல விருப்பதால் இருவர் கழுத்திலும் மாலைகள் தரிக்கும்படி செய்து, இவ்விரண்டு மாலைகளில் எவர் கழுத்திலுள்ள மாலை முதலில் வாடுகிறதோ அவரே அபஜய மடைந்தவரென்று தீர்மானித்துக் கொள்ளலாமென்று சொல்லிவிட்டாள். பிற்பாடு இவர்களில் மண்டன மிச்ரர் கர்மாவின் பெருமையைப்பற்றியும் ஆசார்யார் ஞானத்தின் பெருமையைப் பற்றியும் எடுத்துச் சொன்னதுடன், மற்ற வரின் கொள்கை சுருதி, ஸ்மிருதி, யுக்தி, அனுபவம், இவை களுக்கு மாருக இருக்கிறதென்று பலப் பலவாறு பல நாட்கள் வாதித்து வருகையில், மண்டன மிச்ரர் கழுத்தி லுள்ள மாலையே வாடுவதைக்கண்ட உபயபாரதீ, பிரதி தினமும் ஆசார்யாரை பிக்ஷைக்கும் மண்டன மிசிரரை போஜனத்திற்கும் அழைக்கும் வழக்கத்திற்கு மாறுதலாக, அன்று இருவரையும் பிக்ஷைக்கென்றே அழைத்தாள். உடனே தனக்கு அபஜயமேற்பட்டதை உணர்ந்த மண்டன மிச்ரர் தன்னுடைய கர்ம ஸித்தாந்த பிரவர்த்தகராயிருந்த ஜைமினி மஹர்ஷியையே வரவழைத்து, அவர் மூலமாயும் வைதிக மதத்தின் பரம தாத்பர்யம் என்னவென்று நன்கு தெரிந்துகொண்டார். வாதம் ஆரம்பிக்கும் முன்னமேயே, தோற்றவர் ஜயித்தவருடைய ஆசிரமத்தைக் கைகொள்ள வேண்டுமென்று பிரதிக்ஞை செய்திருந்தபடியால், மண்டன மிச்ரர் ஸன்யாஸத்திற்கு ஸித்தமாக வேண்டியதருணத்தில், உபயபாரதீ குறுக்கிட்டு தன்னையும் ஜயித்தாலொழிய மண்டன மிசிரர் பூர்ணமாக ஜயிக்கப்பட்டவராக மாட்டார் என்று சொல்லி, ஆசார்யாருடன் வாதிக்க

ஆரம்பித்தாள். அவரை எந்த சாஸ்திரத்திலும் ஜயிக்க முடியாததைக் கண்டு, அவர் பிரஹ்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸம் பூண்டவராதலால் அவரை ஜயிக்க இதுதான் வழியென்று தீர்மானித்து, அவரை காம சாஸ்திரத்தில் நுட்பமான விஷயங்களைப் பற்றி கேட்கவாரம்பித்தாள். அவர் உடனே ஒரு மாசம் தவணை கேட்டுக்கொண்டு, போகும் மார்க்கத்தில் இறந்திருந்த அமருகன் என்ற ராஜனின் உடலில் யோக சக்தியினால் பிரவேசித்துக் கொண்டார். தன் உடலைத் தன் சிஷ்யர்களின் பாதுகாப்பில் வைத்துவிட்டார். அமருகன் சரீரம் உயிருடனிருப்பதாகத் துலங்கவே அவனைச் சேர்ந்தவர்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் திரும்ப ராஜதானிக்கு அவனை அழைத்துச்சென்றார்கள். அங்கே ராஜ்யபாரம் நடக்கும் ரீதியையும் அரண்மனையில் நடந்துகொள்ளும் மாதிரியையும் நன்கு கவனித்த மந்திரிகளுக்கும் ராஜ ஸ்திரீகளுக்கும் 'இவர்பழய அரசனில்லை, ஏதோ மஹான்' என்ற விவரம் தெரிந்தபடியால், 'இம் மஹான் தன் சொந்த சரீரத்தை எங்கேயாவது வைத்திருப்பார், அதை எடுத்துச் சுட்டுவிட்டால் திரும்பிப்போக வழியில்லாமல் இம் மஹான் இங்கேயே தங்கி நமக்கு ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பார்", என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. உடனே தூதர்களை அனுப்பித் தேடியதில் அரண்யப் பிரதேசத்தில் சிஷ்யர்களால் காத்துவரப்படுகிற ஒரு சரீரம் இருக்கிறதென்று தெரிந்து அதைப் பலாத்காரமாக எடுத்துச் சிதையில் வைத்துத் தீ மூட்டினார்கள். இதற்குள் பத்மபாதரால் ஞாபகப்படுத்தப்பட்ட ஆசார்யார் அமருகன் சரீரத்தை விட்டு இச் சரீரத்தில் மறுபடியும் புகுந்து லக்ஷ்மீநரஸிம்ஹரை ஸ்துதித்துக் கொண்டு எழுந்துவிட்டார். பிற்பாடு மறுபடியும் மாஹிஷ்மதீ நகரம்போய்ச் சேர்ந்தார். அவரைப் பார்த்தவுடனேயே தான் ஜயிக்கப்பட்டுவிட்டதாக உபயபாரதீ ஒப்புக்கொண்டு தன் நிஜஸ்வரூபமான தேவதாரூபத்தை

அடைந்து பிரஹ்மலோகத்திற்குப் புறப்பட்டாள். அவளை உடனே ஆசார்யார் வனதுர்க்கா மந்திரத்தினால் கட்டுப் படுத்தி இப் பாரத பூமியில் தான் கோரும் இடத்தில் அவள் ஸாந்நித்தியம் அடைந்து ஜனங்களுக்கு அனுக்ர ஹிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க அவளும் அப்படியே யாகட்டுமென்று வாக்களித்துவிட்டு மறைந்தாள். அதன் பிறகு கிரமப்படி மண்டனமிசிரருக்கு ஸன்யாஸம் கொடுத்து ஸுரேசுவரர் என்ற யோக பட்டமளித்து அவரையும் தன் சிஷ்யராக ஆசார்யார் சேர்த்துக் கொண்டார்.

அப்படியே மேற்குத்திக்கு வழியாகத் திக்விஜயம் செய்து வருகையில், ஜடமாகத் தோன்றின ஒரு பையனை எடுத்துக்கொண்டு அவன் பெற்றோர்கள் ஆசார்யாரிடம் வந்து சேர்ந்ததும், அந்தப் பையனைப் பார்த்து "நீ யார்" என்று ஆசார்யர் வினவ, அவன் "நானே நித்ய ஞான ஸ்வரூபியான ஆத்மா" என்று பன்னிரண்டு சுலோகங் களால் ஆத்ம தத்வத்தை வெகு தெளிவாக எடுத்துச் சொன்னபோது, இவன் பெற்றோர்களிடம் இருப்பதில் பிரயோஜனமில்லை, தன்னுடன் தான் இருக்கவேண்டியவர் என்று ஆசார்யர் சொல்லி, அவனுக்கு ஸன்யாஸம் கொடுத்து, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வேதாந்த ஸாரத்தை எடுத்துச் சொன்னபடியால் அவனுக்கு ஹஸ்தாமலகர் என்ற யோகபட்டத்தையே அனுக்ரஹித்து சிஷ்யகோடியில் சேர்த்துக்கொண்டார்.

மற்றொரு சிஷ்யரான கிரியென்பவர் ஆசார்யருடைய சுசுரூஷையிலேயே ஈடுபட்டவராகவும் சாஸ்திரார்த்த விசாரத்தில் யோக்கியதையில்லாதவராகவும் தோன்றின படியால் அவரிடம் மற்ற சிஷ்யர்களுக்கு அலக்ஷிய புத்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்துகொண்ட ஆசார்யர் அவருக்கு ஸகல வித்யைகளும் மனதில் உதிக்கவேண்டு

மென்று ஸங்கல்பித்தவுடன் அவர் உடனே ஆசார்யரிடம் விரைந்து வந்து தன்னுடைய வந்தனத்தையும் ஆத்ம தத்வ ஞானத்தையும் வெகு அழகான சுலோகங்களால் தெரிவித்தார். அந்த சுலோகங்கள் தோடகம் என்ற விருத்தத்தில் அமைந்திருந்தபடியால் அவருக்கு அன்றையமுதல் தோடகாசார்யார் என்ற பிரஸித்தி ஏற்பட்டது.

இவ்விதம் ஏற்பட்ட சிஷ்யர்களுடன் ஆசார்யர் யாத்திரை செய்து வரும் ஸமயம் துங்கா நதிக்கரையில் ஓரிடத்தில் வெயிலில் சிரமப்படும் ஒரு கர்ப்பிணியான தவளைக்கு ஒரு ஸர்ப்பம் படமெடுத்து நிழல்கொடுத்து வந்ததைக் கண்ட ஆசார்யர் இதுவே ஸரஸ்வதீ தேவியைப் பிரதிஷ்டை செய்ய உத்தமமான பிரதேசமென்று கருதி அந் நதிக்கரையிலேயே ஒரு பாறையில் ஸ்ரீ சக்ரம் வரைந்து அதில் அம்பிகையை ஸ்ரீசாரதா என்ற திருநாமத்துடன் பிரதிஷ்டை செய்தார். ஆசார்யரின் வேண்டுதலின்படி முன்னால் கொடுத்த வாக்கையும் அனுஸரித்து அந்த அம்பிகை இன்னமும் அவ்விடத்தில் பிரஸன்னமாய்ப் பரிபூர்ண கலையுடன் பிரகாசித்துக்கொண்டு, ஸகல ஜனங்களுக்கும் அப்யுதய நிச்சிரேயஸங்களை அளித்து அனுக்ரஹம் செய்து வருகிறாள். அங்கே இருந்து அத்வைத ஸித்தாந்தப் பிரசாரம் செய்யும்படி ஸுரேசுவரருக்கு ஆசார்யர் ஆக்ஞையிட்டார். இதுவே சிருங்கேரி சாரதா பீடம் என்பதாகும்.

# அத்யாயம் 4

## ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் திக்விஜயம்

பிறகு பிற மதங்களைக் கண்டித்து அத்வைத ஸித்தாந்தம்தான் உபநிஷத்துக்களில் பிரதிபாதிக்கப்படுகிற தென்பதை ஸ்தாபிப்பதற்காக, இப் பாரத பூமியில் வடக்கே திபேத் முதல் தெற்கே கன்யாகுமாரி வரையிலும் கிழக்கே அஸ்ஸாம் என்று சொல்லப்படுகிற காமரூபம் முதல் மேற்கே பால்ஹீகம் வரையிலும் பாதசாரியாகவே சிஷ்யர்களுடன் ஆசார்யர் ஸஞ்சாரம் செய்து, அங்குள்ள துர்மதவாதிகளை அவரவர்கள் பிரமாணமாக வைத்துக் கொண்டிருக்கிற கிரந்தங்களையே ஆதாரமாகக்கொண்டு வாதத்தில் ஜயித்து அவர்களையும் நல்ல வைதிகர்களாகச் செய்து வந்தார். அப்படியே வைதிகர் என்று சொல்லிக் கொண்டு வேத விருத்தமான ஆசாரங்களைக் கைக்கொண்டிருப்பவர்களையும் துராசாரங்களை விடும்படி செய்தார். வைதிகமான தேவதைகளை ஆராதனை செய்வதிலும் சிலர் தர்ம மார்க்கத்தை விட்டுத் தானுகக் கல்பித்துக்கொண்டு அனுஷ்டித்து வரும் பல மார்க்கங்களையும் தோஷமற்ற முறையில் இருக்கும்படி பரிஷ்காரம் செய்து வந்தார். இவ்விதம் ஸகல ஜனங்களின் க்ஷேமத்தை யுத்தேசித்து வைதிக மார்க்கத்தை சுத்தமாக ஜனங்களுக்குப் போதித்தும், உபாஸனு க்ரமங்களைச் சீர்படுத்திக்கொடுத்தும் வந்ததால் இவருக்கு ஜகத்குரு என்றும் ஷண்மதஸ்தாபனுசார்யர் என்றும் பிரஸித்தி யேற்பட்டுவிட்டது. இவர் கர்மாக்களை சாஸ்திரத்தில் சொல்லியபடி காமனையன்னியில் அனுஷ்டானம் செய்தாலொழிய மனதில் உள்ள பாபங்களும் அழுக்குகளும் போகாதென்று கர்மாவின் அவசியத்தையும், ஈசுவரனை உபாஸிக்காத பக்ஷத்தில் மனதில் உள்ள சாஞ்சல்யம் நிவர்த்தியாகி ஒருமைப்படாதென்று உபாஸனையின் அவசியத்தையும் நன்கு வற்புறுத்தி

வந்தார். கர்மா, உபாஸனை இந்த இரண்டு ஸாதனங்களில்லாமல் மனஸ் சுத்தமாவதற்கு வழியில்லாததினால், ஆத்மஞானம் ஏற்படுவதற்கு சித்தம் சுத்தமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருப்பதால், வேதம் தர்ம சாஸ்திரம் முதலான பிரமாணங்களில் சொல்லப் பட்டிருக்கும் கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்று ஸாதனங்கள் யாவும் அவசியமேயாகுமென்று எல்லா பிரமாணங்களையும் ஸமன்வயப்படுத்திக் கொடுத்தார். இதற்காக, தான் ஸஞ்சாரத்தில் தர்சிக்கக்கூடிய க்ஷேத்திரங்களில் ஜனங்களுக்குப் பாதகமாயிருக்கக்கூடிய அம்சங்களை நிவர்த்தி செய்து, அவசியமான இடங்களில் புதிதாக யந்திரங்களோ மூர்த்திகளோ பிரதிஷ்டை செய்து, நம் தேசம் பூராவிலும் ஜனங்கள் ஸத்கதியடையும் பொருட்டு தேவாலய பரிஷ்காரங்களைச் செய்து, எங்கும் பகவானுடைய ஸாந்நித்யம் அந்தந்த பக்தர்களின் அதிகாரத்திற்கும் பூர்வ வாஸனைக்கும் தக்கபடி அவரவர்கள் உபாஸிக்கும் மூர்த்தி விசேஷங்களில் நன்றாக விளங்கும்படி செய்துவந்தார். ஸகல மூர்த்திகளிலும் ஸாந்நித்யம் அடைந்திருக்கும் பகவான் ஒருவரே என்ற நிச்சயத்துடன் அந்தந்த மூர்த்திகளே பரமாத்ம தத்வமென்று பலவித மான ஸ்தோத்திரங்களை இயற்றியிருக்கிறார். அத்வைத ஸித்தாந்தத்தை சாஸ்திர ரீதியாக அறிந்துகொள்ளக் கூடியவர்களுக்கு பிரஸ்தான த்ரய பாஷ்யங்களை இயற்றியதுடன் இருந்துவிடாமல், ஸுலபமாய் ஸகல ஜனங்களும் அறிந்துகொள்ளும் பொருட்டு எளிய நடையில் விவேகசூடாமணி, ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்கிரஹம், முதலான கிரந்தங்களையும் அருளினார். இவைகளும் விஸ்தாரமாயிருக்கிறதென்று நினைப்பவர்களின் ஸௌகர்யத்திற்காக நூறு சுலோகமாக சதசுலோகீ என்ற கிரந்தமும் அதற்கும் குறைத்து ஆத்மபோதம், ஸ்வரூபானுஸந்தானம் முதலிய பிரகரண கிரந்தங்களும் இயற்றிக் கொடுத்திருக்கிறார். இன்னமும் சுருங்கச் சொல்லவேண்டு

மென்று அபேக்ஷிக்கிறவர்களுக்குத் தகுந்தாற்போல் பன்னிரண்டு, பத்து, ஏழு, ஆறு, ஐந்து, மூன்று, ஒன்று என்று சுலோகங்களால் ஆத்மதத்வத்தை விளக்கிக் காட்டியிருக்கிறார். இவ்வளவு கருணை கூர்ந்து ஜனங்களை எப்படியாவது உத்தாரணம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அனுக்ரஹித்த இவ்வவதார மூர்த்தியிடம் நாம் எவ்வளவு நன்றி பாராட்டவேண்டுமென்பதை எடுத்துச் சொல்ல அவசியமில்லை.

இவர் சிருங்கேரியில் பன்னிரண்டு வருஷகாலம் இருந்ததாகச் சொல்கிறார்கள். அவருக்கு மொத்தம் ஏற்பட்ட முப்பத்திரண்டு வருஷ வயதில் பன்னிரண்டு வருஷம் சிருங்கேரியில் தங்கினார் என்றால் அவருக்கு சிருங்கேரியில் எவ்வளவு அபிமானமிருந்திருக்குமென்று நாமே தெரிந்து கொள்ளலாம். இவர் இவ்விதம் சிஷ்யர்களுடன் வேதாந்த விசாரமும் ஆத்மானுஸந்தானமும் செய்துவரும் மத்தியில் தன் பிரஹ்மஸூத்ர பாஷ்யத்திற்கு வியாக்யான ரூபமாக வார்த்திகம் எழுதவேண்டுமென்று ஸுரேசுவரரை ஆக்ஞாபிக்க, அதில் மற்ற சிஷ்யர்களுக்குத் திருப்தியில்லாததினால் அவரை ஸ்வதந்தரமாக ஒரு கிரந்தமும், தன் வேதமான க்ருஷ்ண யஜுர்வேதத்தைச் சேர்ந்த தைத்திரீய உபநிஷத் பாஷ்யத்திற்கும் அவர் வேதமான சுக்ல யஜுர்வேதத்தைச் சேர்ந்த பிருஹதாரண்ய உபநிஷத் பாஷ்யத்திற்கும் வார்த்திகங்களும், எழுதும்படி ஆக்ஞாபித்தார். அதையனுசரித்து நைஷ்கர்ம்ய ஸித்தி யென்ற கிரந்தத்தையும் அவ்விரண்டு உபநிஷத்பாஷ்ய வார்த்திகங்களையும் ஸுரேசுவரர் எழுதினார்.

பத்மபாதர் பிரஹ்மஸூத்ர பாஷ்யத்திற்குத் தான் வியாக்யானம் எழுதுவதாக ஆரம்பித்து எழுதி வருகையில், ராமேசுவர யாத்திரை போகவேண்டுமென்று ஒரு விருத்தி யேற்பட்டு, அங்கே போய்விட்டு வருகையில் தான் எழுதி

யிருந்த வியாக்யானம் தீக்கு இரையாகிவிட்டதென்று, திரும்பி வந்தவுடன் ஆசார்யரிடம் வெகு துக்கத்துடன் தெரிவித்தார். யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன் தன்னிடம் வாசித்துக் காண்பித்த பாகத்தைத் தானே திருப்பிச்சொல்வதாக ஆசார்யர் அனுக்ரஹித்து அப்படியே சொன்னார். பத்மபாதர் எழுதியிருந்தது பிரஹ்ம ஸூத்திரத்தில் முதல் அத்தியாயத்திலுள்ள நான்கு பாதங்களும் இரண்டாவது அத்யாயத்தில் முதல் பாதமும்தான். ஆகையால் அவர் கிரந்தத்திற்கே பஞ்சபாதிகா என்ற பிரஸித்தியேற்பட்டது. ஆனாலும் அக்கிரந்தம் நஷ்டமாய்ப்போய் ஆசார்யர் திருப்பிச்சொன்னது நான்கே ஸூத்திரங்களுக்குள்ள பாஷ்ய வியாக்யானம்தான். அவ்வளவுதான் பிரசாரத்தில் இருந்துவருகிறது.

பத்மபாதர் நரஸிம்ஹ உபாஸகராயிருந்து ஸித்தி பெற்றவர். ஒரு நாள் ஒரு காபாலிகன் ஏகாந்தத்தில் ஆசார்யரிடம் வந்து தன் இஷ்ட தேவதையான பைரவரை ஆராதிக்கும் கிரமத்தில் ஹோமத்தில் ஆஹுதி செய்வதற்காக ஆசார்யரின் சிரஸை யாசித்தான். அவரும் ஸம்மதித்துவிட்டார். தன் சிஷ்யர்கள் யாவருக்கும் தெரியாமல் ஏகாந்தத்திலேயே வந்து தன் சிரஸ்ஸை எடுத்துப்போகும்படி சொன்னார். அவ்விதம் அவன் இந்த உத்தேசத்துடன் வந்திருக்கிற ஸமயத்தில் நதிக்கரையிலிருந்த பத்மபாதர் மனதில் தன் ஆசார்யருக்கு ஏதோ ஆபத்து என்ற எண்ணம் தோன்றினவுடன், நரஸிம்ஹரைத் தியானித்து அவருடைய தாதாத்ம்யத்தை யடைந்து, தானே நரஸிம்ஹ ரூபத்தைத் தரித்துக்கொண்டு ஓடிவந்து, அந்த காபாலிகனை ஸம்ஹரித்து தன் குருநாதரைக் காப்பாற்றிக் கொடுத்தார். அப்படியே பின்னால் ஒரு ஸமயம் ஒரு சாக்தன் ஆசார்யரிடம் துவேஷம் கொண்டு ஆபிசாரப் பிரயோகம் செய்து ஆசார்யருக்கு பகந்தரம் என்ற ரோகம் ஏற்பட்டிருப்பதாக பத்மபாதருக்குத்

தெரிந்தவுடன் பிரதி பிரயோகம் செய்து அந்த சாக்தனை ஸம்ஹரித்துத் தன் குருநாதருக்கு ரோகமில்லாமல் செய்து வைத்தார். இவ்விதம் பல ஸமயங்களில் குரு பக்தியின் பெருமையை பத்மபாதர் காட்டியிருக்கிறார். இவ்விதம் ஸகல வித்யாபாரங்கதர் என்ற முறையில் ஸுரேசுவரரும், குரு பக்தியால் பத்மபாதரும், ஆத்மானுபவ நிஷ்டையால் ஹஸ்தாமலகரும், குரு சுசுருஷையினால் தோடகாசார்யரும், ஆசார்யருக்கு விசேஷ பிரீதி பாத்திரமாக இருந்து வந்தார்கள்.

பத்மபாதர் ராமேசுவரம் போயிருக்கும் ஸந்தர்ப்பத்தில் ஆசார்யருடைய தாயார் தன்னை ஸ்மரிப்பதாக அவருக்குத் தெரிந்து உடனே யோகசக்தியினால் காலடி கிராமத்திற்குப் போய்ப் பார்த்தார். ஆர்யாம்பிகையின் அந்த்யகாலமென்று தெரிந்து அவளுக்கு ஸத்கதி கொடுக்க உத்தேசித்து சிவபுஜங்கம் என்ற ஸ்தோத்திரத்தினால் பரமேசுவரனை ஸ்துதித்தவுடன், தாயாரை அழைத்துப் போக சிவபார்ஷதர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடனே மனஸுக்கு ருசிக்காமல் அவர்களுடன் போவதற்குத் தாயார் இஷ்டப்படாததினால், மஹாவிஷ்ணுவை விஷ்ணுபுஜங்க ஸ்தோத்திரத்தினால். ஸ்துதித்து . விஷ்ணு தூதர்களை வரவழைத்துத் தாயாரிடம் காட்டினதில், அவர்களுடன் போக அவள் ஸம்மதித்தபடியால் அவளை வைகுண்ட லோகத்திற்கே அனுப்பினார். பின்னால் அவளுடைய சரீரத்திற்கு ஸம்ஸ்காரம் செய்வதற்காக பந்துக்களின் ஸஹாயத்தைக் கோரினபோது, அவர்கள் ஸன்யாஸிக்கு இவ்வித ஸம்ஸ்காரம் செய்ய சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லையென்று ஆக்ஷேபித்து சரீரத்தை அப்புறப்படுத்தவோ, அக்கினியிலிடவோ எவ்வித உதவியும் செய்ய மறுத்துவிட்டார்கள். ஆசார்யரே அந்த சரீரத்தை அந்த வீட்டுப் பின்புறத்திலேயே கொண்டுபோய் வைத்து, கையில் அக்னியை ஆவிர்பவிக்கச்செய்து, அதைக்கொண்டு

ஸம்ஸ்காரம் செய்தார். இவ்விதம் தனக்கு உதவ மறுத்த இவர்கள் குலத்தில் இனிமேல் அந்த்ய ஸம்ஸ்காரம் அவ ரவர்கள் கிருஹத்தின் பின்புறத்திலேயே நடத்தவேண்டு மென்றும் அவர்கள் கிருஹங்களில் ஸன்யாஸிகள் பிக்ஷை செய்யக் கூடாதென்றும் நியமத்தை ஏற்படுத்திவிட்டு இந்த நியமத்தை அமுலுக்குக் கொண்டுவரும்படி அத் தேசத்தின் அரசனையும் ஆக்ஞைசெய்தார். அப்படியே இன்னம் அக்குலங்களில் ஆசாரம் இருந்துவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

ஆசார்யர் திக்விஜய யாத்திராக்கிரமத்தில் நம் பரத கண்டம் பூராவும் மூன்று தடவை பிரயாணம் செய்திருப் பதாகச் சொல்கிறார்கள். அவருடைய பிரஸித்தியோ செல்வாக்கோ கிரந்தப் பிரசாரமோ இல்லாதவிடம் கிடை யாது. இப்பொழுது போக்குவரத்து ஸௌகர்யங்கள் ஜாஸ்தியாயிருப்பதால் அவருடைய கியாதியும் பெயரும் உலகம் பூராவுமே பரவியிருக்கிறதென்பதில் ஸந்தேஹ மில்லை. அவர் உத்தரதேசத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக் கும்போது, காஷ்மீர தேசத்தில் உள்ள சாரதாதேவியின் ஸந்நிதியிலுள்ள ஸர்வக்ஞபீடத்தில் வடக்கு கிழக்கு மேற்கு திக்குக்களிலிருந்து வித்வான்கள் ஸ்தானம் பெற்றிருக் கிறார்களென்றும் தெற்கு திக்கிலிருந்து ஸர்வக்ஞர் என்று சொல்லக்கூடிய யாதொரு வித்வானும் வந்தது கிடையா தென்றும் ஒரு பிரஸித்தி ஆசார்யர் காதில் விழுந்தது. தெற்கு தேசத்திற்குள்ள இக்குறையை நிவர்த்திசெய்ய எண்ணங்கொண்டு ஆசார்யர் அங்கு போய் அங்குள்ள வித்வான்களை ஸகலவிதமான சாஸ்திரங்களிலும் தன் னுடைய அபார சக்தியினால் வென்றார். ஸர்வக்ஞ பீடத்தில் ஆரோஹணம்செய்யும் ஸமயத்தில் வித்வத்துவம் மாத்திரம் போதாது. சரீர சுத்தியும் வேண்டும். 'நீங்கள் ஸன்யாஸியாயிருந்தும் அமருகனுடைய ஸ்திரீகளிடம் வியவஹரித்திருக்கிறீர்கள்' என்று அம்பிகை ஆக்ஷேபிக்க,

"அந்த ஸ்திரீகளுடன் வியவஹரித்தது இந்த ஸன்யாஸி சரீரம் அல்ல" என்று ஸமாதானம் சொல்லி அம்பிகையின் அனுமதியின்பேரில் ஸர்வக்ஞபீடாரோஹணம் செய்தார்.

அங்கிருந்து புறப்பட்டு பதரிகாசிரமம் போய் கௌட பாதாசார்யாரைத் தர்சித்துக்கொண்டு ஹிமாலய மலைப் பிரதேசத்தில் ஸஞ்சாரம் செய்துகொண்டிருக்கையில் தன்னுடைய அவதாரத்தின் உத்தேசத்தை நிறைவேற்றியாகி விட்டதென்றும் தான் இனி ஸ்வஸ்தானத்திற்குத் திரும்பி விடலாமென்றும் ஆசார்யருக்குத் தோன்றிற்று. உடனே தன்னுடன் வந்திருந்த முக்கிய சிஷ்யர்களைக் கூப்பிட்டுப் பாரத பூமியை ஒரு பெரிய யக்ஞ பூமியாகப் பாவித்து, நான்கு திக்குகளிலும் வைதிக தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக ஆசார்ய பரம்பரை ஸ்தாபிக்க உத்தேசித்து, கிழக்கே புரீ ஜகன்னாதத்தில் ரிக்வேத பிரதானமாயும், தெற்கே சிருங்கேரியில் யஜுர்வேத பிரதானமாயும், மேற்கே துவாரகையில் ஸாமவேத பிரதானமாயும், வடக்கே பதரியில் அதர்வணவேத பிரதானமாயும் நான்கு வியாக்யான பீடங்களை ஏற்படுத்தி ஹஸ்தாமலகர், ஸுரேசுவரர், பத்மபாதர், தோடகாசார்யர் ஆகிய நான்கு சிஷ்யர்களையும் அந்தந்த பீடங்களுக்கு அதிபதிகளாக நியமித்து சாசுவத பரம்பரையாக அத்வைத வித்யாப் பிரசாரம் செய்துவரும்படி ஆக்ஞாபித்தார். பிறகு ஹிமயமலையில் உள்ள பிரதேசங்களில் சென்று மறைந்துவிட்டார்.

இவருடைய மஹிமையை வர்ணிக்கக் கூடிய பல கிரந்தங்கள் இருக்கின்றன. முக்கியமான அம்சங்கள் மாத்திரமே மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆசார்யர் தன்னுடைய முப்பத்திரண்டு வயதிற்குள் இவ்வளவு பெரிய கார்யங்களை எப்படி செய்தார் என்று நாம் ஆச்சர்யப்பட்டால், அவர் பரமேசுவரரின் அவதார மூர்த்தியென்பதை மறந்து அவரும் நம்மைப்போல் மனுஷ்யர்தான் என்று நினைத்துவிட்டோமென்றே அர்த்தம். சராசரப்

பிரபஞ்சம் பூராவையும் ஸ்ருஷ்டித்து அநாதிகாலம் தொட்டு நடத்திவரும் ஸர்வ சக்தனானவருக்கும், ஸநகாதி மஹர்ஷிகளுக்கு ஆலமரத்தடியில் தக்ஷிணாமூர்த்தி ரூபம் கொண்டு மௌனத்தினாலே உபதேசம் செய்த ஞான ஸ்வரூபரான ஸர்வக்ஞருக்கும் இக்கார்யங்களெல்லாம் பெரிதாகுமா? ஸம்ஸாரக் கடலில் தத்தளிக்கும் ஜீவராசிகளை எப்படியாவது கரையேற்றிவிட வேண்டுமென்று, கருணையின்பேரில் அவதரித்து மஹத்தான உபகாரத்தைச் செய்திருக்கிற இந்த ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யரிடம் அளவிலடங்காத கிருதக்ஞதையுடன் இருந்துவரவேண்டியதும், அவருடைய உபதேசங்களை நம்மால் முடிந்தவரை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டியதும் நம் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றினால்தான் நாம் அவருடைய கருணைக்குப் பாத்திரமாவோம்.

## அத்யாயம் 5

## ஸ்ரீ வித்யாசங்கரர் வரை

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யர் எந்த வருஷத்தில் எந்த தினத்தில் அவதரித்தார். எந்த வருஷத்தில் எந்த தினத்தில் எப்படி எங்கே மறைந்தார், என்பதைப்பற்றி இக்காலத்தியவர்கள் சர்ச்சை செய்கிறார்கள். அவரவர்களிருக்கும் பிரதேசத்திற்கு ஆசார்யரின் ஸம்பந்தத்தினால் விசேஷ மஹிமை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று அவர் பிறந்த ஊரே எங்கள் ஊர், அவர் ஸித்தியடைந்த இடமே எங்கள் இடம், என்று சிலர் சொல்கிறார்கள். அவர்களும் ஆசார்யரிடம் விசேஷ பக்தியினால் சொல்கிறார்கள் என்று மாத்திரம் கிரஹித்துக்கொண்டு விட்டால் வியவஹாரத்திற்கு இடமில்லை. அப்படியே, நாங்கள் தான் ஸாக்ஷாத்தாக ஆசார்ய சிஷ்ய பரம்பரையில்

வந்தவர்கள், என்று கௌரவம் கொண்டாடுகிறார்கள். ஸன்யாஸம் வாங்கிக்கொண்டிருக்கிற யாரையுமே மஹா விஷ்ணுவாகப் பாவிக்க வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லும்போது, எல்லா ஸன்யாஸிகளையுமே சங்கரபகவத்பாதர் என்று பாவிப்பதில் ஒருவிதமான தவறுதலுமில்லை. ஜடமான உலோகத்தினாலும் சிலையினாலும் செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளிலேயே தேவதாபுத்தி செய்து கிருதார்த்தர்களாகலாமென்று சொல்கிற நம் மதத்தில் சைதன்யமும் வைதுஷ்யமும் ஆசாரமும் உள்ள ஸன்யாஸிகளிடத்தில் ஆசார்ய பாவனை செய்வது உசிதமேயாகும். ஆனால் அந்த உலோகமோ, சிலையோ 'தான்' தான் தேவதை என்று நினைத்துவிடக் கூடாதென்பது எப்படி வாஸ்தவமோ, அதேமாதிரி சிஷ்யர்களால் ஆசார்ய பாவனையுடன் பாவிக்கப்படும் ஸன்யாஸிகள், 'தாங்கள் சங்கர பகவத்பாதர்' என்று நினைத்துத் தானும் ஏமாந்துபோகக் கூடாது, மற்றவர்களை ஏமாற்றவும் கூடாது. அதுவும் இக்காலத்தில் விசேஷமாக ஸ்ரீ சங்கரபகவத் பாதரின் மஹிமை தேசாந்தரங்களில் கூட மதிக்கப்பட்டு வருவதால், அவர் பெயரை உபயோகித்துக்கொண்டு பெருமையடைய வெகுபேர்கள் முயற்சிப்பது ஸஹஜமேயாகும். இச்சிறு கிரந்தத்தில் ஸ்ரீ சாரதா பீடத்தைப்பற்றி மாத்திரம் சொல்ல உத்தேசித்திருப்பதால் மற்ற மூன்று பீடங்களைப்பற்றியாவது இந்நான்கு பீடங்களைத் தவிர ஆசார்ய பீடங்களென்று சொல்லிக்கொள்ளும் அநேக ஸ்தாபனங்களைப்பற்றியாவது அவைகளுடைய வரலாறுகளைப் பற்றியாவது இங்கே பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை.

சிருங்கேரியில் ஸரஸ்வதி தேவியை ஸ்ரீ சாரதா என்ற பெயருடன் ஸ்ரீமத் ஆசார்யர் பிரதிஷ்டைசெய்து அங்குள்ள தக்ஷிணாம்நாய வியாக்யான பீடத்தில் இருக்கும்படி ஸுரேசுவரரை நியமனம் செய்தார் என்று முன் சொல்லப்பட்டது. ஆசார்யர் கைலாஸத்திலிருந்துகொண்டு வந்த

தாகச் சொல்லப்படுகிற ஐந்து சந்திரமௌளீசுவர ஸ்படிக லிங்கங்களில் நான்கை மேலேகண்ட நான்கு மடங்களில் நித்ய ஆராதனத்திற்குக் கொடுத்துவிட்டு ஐந்தாவதை சிதம்பர க்ஷேத்திரத்தில் நடராஜ ஸந்நிதியில் வைத்தாரென்று தெரிகிறது. அந்த ஐந்தாவது சந்திரமௌளீசுவர லிங்கம் இன்னமும் சிதம்பர க்ஷேத்திரத்தில் வெகு பக்தி சிரத்தையுடன் ஆராதிக்கப்பட்டு வருகிறது. ஸுரேசுவரரிடம் சந்திரமௌளீசுவர லிங்கம் கொடுத்ததுடன் அதி அபூர்வமான ரத்தினகர்ப்ப கணபதி மூர்த்தியையும் கொடுத்தபடியால் அவை இரண்டும் சிருங்கேரி மடத்தில் நித்தியம் விசேஷமாக ஆராதிக்கப்பட்டு வருகின்றன. ஆசார்யருடைய பாவனையில் எந்த தேவதாமூர்த்தியானாலும் அதுவும் பரப்ரஹ்மமேயாகுமானதினால் ஸ்ரீ சாரதாவையும் துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதீ, என்ற மூன்று சக்திகளுக்கும் அதீதமாயுள்ள பராசக்தியாகவே கருதி சுத்த சைதன்ய ரூபிணியாகவே ஆராதிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்விதம் ஆராதனைக்கு ஏற்பட்ட மூர்த்திகள் மூலம் பரமாத்மாவை அனுஸந்தானம் செய்துகொண்டு அதிகாரஸம்பத்துடன் தன்னை அண்டிவரும் சிஷ்யர்களுக்கு ஆத்மவித்யையை உபதேசித்துக்கொண்டு வெகுநாள் ஸுரேசுவராசார்யார் சிருங்கேரியில் பீடாதிபத்யம் செய்து வந்தார். அவர் அங்கே எண்ணூறு வருஷமிருந்ததாகச் சிலர் சொல்கிறார்கள். இது கலியுகத்தில் ஸாத்தியமில்லையென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். எப்படியும் அவர் வெகுகாலம் இருந்தாரென்பதில் ஸந்தேஹமில்லை. அவர் தனக்குப்பின் பீடாதிபத்யம் வஹிப்பதற்காக நித்ய போதகனாசார்யர் என்பவருக்கு கி. பி. 757ல் ஸன்யாஸம் கொடுத்துத் தன்னுடனேயே பதினாறு வருஷங்கள் வைத்துக்கொண்டு பீடாதிபத்யத்திற்கு வேண்டிய சாஸ்திர ஞானம், ஸம்பிரதாய ஞானம் இவைகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு கி. பி. 773ல் ஸித்தியடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

நித்யபோதகனர் கி. பி. 773ல் பீடாதிபத்யம் ஏற்றுக் கொண்டு கி பி. 846ல் ஞானகனுசார்யாரை சிஷ்யராகக் கிரஹித்து கி.பி. 848ல் ஸித்தியான பிறகு ஞானகனுசார்யார் இப்பீடத்தில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரிடமிருந்து கணக்கிட்டால் நான்காவது ஆசார்யராக ஏற்பட்டார். அவர் கி பி 910ல் ஸித்திபடைந்தார். அவரிடம் கி. பி 905லேயே ஸன்யாஸம் பெற்றுக் கௌடஞானோத்தம சிவாசார்யார் ஐந்தாவது ஆசார்ய ஸ்தானம் வஹித்தார் அவரிடம் ஸன்யாஸம் பெற்ற ஞானகிரியென்பவர் கி பி 953ல் பீடாதிபதியானுர். அப்படியே கிரமப்படி குரு சிஷ்யக் கிரமமாக ஸிம்ஹகிரி என்பவர் கி பி 1038 முதல் 1098 வரையிலும், ஈசுவரதீர்த்தர் என்பவர் கி. பி. 1098 முதல் 1146 வரையிலும், நரஸிம்ஹதீர்த்தர் என்பவர் கி பி. 1146 முதல் 1228 வரையிலும், பீடாதிபத்யம் செய்துவந்தார்கள். இவர்களுக்குப் பின் வந்த வித்யாசங்கரதீர்த்தர் என்பவர் கி. பி. 1228 முதல் 1333 வரை ஆசார்யராக இருந்திருக்கிருர். இவர் காலத்திலேயே நம் தேசத்தில் பலவிதமான ராஜ்ய க்ஷோபங்கள் ஏற்பட்டு வந்ததினுல் இவருடையவும், இவருடைய முன்னோர்களுடையவும் வரலாறுகள் நமக்குத் தெரிவதற்கு இடமில்லாமல் போய் விட்டது. ஆனுல் எல்லாரும் வித்வான்களாகவும், உபாஸகர்களாகவும், யோகிகளாகவும், ஆத்ம நிஷ்டாபரர்களாகவும் இருந்துவந்து சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்து வந்திருக்கிருர்களென்பதில் ஸந்தேஹமில்லை. இவர்களில் கௌட ஞானோத்தம சிவாசார்யார் என்பவர் சித்ஸுகாசார்யார் என்ற அத்வைத சாஸ்திர பிரவர்த்தகரான மஹானுக்குக் குரு என்று சித்ஸுகருடைய கிரந்தங்களிலிருந்து தெரிகிறது.

பத்தாவது ஆசார்யராகவிருந்த வித்யாசங்கரதீர்த்தரின் சரித்திரம் நமக்குத் தெரியாமலிருந்தபோதிலும் அவருடைய பெருமையைப்பற்றி அவர் சிஷ்யர்களான வித்யா

ரண்யரும், பாரதி கிருஷ்ண தீர்த்தரும், விஜயநகரம் ஸ்தாபித்த ஹரிஹர மஹாராஜனும், புக்க மஹாராஜனும் அவரிடம் வைத்திருந்த கௌரவ புத்தியிலிருந்து நமக்குத் தெரியவருகிறது அவரை பரமேசுவரராகவே அவர்கள் பாவித்திருக்கிறார்கள். ஸாயணாசார்யார், மாதவாசார்யார் இவர்கள் இயற்றிய வேதபாஷ்யம் முதலான ஸகல கிரந்தங்களிலும். "வேதங்கள் யாருடைய மூச்சுக்காற்றோ, எவர் வேதங்களைக்கொண்டு ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்தாரோ, அந்த வித்யா தீர்த்தரூபியான மஹேசுவரருக்கு நமஸ்காரம்" என்று ஆரம்பிக்கிறார்கள். அவருடைய உபதேசத்தையும் அனுக்ரஹத்தையும் வைத்துக்கொண்டே அவர்கள் வேதபாஷ்யாதிகளை எழுதியிருக்கவேண்டுமானால் அவருடைய ஞானம் அபாரமென்பதில் ஸந்தேஹமில்லை. அவர் சாஸ்திர ஞானத்தில் மாத்திரம் பெரியவரென்பதில்லை. அவைகளில் சொல்லப்பட்ட யோகம், பக்தி, ஞானம் முதலான துறைகளிலும் மிகவும் மேன்மையடைந்த அவதாரபுருஷரென்று தெரியவருகிறது. அவருடைய ஸங்கல்பத்தினாலேயே விஜயநகர ஸம்ஸ்தானம் உருவாகியது என்றும் தெரிகிறது. அவர் யோக நிஷ்டராகவே சிருங்கேரி பீடத்தில் நூறு வருஷங்களுக்குமேல் இருந்துவந்திருக்கிறார். அவருக்கு வயது எவ்வளவென்று சொல்வதற்கில்லை. அவர் கடைசியில் பூமிக்கு அடியில் ஓர் அந்தர்கிருஹம் கட்டி அதற்குள் லம்பிகா யோகத்தில் அமர்ந்துவிடுவதாக ஸங்கல்பம் செய்துகொண்டார். ஒரு நல்ல சில்பியைக் கூப்பிட்டு ஒரு சிலாவிக்ரஹம் தயாரிக்கச் சொன்னார். அதன் முன்பக்கத்தில் பாரதீ கிருஷ்ண தீர்த்தர், வித்யாரண்யர் ஆகிய இரண்டு சிஷ்யர்களுடன் இருப்பதாகத் தன்னுடைய மூர்த்தியையும், மற்ற மூன்று பக்கங்களில் பிரஹ்மா, விஷ்ணு, ருத்ரர் இவர்கள் மூர்த்திகளையும், இம்மூர்த்திகளுக்கெல்லாம் மேல்பாகத்தில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ மூர்த்தியையும், அதற்குமேல் சிகரத்தில் மஹாலிங்காகாரத்தையும் வைத்து விக்ரஹம் தயாரிக்

கப்பட்டது. ஆசார்யர் லம்பிகா யோகத்தில் அமருவதற்கு முன்னதாக ' நான் அந்தர்கிருஹத்தில் யோகநிஷ்டையில் அமர்ந்தவுடன் நன்கு மூடிவிடுங்கள். பன்னிரண்டு வருஷ காலம் திறக்காதீர்கள். அதன்பிறகு திறந்து பார்த்தீர்களானால் என் பௌதிக சரீரம் இந்த விக்ரஹத்தைப் போலுள்ள ரூபத்துடன் தென்படும்" என்று சொல்லி விட்டு அவ்வறைக்குள் இறங்கிவிட்டார். அவருடைய ஆக்ஞைப்படி அறையும் மூடிவிடப்பட்டது. ஆனால் அவர் சொல்லியிருந்த காலவரையறையை கவனிக்காமல் யாரோ அவ்வறையை மூன்று வருஷங்களானவுடன் திறந்து விட்டார்கள். அங்கு ஆசார்யரின் சரீரம் காணப்பட வில்லை. அவரால் காட்டப்பட்ட விக்ரஹத்திலுள்ள மேல் பாகமான லிங்கரூபம் மாத்திரம் ஆவிர்பவித்திருந்தது இவ்விஷயம் அறிந்த பாரதீ கிருஷ்ணதீர்த்தரும், வித்யாரண்யரும் வெகுவருத்தமடைந்தார்கள். ஆனால் அவர்கள் ஸ்வப்னத்தில் வித்யாசங்கரர் தோன்றி "கவலைப்பட வேண்டாம். பகவத் ஸங்கல்பம்போல் நடந்திருக்கிறது. இவ்விடத்தில் இனி வேறு லிங்கத்தையே பிரதிஷ்டை செய்து ஆராதியுங்கள்" என்று உத்திரவிட்டார். அப்படியே அவர்கள் அந்தவிடத்தில் அத்புதமாக ஓர் ஆலயம் கட்டி லிங்கப் பிரதிஷ்டை செய்தார்கள். மாதிரியாக காட்டப்பட்ட விக்ரஹத்திற்கு சதுர்மூர்த்திவித்யேசுவரர் என்று நாமமிட்டு, தன் குரு பரம்பரையில் மூன்னிருந்த ஸிம்ஹகிரியாசார்யாரின் ஞாபகார்த்தமாக ஏற்பட்டிருந்த ஸிம்ஹகிரி என்ற ஸ்தலத்தில் அதையும் பிரதிஷ்டைசெய்து நித்ய பூஜாதிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

வித்யாசங்கரர் லம்பிகா யோகத்தில் அமர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தில் இன்னமும் அம் மஹான் யோக நிஷ்டையிலேயே இருப்பதாக நம்பப்படுகிறது. மடம் கார்யநிர்வாஹத்திற்காகப் பின்னால் நாளது வரை சிஷ்ய பரம்பரை ஏற்பட்டுவந்த போதிலும் அவரே



ஸ்ரீ வித்யாசங்கரர் ஆலயம், சிருங்கேரி.

*தான் இப்பொழுதும் பீடாதிபதியென்று பாவித்து மடத்திலிருந்து வெளியாகும் ஸ்ரீமுகங்கள் எல்லாவற்றிலும் "வித்யாசங்கர" என்ற முத்திரையே உபயோகப்பட்டு வருகிறது. "வித்யாசங்கருடைய பாதபத்மங்களை ஆராதித்து வருகிறவர்" என்றே தங்கள் பிருதாவளியில் உபயோகித்து வருகிறார்கள். இப்பொழுதும் ஒவ்வொரு நாளும் ராத்திரி வேளையில் தேவதாகணங்கள் வந்து அவரைப் புஷ்பங்களாலும் தூபம் தீபம் கர்பூரம் முதலிய அங்கங்களுடன் பூஜித்து வருவதாகவும் அவ்விதம் பூஜை செய்யும்போது அவர்கள் அடிக்கும் மணியின் சப்தம் இப்பொழுதும் நம் காதில் படுவதுண்டு என்றும் சொல்கிறார்கள். இவ்விதம் சொல்கிறார்களென்று சொல்லாமல் அவைகள் நடப்பதாகவே பக்திஸுதாதரங்கிணியில் காணப்படும் வித்யாசங்கர ஸ்தோத்திரத்தில் பரமாசார்யரான ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹபாரதி ஸ்வாமிகளவர்கள் வர்ணித்திருப்பதால் இவ்விஷயத்தை அவர்களே நேரில் அனுபவித்திருக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை.*

घण्टानादपुरस्सरं प्रतिदिनं रात्रौ सुराणां गणै-
भक्त्या पूरितमानसैः सुमवरैः कर्पूरनीराजनैः ।
धूपैर्दीपचयैर्मनोहरतरैः संपूज्यमानं मुहु-
र्विद्यातीर्थपदारविन्दयुगलं वन्दे जगत्पावनम् ॥

*அவ்வாலயத்தின் மஹிமையைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லாமல் மேல் போக இடம் கொடுக்கவில்லை. ஆனால் அதை வர்ணிப்பதும் ஸாத்தியமில்லை. அதை யந்திராகாரமாக நிர்மாணம் செய்திருப்பதால் இவ்விதம் கட்டவேண்டுமென்று தீர்மானித்துக் கொடுத்த பாரதீ கிருஷ்ண தீர்த்தர், வித்யாரண்யர் இவர்களுடைய மந்திர சாஸ்திர ஞானத்தை மெச்சுவதா? அவர்கள் மனதினால் கல்பித்து வாக்கினால் சொன்னதைக் கல்லில் கார்யத்தில் அமைத்துக்காட்டிய*

சில்பியின் ஸாமர்த்தியத்தை மெச்சுவதா? வெளிப் பிராகாரச் சுவரில் செதுக்கப்பட்டிருக்கும் தசாவதாரங்கள், புராண கதைகள், யோகாஸனங்கள், தேவாஸுர கந்தர்வாதி மூர்த்திகள், பசுபக்ஷி மிருகாதிகளின் பேதங்கள் முதலானவைகளை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டுமானாலும் பல நாட்கள் அங்கே தங்கியிருந்தாகவேண்டும். அங்குள்ள யாளிகளின் முகத்தில் எடுக்க முடியாமல் உள்ளே உருண்டுகொண்டிருக்கிற கல் பந்துகள், விமானத்தில் தொங்கிக்கொண்டிருக்கிற கல் சங்கிலிகள் முதலான அத்புதங்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். முன் விஸ்தாரமான மண்டபம் பன்னிரண்டு தூண்களின் பேரில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அத்தூண்களில் வரிசையாக மேஷம், ரிஷபம் முதலான ராசிகளும் அந்தந்த ராசி அதிபதிகளும், கல்லிலேயே செதுக்கப்பட்டிருக்கின்றன. இம் மண்டபத்திற்கு மேல்புறம் கர்ப்பகிருஹம். தெற்கிலும் கிழக்கிலும் வடக்கிலும் சிறு வாசல்கள் இருக்கின்றன. ஸூர்யன் மேஷத்திலிருக்கும் ஸமயம் ஸூர்யோதய காலத்தில் அவருடைய கிரணம் மேஷமுள்ள தூணிலேயே விழும். அப்படியே மற்றத் தூண்களிலும் அந்தந்த மாஸங்களில் ஸூர்யரச்மி விழும். ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் எவ்வளவு நிரூடமான ஞானமிருந்தால், கணக்கிடுவதில் எவ்வளவு ஸூக்ஷ்ம ஞானமிருந்தால், இவ்விதம் அமைக்க முடியுமென்பதைக் கவனித்தால் இது அமானுஷக்ருத்யமென்றே தோன்றும். இதவும் லௌகிக புத்தி ஸாமர்த்தியத்தினால் ஸாத்தியமென்றே வைத்துக்கொள்வோம். மண்டபத்தில் மேல் பாவியிருக்கும் கல்களில் ஒரு பக்கம் காக்கை அடித்திருக்கிறது. இன்னொரு பக்கம் பல்லி அடித்திருக்கிறது. பக்ஷி தோஷமோ பல்லி தோஷமோ ஏற்பட்டவர்கள் அததற்குக் கீழ் நின்றுகொண்டு மேலே ஜலத்தை வாரி இறைத்து அந்த பிம்பங்களில் ஸம்பந்தப்பட்டுத் திரும்பி வரும் ஜலத்தை மேலே விழும்படி செய்தால் அந்தந்த தோஷங்கள் நிவர்த்தியாகிவிடுகிறதென்பது ப்ரத்யக்ஷ

ஸித்தம். தவிரவும் வெளிச் சுவரில் ஒருபக்கம் ஸூர்ய பிம்பமும் மற்றொரு பக்கம் சந்திர பிம்பமும் இருக்கின்றன. ஸூர்ய கிரணம் சந்திர பிம்பத்தின் பேரில் விழுவதில்லை. சந்திரகிரணம் ஸூர்ய பிம்பத்தின்பேரில் விழுவதில்லை. இதுவும் கணக்கிட்டுக் கட்டியிருக்கலாமென்று சொல்ல லாம். வெளியில் எவ்வளவு உக்கிரமாக வெயில் அடித்த போதிலும் சந்திர பிம்பத்திற்கு அடியில்போய் நின்றால் குளுமையாகவேயிருக்கிறது இதையெல்லாம் கவனிக்கும் போது பகவதம்சபூதர்களான பெரியோர்களின் அமானுஷ மான திவ்ய சக்தியினால் தான் கட்டப்பட்டதென்று ஒப்புக்கொள்ளதான் வேண்டும். விஜயநகரம் ராஜதானி நிர்மாணம் செய்துகொடுத்த ஜக்கண்ணு என்ற சில்பிதான் இவ்வாலயத்தையும் கட்டினாரென்று குருவம்ச காவ்யம் என்ற கிரந்தம் மூலமாகத் தெரிகிறது. இவ்வாலயத்தின் அத்புதத் தன்மையை நேரில் தர்சித்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாமே தவிர மற்றவர்கள் எடுத்துச் சொல்லித் தெரிந்துகொள்ளக்கூடியதில்லை. அங்கு நேரில் போவதற்கு பாக்கியமில்லாதவர்கள் மைஸூர் ஆர்க்கியலாஜிகல் ரிப்போர்ட்டு (1916-ம் வருஷம்) பக்கங்கள் 12 முதல் 15 வரையில் காணப்படும் வர்ணனையிலும் படங்களிலும் ஒருவாறு திருப்திப்பட்டுக்கொள்ளலாம்.

இவ்விதம் மஹாயோகியும் ஞானியுமாயிருந்த வித்யா சங்கர தீர்த்தர் ஸ்ரீ சாரதா பீடத்தில் அமர்ந்திருக்கும் ஸமயம், வாரங்கல் என்று இப்பொழுது வழங்கப்படுகிற ஏகசிலா நகரத்திலிருந்து ஒரு வித்வான் சிருங்கேரிக்கு வந்து, ஆசார்யசரணாரவிந்த சுசுரூஷை செய்து அவருடைய கிருபைக்குப் பாத்திரமாகி, ஸாதனசதுஷ்டய ஸம்பன்ன ராக குருநாதருக்குத் தோன்றினபடியால் அவரிடமிருந்து கிரமப்படி ஸன்யாஸம் பெற்றார். அவரே பாரதீ கிருஷ்ண தீர்த்தர் என்பவர். இவருடைய தமயனார், தம்பியைக் காணாமல் தேடிக்கொண்டு வருகையில் சிருங்கேரியில்

அவரை ஸன்யாஸியாகக்கண்டு, அவருடைய வைராக்கிய ஸம்பத்தை மெச்சித் தானும் அப்பதவியைக் குருநாதரிடம் கோர, அவரும் இவருடைய யோக்கியதையை நன்கு அறிந்துகொண்டு இவருக்கும் ஸன்யாஸம் கொடுத்தருளினார். இவர்தான் வித்யாரண்யர். வயதில் பெரியவரா யிருந்தும் ஸன்யாஸம் பின்னால் ஏற்பட்ட காரணத்தினால் தம்பியே ஜ்யேஷ்டராகிவிட்டார். அதனால் வித்யாசங்கரர் மறைந்தவுடன் ஆசார்ய ஸ்தானத்தை பாரதீ கிருஷ்ண தீர்த்தரே வஹிக்கும்படி ஏற்பட்டது.

## அத்யாயம் 6

### ஸ்ரீ வித்யாரண்யர் முதல்

பாரதீ கிருஷ்ணதீர்த்தர் ஸன்யாஸம் பெற்றது கி. பி. 1327-ல். ஆசார்ய ஸ்தானம் வஹிக்கவாரம்பித்தது கி. பி. 1333-ல். அதுமுதல் நாற்பத்தேழு வருஷகாலம் ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக இருந்துவந்தார். இவருடைய குருநாதர் காலத்திலேயே ஏற்பட்ட ராஜ்ய க்ஷோபங்களுக்கெல்லாம் இவர் காலத்தில்தான் நிவர்த்தி ஏற்படவேண்டுமென்று பகவத்ஸங்கல்பம் என்று தெரியவருகிறது. இவர் காலத்தில்தான் வித்யாரண்யர் விஜயநகர ஸம்ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொடுத்தார். அவ்விதம் ஹிந்து ராஜ்யத்தை நிர்மாணித்துக்கொடுத்த மஹான் எப்பொழுதுமே தன்னுடனிருந்து அனுக்ரஹம் செய்யவேண்டுமென்று அந்த ராஜ்ய மன்னர்களான ஹரிஹர மஹாராஜனும் புக்க மஹாராஜனும் வேண்டிக்கொண்டபடியால் வித்யாரண்யர் அநேகமாய் விஜயநகரத்திலேயே இருந்துவந்தார். இருந்தாலும் தனக்கு ஸஹோதரராயிருந்து சிருங்கேரியில் பீடாதிபதியாயிருந்து வருகிற பாரதீ கிருஷ்ணதீர்த்தருடன் உள்ள தொடர்பை விட்டுவிடவில்லை. வேதாந்த விஷய

மான கிரந்தங்கள் எழுதுவதில் இருவரும் கலந்துகொண்டு இருவரும் ஸமமான பொறுப்பு வஹித்து வந்தார்கள். ஆகையால் இப்பொழுது பிரசாரத்திலிருக்கும் ஜைமினீய நியாயமாலா, வையாஸிக நியாயமாலா, விவரணப்ரமேய ஸங்கிரஹம், பஞ்சதசி ஜீவன்முக்தி விவேகம், முதலான கிரந்தங்கள் இவ்விருவர்களில் யார் செய்தது என்று நிச்சயிக்கமுடியாமலிருக்கிறது. ஆசார்ய பரம்பரையின் விபரம் தெரியாத சிலர் பாரதீ தீர்த்தர் என்பவர்தான் வித்யாரண்யர் என்றுகூடச் சொல்கிறார்கள்.

அப்படியே ஸாயணாசார்யர், மாதவாசார்யர், இவர்கள் பேரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கிரந்தங்களிலிருந்து இவர்களில் யார் எந்த கிரந்தத்தை எழுதினாரென்றும் நிர்ணயிக்க முடியாமலிருக்கிறது. இவர்களில் மாதவாசார்யர் என்பவர்தான் ஸன்யாஸப்பெற்று வித்யாரண்யர் என்று பிரஸித்தியடைந்தார் என்று சிலர் சொல்கிறார்கள். பராசரமாதவீயம் முதலான கிரந்தங்களில் வித்யாதீர்த்தருக்கும் பாரதீ தீர்த்தருக்கும் நமஸ்காரம் செய்திருப்பதால் இதுவும் ஸம்பவமென்று தோன்றலாம். ஸாயன மாதவர்கள் எழுதின அநேக கிரந்தங்களில் புக்க மஹாராஜாவின் ஆக்ஞையின்பேரில் எழுதினதாகக் கண்டிருக்கிறது. வித்யாரண்யருடைய அனுக்ரஹத்தினாலேயே ராஜ்யமேற்பட்டு அவர் பெயரால் ராஜதானிக்கு வித்யாநகரம் என்று பெயரிடப்பட்டதென்று சொல்லப்படுவதால் ராஜ்யம் ஏற்படுவதற்கு முன்னமேயே வித்யாரண்யர் ஸன்யாஸியாக இருக்கவேண்டுமென்று தெரிகிறது. புக்க மஹாராஜா அரசாள வந்தபிறகு அந்த வித்யாரண்யர் எழுதியிருந்தால் தன் பூர்வாசிரமப்பெயரை வைத்து எழுதுவதாவது மஹாராஜாவின் ஆக்ஞைப்படி எழுதினதாகச் சொல்வதாவது கொஞ்சமேனும் உசிதமாகாது. ஆகையால் வித்யாசங்கரர் தான் வித்யாரண்யரென்று சொல்வாருமுண்டு. சிருங்கேரி குரு பரம்பரையை வர்ணிக்கும் குருவம்சகாவ்யம் என்கிற

கிரந்தத்தில், ஸாயனர் மாதவர் என்ற இரண்டு ஸஹோதரர்கள் தபஸ் செய்துகொண்டிருந்த வித்யாரண்யரிடம் வந்து தங்களுக்கு ஸந்தானமேற்பட வேண்டுமென்று பிரார்த்தித்ததாகவும் அதற்கு அவர் "உங்களுக்கு அதற்கு இந்த ஜன்மத்தில் பிராப்தமில்லை. இருந்தாலும் தங்கள் பேர்கள் உலகத்தில் சாசுவதமாயிருந்து வருவதற்கு உபாயம் சொல்கிறேன். நான் எழுதிவைத்திருக்கும் வேத பாஷ்யாதி கிரந்தங்களை நீங்களே உங்கள் பேரால் பிரசாரம் செய்யுங்கள்" என்று சொல்லி அனுக்ரஹித்ததாகவும் அதிலேயே இவைகள் ஸாயனரால் செய்யப்பட்டது, மாதவரால் செய்யப்பட்டது, வித்யாரண்யரால் செய்யப் பட்டது முதலானபடியெல்லாம் பிரஸித்தியேற்பட்டதற்கு இடம் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அறு நூறு வருஷங்களுக்கு முன்னால் எவ்விதம் நடந்ததென்று நாம் இப்பொழுது தீர்மானித்துவிடப் பிரயத்தினம் செய்வதே உசிதமில்லை தீர்மானமாய் நிர்ணயம் செய்யவும் முடியாது. கிரந்தம் செய்தவர் யாராயிருந்தாலும் பெரியோர்களென்பதில் ஸந்தேஹமில்லை பிரமாண கிரந்தங்கள்தான் என்பதிலும் ஸந்தேஹமில்லை.

எப்படியும் பாரதீ தீர்த்தருக்கும் வித்யாரண்யருக்கும் விஜயநகரம் ஸம்ஸ்தானத்தில் விசேஷ மதிப்பு இருந்துவந்ததென்பதில் ஆக்ஷேபணையில்லை.. வைதிகமத ஸம்ரக்ஷணத்திற்காக அவதரித்த ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கூட 'ஸுதன்வா என்ற அரசனின் லௌகிக ஸஹாயத்தைத் தேடியதாகத் தெரியும்போது, பின்னால் கலி முற்றிக்கொண்டு வருவதால் ஜனங்களுக்கு ஆஸ்திக்யம் குன்றிவரும் நாளில் ஜாஸ்தியான லௌகிக ஸஹாயம் அவசியமேயாகுமென்று இவ்விரு ஆசார்யர்களும் உணர்ந்தார்கள். இவ்வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் ஆசார்யர்கள் தற்காலத்திலுள்ள சிஷ்யர்களுக்கு ஹிதம் செய்யவேண்டுமானால், அந்த ஸாமான்ய ஜனங்களின் மனதைக் கவரும்படிக்குள்ள

ஆடம்பரங்களையும், அவர்கள் சாஸ்திரக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்கும்படி செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தையும், ஸ்வீகரிப்பது அவசியமென்று தீர்மானித்தார்கள். அரசர்களும் இவ்வபிப்பிராயத்திற்கு இணங்கி இப்பீடாதிபதிக்கு ஸிம்ஹாஸனம், மகுடம், சத்திரம், சாமரம், பஞ்சகலசங்களுள்ள பல்லக்கு முதலிய ராஜசின்னங்களை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஸ்ரீ சங்கர பகவத்பாதரால் ஏற்படுத்தப்பட்ட ஆலயத்திலுள்ள ஸ்ரீ சாரதா பிம்பத்தை ஸ்வர்ண பிம்பமாக அமைத்து ஆலயத்தையும் பெரிதாகக் கட்டிவைத்தார்கள். கி. பி. 1346ல் "ஆசார்யரின் தபஸ் நிர்விக்னமாய் நடப்பதற்காக அவருடைய சிப்பந்திகளான நாற்பது பிராஹ்மணர்களின் போஷணத்திற்காக" ஒன்பது கிராமங்களைத் தானம் செய்து கொடுத்தார்கள். ஹரிஹர மஹாராஜாவிற்குப்பின் பட்டத்திற்கு வந்த அவர் தம்பி புக்க மஹாராஜா வேறு சில நிலங்களையும் வித்யா சங்கரரின் ஆலய கும்பாபிஷேக ஸமயத்தில் அறுநூறு வராகன் வரும்படியுள்ள நிலங்களையும் கொடுத்து 120 பிராஹ்மண குடும்பங்களை மடத்திற்கு ஸமீபத்தில் வஸிக்கும்படி ஏற்பாடு செய்துகொடுத்தார். இதுவரை ஸன்யாஸிகளின் ஏகாந்தவாஸமாயிருந்த ஸ்தலம் பட்டணமாக மாற ஆரம்பித்துவிட்டது. மஹாராஜாவின் விருப்பப்படி அநேகமாய் விஜயநகரத்திலேயே இருந்துவந்த வித்யாரண்யர் ஒருஸமயம் காசீ க்ஷேத்திரம் போய்த் திரும்பிவரத் தாமஸப்பட்டபடியால், பாரதீ கிருஷ்ண தீர்த்தருடைய ஸ்ரீமுகத்துடன் மஹாராஜாவும் தக்க மனுஷியர்களையனுப்பி, சீக்கிரம் திரும்பிவர வேண்டும் என்று பிரார்த்தித்ததின்பேரில் அவர் அப்படியே விஜயநகரம் வந்துவிட்டு சிருங்கேரிக்கு வந்தார். அந்த ஸமயமும் 200 வராகன் பேரீஜுள்ள நிலங்களை ஸமர்ப்பணம் செய்தார். இவ்விதமாக ஸ்ரீ மடத்திற்கு லௌகிக ஸம்பத்து வரவர விருத்தியடைந்து வந்தது. இவ்விரு மஹான்களுடைய பாண்டித்யமும், நம் ஹிந்து ஸமூஹத்தை

ஒன்றுபடுத்திய ஸாமர்த்தியமும், அந்த ஸமூஹத்தைக் காப்பாற்ற சக்தி வாய்ந்ததான ஒரு ராஜபரம்பரையை ஏற்படுத்தின வைபவமும், கணக்கிலடங்காத பலவித சாஸ்திரங்களை ஸகலரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி கிரந்தங்களை ரசனை செய்த கருணையும், செல்வாக்கும், நிர்வாஹ சக்தியும், யோக சக்தியும், இன்னம் பலவிதமான அபார சக்திகளும் இன்னம் அவர்கள் செய்துவைத்திருக்கும் கார்யங்கள் மூலமாக நன்கு துலங்குகின்றன.

இவர்களில் பாரதீ கிருஷ்ண தீர்த்தர் நாற்பத்தேழு வருஷகாலம் பீடாதிபத்யம் வஹித்து கி. பி. 1380-ல் ஸித்தி அடைந்தார். உடனே வித்யாரண்யர் பட்டத்திற்கு வந்து ஆறு வருஷகாலம் ஆசார்ய ஸ்தானம் வஹித்து வந்தார். இவருடைய மஹிமையைப்பற்றி முன்னமேயே கொஞ்சம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் இவருடைய மந்திர ஸித்தியைப்பற்றித் தனியாகச் சொல்லவேண்டிய அவசியமுண்டு. இவருடைய தபோபலத்தால் மஹாலக்ஷ்மி ஸ்வர்ணவர்ஷம் செய்ததாகவும், சிருங்கி என்ற ஒரு பிரஹ்மராக்ஷஸைக்கொண்டு அந்த தனத்தை உபயோகித்து விஜயநகர ஸம்ஸ்தான ராஜதானியை நிர்மாணம் செய்து கொடுத்ததாகவும், இவர் ராஜ மரியாதையுடன் பல்லக்கில் யாத்திரை செய்யும் ஸமயத்தில் ஒரு பல்லக்கில் மனிதர்களும் மற்றொரு பக்கத்தில் பூதங்களுமே பல்லக்கைத் தூக்கிச் செல்வார்களென்றும், சொல்கிறார்கள். இவர் பீடத்திற்கு வந்தவுடன் அப்பொழுது ராஜ்யபாரம் வஹித்துவந்த இரண்டாவது ஹரிஹர மஹாராஜாவும் தன் முன்னோர்களைப்போலவே பக்தியுடன் இவரிடம் ஈடுபட்டு, முன் கொடுக்கப்பட்ட நிலங்களுடன் வேறு நிலங்களையும் சேர்த்து கி. பி. 1381-ல் ஒரு சாஸனம் பிறப்பித்துக் கொடுத்தார். இவ்வாசார்ய பீடத்திற்கு வரும்போதே முதிர்ந்த வயதுள்ளவர். கி. பி. 1386ல் ஸித்தியடையும் போது இவருக்கு வயது 119 என்று சொல்லப்படுகிறது,

இம்மஹானின் ஞாபகார்த்தமாக மஹாராஜர் 500 வராகன் பேரீஜுள்ள ஏராளமான நிலங்களை மடத்திற்கு ஜாரி செய்ததுடன் இவர் பெயரால் வித்யாரண்யபுரம் என்ற ஒரு கிராமத்தையே சிருங்கேரிக்கு ஸமீபத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இவருக்குப்பின் வந்த சந்திரசேகர பாரதீ என்பவர் கி. பி. 1386 முதல் 1389 வரை மூன்றே வருஷங்கள்தான் ஆசார்யஸ்தானம் வஹித்தார். அவருக்குப்பின் வந்த நரஸிம்ஹ பாரதீ என்பவர் கி. பி. 1389 முதல் கி பி. 1408 வரை அதாவது 19 வருஷ காலம் பீடாதிபத்யம் வஹித்து வந்தார். இவர் காலத்தில் இரண்டாவது ஹரிஹர மஹாராஜா சிருங்கேரிக்கு வந்து ஆசார்யரை ஸேவித்து விட்டு வேறு சில பூமிகளையும் அர்ப்பணம் செய்தார். இதெல்லாம் சேர்ந்து இதற்குள் மடத்திற்கு 3003 வராகன் பேரீஜுள்ள, நிலங்கள் ஏற்பட்டுவிட்டபடியால் 'மூவாயிர வராஹ ஸீமை'' யென்று இந்த் பிரதேசத்திற்கு பிரஸித்தியேற்பட்டு விட்டது. இவருக்குப்பின் புருஷோத்தம பாரதீ என்பவர் கி. பி. 1408 முதல் 1448 வரை பீடத்தில் அமர்ந்திருந்தார். இவர் காலத்தில் இவர் சிஷ்யர்களான சங்கர பாரதீ, புருஷோத்தமாரண்யர், மாதவ பாரதீ, விசுவேசுவர பாரதீ, முதலானவர்கள் மூலம் ஏராளமான பூமிகள் ஸம்ஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்டவைகளாகயேற்பட்டன. இவர்களில் சங்கர பாரதீ என்ற சங்கரானந்த பாரதீதான் கி. பி. 1448 முதல் 1454 வரை ஜகத்குரு ஸ்தானம் வஹித்தார். இவர் கசரதர்ப்பணம் (कचरदर्पणम्) முதலிய ஜ்யோதிஷ க்ரந்தங்கள் எழுதினதாக சொல்லப்படுகிறது. பிறகு சந்திர சேகர பாரதீ ஸ்வாமிகள் கி. பி. 1454 முதல் 1464 வரை பத்து வருஷங்களும், நரஸிம்ஹ பாரதீ என்பவர் கி பி. 1464 முதல் 1479 வரை பதினைந்து வருஷங்களும், புருஷோத்தம பாரதீ என்பவர் கி. பி. 1479 முதல் 1517 வரை சுமார் 38 வருஷங்களும், முறையே பீடாதிபத்யம் வஹித்து வந்தார்கள்.

விஜயநகர ராஜ்யத்தில் ஹரிஹர மஹாராஜரின் பரம்பரையில் வந்த அரசர்களுக்குப் பலவித காரணங்களால் சக்தி வரவரக் குறைந்து வந்துவிட்டபடியால், அந்த ராஜ்ய ஸேனாதிபதிகளில் ஒருவராயிருந்த நரஸிம்ஹ நாயக்கர் என்பவரே கி. பி. 1490ல் ராஜ்ய நிர்வாஹத்தைக் கைப்பற்றிக்கொண்டு அரசராகிவிட்டார். அவருடைய இரண்டாவது குமாரர்தான் கிருஷ்ணதேவராயர் என்று பிரஸித்திபெற்ற மஹாராஜா. அவர் கி பி. 1509ல் அரசராக ஏற்பட்டதும், உலைந்துபோயிருந்த ராஜ்யத்தை மறுபடியும் ஒன்றுசேர்த்துப் பலப்படுத்தி, முன்னைவிடப் பல துறைகளில் விஜயநகர ஸம்ஸ்தானம் சோபிக்கும்படி செய்தார். இவர் தன் விரோதியான கலிங்க தேசத்து அரசனான வீரருத்ரகஜபதி மஹாராஜனை எதிர்த்து யுத்தம் செய்யப்போகும் காலத்தில் சிருங்கேரி பீடாதிபதியான இந்த புருஷோத்தம பாரதீ ஸ்வாமிகளின் விசேஷ அனுக்ரஹத்தைக் கோரிக்கொண்டார். ஆசார்யரும் தன் சிஷ்யரான வித்யாரண்யர் என்பவரை விஜயநகரத்திற்கு அனுப்பிக்கொடுத்து ஆசீர்வதித்தார்கள். அந்த ஸமயம் நவராத்ரி காலம். அப்பொழுது தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்காக ஹொய்யாரு என்ற கிராமத்தையே மஹாராஜா ஆசார்யருக்கு அர்ப்பணம் செய்தார். ஆசார்யருடைய அனுக்ரஹ விசேஷத்தினால் கஜபதிராஜனின் கோட்டைகளை தகர்த்து மலைப்பிரதேசங்களில் ஓடி ஒளிந்துகொள்ளும்படி செய்துவிட்டார். பிறகு அவ்வரசன் கிருஷ்ண தேவராயரிடமே சரணமடைந்து அவருடைய ஸ்நேஹத்திற்குப் பாத்திரமாகித் தன் புத்திரியையும் மஹாராஜருக்கு விவாஹம் செய்துகொடுத்தார்.

இந்த புருஷோத்தம பாரதீ ஸ்வாமிகளுக்குப்பின் வந்த ராமச்சந்திர பாரதீ கி. பி. 1517 முதல் 1560 வரை 43 வருஷங்கள் சிருங்கேரி பீடத்திலிருந்தார்கள். அப்பொழுது கிருஷ்ணதேவராயரின் மருமகன் ஸதாசிவ ராயர் விஜய

நகரத்திற்கு அதிபதியாகவிருந்து தன் ஸேனாபதியான ஹொன்னப்ப நாயக்கர் மூலமாக கி. பி. 1545ல் பஸ்திஹள்ளி என்கிற கிராமத்தை ஆசார்யருக்கு அர்ப்பணம் செய்தார். இவர் ஒரு ஸமயம் கார்களாவில் இருக்கும்போது அங்குள்ள ஜைனர்கள் இவரை நிர்ப்பந்தமாக தங்கள் ஆலயத்திற்கு வரவேண்டுமென்று கேட்டபோது இவர் தன் யோக சக்தியினால் அங்குள்ள ஜைன விக்ரஹத்தை பத்மநாபஸ்வாமியாக மாற்றிவிட்டார் என்று சொல்லப்படுகிறது. இவ்வாசார்யருக்குப்பின் கி. பி. 1560 முதல் 1573 வரை நரஸிம்ஹ பாரதீ என்பவர் பீடாதிபத்யம் வஹித்து வந்தார். இவர் காலத்தில்தான் தலைக்கோட்டையில் பீஜப்பூர் ஸுல்தான் முதலானவர்களுக்கும் விஜயநகரம் ஸம்ஸ்தானத்திற்கும் போர் ஏற்பட்டு அந்த ராஜ்யமே சிதறிப் போய் விட்டது. சில்லரையான அதிகார ஸ்தானம் பெற்றவர்களும் அந்த ஸமயத்தில் சிற்றரசர்கள் என்று ஸ்வதந்திரம் கொண்டாடக்கூடிய நிலமை ஏற்பட்டு விட்டது.

இவ்வாசார்யருக்குப் பின் கி. பி. 1573 முதல் 1576 வரை இன்னொரு நரஸிம்ஹ பாரதீயும், 1576 முதல் 1599 வரை வேறொரு நரஸிம்ஹ பாரதீயும், ஆசார்ய ஸ்தானம் வஹித்து வந்தார்கள். இவ்விதம் ஒரே பெயருடன் தொடர்ந்து மூன்று ஆசார்யர்கள் இருந்து வந்ததால் சிலர் தயாரித்த குருபரம்பரையில் இரண்டு நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளே என்று தவறுதலாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இம்மூன்று நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளுக்கும் பின்னால் வந்தவரும் நரஸிம்ஹ பாரதீயாக இருந்தபடியால் அவருக்கு அபிநவ நரஸிம்ஹ பாரதீ என்று பிரஸித்தி ஏற்பட்டது. அவர் மந்திர சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவரென்று தெரிகிறது. சிவகீதைக்கும் ஒரு வியாக்யானம் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவர் காலத்தில் பிடாரூர் என்ற இக்கேரி ஸம்ஸ்தானத்தில்

சிற்றரசர்களாயிருந்தவர்கள் லிங்காயத்து மதக்கொள்கை யுள்ளவர்கள். ஆனாலும் சிருங்கேரி பீடத்தில் விசேஷமான பக்தியையும் மரியாதையையும் காட்டி வந்தார்கள். பலவித கைங்கர்யங்களும் செய்திருக்கிறார்கள். கேலதி வெங்கடப்ப நாயக்கர் என்பவர் ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயத்திற்கு ஆறு ஸ்வர்ண ஸ்தூபிகள் செய்து கொடுத்தார். ஆசார்யரைத் தன் நகரத்திற்கு வரவழைத்து விசேஷமாக கௌரவித்து கி. பி. 1601ல் 50 வராகன் பேரிஜுள்ள நிலங்களை ஜாரி செய்திருக்கிறார். அந்தக் காலத்தில் பலவிதமான ராஜ்ய க்ஷோபங்களினால் மடத்திற்கும் சிரமம் ஏற்பட்ட ஸமயம் அவைகளை நிவர்த்தி செய்து மடத்தைத் தானே நிலை நிறுத்தினதாக கி. பி 1621ல் ஒரு சாஸனத்தில் கண்டிருக்கிறார்.

இந்த அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் கி. பி. 1622ல் ஸித்தியடைந்த பிறகு ஸச்சிதானந்த பாரதீ என்பவர் ஆசார்யஸ்தானத்தை ஏற்றுச் சுமார் 40 வருஷ காலம் அதாவது கி. பி. 1663 வரை பீடாதிபத்யம் வஹித்து வந்தார். இவர் காலத்தில் ஏற்பட்ட ராஜ்ய க்ஷோபத்தில் ஒரு ஸைன்யம் சிருங்கேரியிலேயே ராத்திரி வேளையில் திடீரென்று படையெடுத்து வரும் ஸமயம் அந்த நகர திக்பாலகர்களாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற பைரவர், ஹநுமார், துர்க்கை, காளீ இவர்களே ஆயுதம் எடுத்து அந்த ஸைன்யத்தைச் சின்ன பின்னமாக்கி விரட்டிவிட்டதாகவும், இவ்விதம் எதிர் யுத்தம் செய்தவர் யார் என்று ஜனங்கள் பிரமிக்கும்போது ஆசார்யருடைய ஸ்வப்நத்தில் அந்த தேவதைகள் ரக்தக் காயம்பட்ட அங்கங்களுடன் தர்சனம் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. சிருங்கேரியின் மத்தியிலுள்ள குன்றின்மேலிருக்கிற மலஹானி கரேசுவரர் ஆலயத்தில் அம்பிகை கோவில் இல்லாமலிருப்பதைக் கண்டு ஒரு ஆலயம் கட்டிவைத்து பவானியை பிரதிஷ்டை செய்து உத்ஸவாதிகளையும் ஆரம்பித்து

வைத்தார். அந்த அம்பிகையின் மூர்த்தியின் மூக்கில் புல்லக்கும், காதுகளில் தாடங்கங்களும் போடும்படிக்கு துவாரங்களுமிருப்பதாகத் தெரிகிறது. இவ்விதம் வேறு எந்த ஆலயத்திலும் கிடையாது. இவர் கவியாகவுமிருந்து குரு சதகம், மீனாக்ஷி சதகம், ராமசந்திரமஹோதயம், முதலிய கிரந்தங்களை இயற்றியிருக்கிறார். அவைகளுக்குத் தக்க பண்டிதர்களைக் கொண்டு வியாக்யானங்களும் எழுதி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இதுவும் தவிர சிருங்கேரி ஸம்ஸ்தானத்தின் அபிவிருத்தியைக் கருதிப் பாசனத் திற்கு வேண்டிய பல அணைகளைக் கட்டியும், பாக்குத் தோட்டங்கள் ஏற்படுத்தியும், மற்றும் பலவிதமாயும், வேண்டிய ஸௌகரியங்களைச் செய்துவைத்தார். கி. பி. 1653ல் கேலதி சிவப்பநாயக்கரின் உதவியைக் கொண்டு சிருங்கேரி ஜாகீரில் தீர்வைகள் விஷயமாக ஒரு ஏற்பாடு செய்தார். அவ்வரசனும் கி. பி. 1661ல் 120 வராகனுக்கு மேலுள்ள நிலங்களை ஆசார்யருக்கு ஸமர்ப் பணம் செய்தார்.

இவ்வாசார்யருக்குப் பின் நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் என்பவர் கி. பி. 1663 முதல் 1705 வரை 42 வருஷங்கள் பீடத்தில் இருந்திருக்கிறார். இவரிடமும் கேலதி அரச வம்சஸ்தர்களாகிய பத்திரப்ப நாயக்கர், ஸோமஸுந்தர நாயக்கர், ராணி சென்னம்மாம்பா, இவர்கள் விசேஷ பக்தி காட்டி வந்திருக்கிறார்கள். இவருக்குப்பின் வந்த ஸச்சி தானந்த பாரதீஸ்வாமிகள் கி. பி. 1705ல் பட்டத்திற்கு வந்தவுடன் மலஹானிகரேசுவரர் ஆலயத்திற்குத் தர்சனம் செய்யப் போனபொழுது அங்கு கணபதிக்கு ஆலயமில்லாதது கண்டு தன்னுடன் கொண்டுவரப்பட்ட பூஜாதிரவியங்களிலிருந்து ஒரு மஞ்சள் துண்டை எடுத்து அங்குள்ள ஒரு தூணில் கணபதியின் வடிவத்தை வரைந்து பூஜை செய்ததாகவும் அதுமுதல் அந்தத் தூணிலிருந்து கணபதியின் ரூபம் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதாகவும்

சொல்லப்படுகிறது. அந்தத் தூணில் பின்பக்கம் தட்டிப் பார்த்தால் விக்னேசுவரர் வெளிவந்திருக்கும் இடத்திற்கு நேராக கல்விற்குள் இடைவெளியிருப்பது சப்தத்தினால் நன்கு தெரிகிறது. இந்த ஸம்பவம் முன் சொன்ன அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் காலத்தில் நடந்ததென்று குருவம்சகாவ்யத்தில் கண்டிருக்கிறது. உலக வதந்தியை விட இதுவே பிரமாணமாக இருக்கலாமென்று தோன்று கிறது. இவ்வாசார்யர் கி. பி. 1741 வரை அதாவது சுமார் 36 வருஷகாலம் பீடாதிபத்யம் வஹித்துவந்தார்கள்.

ஸச்சிதாநந்த பாரதீ ஸ்வாமிகள் கி. பி. 1741ல் ஸித்தி யடைந்தவுடன் அவருடைய சிஷ்யரான அபிநவ ஸச்சிதா நந்த பாரதீ ஸ்வாமிகள் 28-வது ஆசார்யராக பீடத்திற்கு வந்து 26 வருஷங்கள் ஆசார்யஸ்தானம் வஹித்தார். அப் பொழுது பிடாரூர் அரசராயிருந்த ஸோமஸுந்தர நாயக் கர் இவரைத் தன் ராஜதானிக்கு அழைத்து விசேஷமாக ஸத்காரம் செய்து 360 வராகனுக்குமேல் பேரீஜுள்ள நிலங்களை மடத்திற்கு ஸமர்ப்பித்தார். நவராத்திரி உத்ஸ வத்திற்காக சிருங்கேரிக்குப் போகும் ஸகல ஸாமான்களுக் கும் சுங்கம் வசூலிக்கக்கூடாதென்று கி. பி. 1762ல் உத் திரவு பிறப்பித்தார். ஆசார்யர் ஸேதுயாத்திரை போகும் வழியில் அப்பொழுது மைஸூர் ராஜ்யத்தை அரசாண்டு வந்த இம்மடி கிருஷ்ணராஜ உடையார் தன் ராஜதானியில் விசேஷமாக மரியாதைகள் செய்து பூஜித்து 1200 வராகன் பேரீஜுள்ள பேலவாடி என்ற கிராமத்தை ஸர்வமான்ய மாக ஸமர்ப்பணம் செய்தார். சில வருஷங்களுக்குப்பின் இந்த மைஸூர் ராஜ்யம் ஹைதர்அலிகான் என்ற மஹமதி யரின் ஆளுகைக்கு வந்திருந்தபோதிலும் அம்மஹமதிய நவாபும் சிருங்கேரி பீடத்தில் விசேஷ கௌரவபுத்தி வைத் திருந்தார். ஒரு ஸமயம் புனாவில் பீஷ்வாவாக இருந்த ரகுநாதராவ் என்பவர் தன் ராஜ்யத்திற்கு ஆசார்யர் விஜயம் செய்து அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் அதற்

குள்ள ஸகல செலவுகளையும் தானே நிர்வஹிப்பதாகவும் சொல்லி வேண்டிக்கொண்டார். மைஸூர் ராஜ்யத்தின் எல்லை தாண்டும் வரை வேறொரு அரசர் செலவை ஏற்றுக் கொள்வது உசிதமில்லையென்று சொல்லி, இந்த யாத்திரை செலவிற்காக ரூ. 10000 கொடுத்து பந்தோபஸ்துக்காக தன்னுடைய துருப்புக்களையே ஆசார்யருடன் அனுப்பி வைத்தான். மஹாராஷ்டிரதேசத்து அரசர்களுக்கும் சிருங்கேரி பீடத்திற்கும் வெகு நாளாகத் தொடர்பு உண்டென்பது தனியாய் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. இவ்வாசார்யருக்குப்பின் அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் என்பவர் கி பி. 1767 முதல் 1770 வரை மூன்று வருஷங்கள் தான் பீடத்திலிருந்தார்.

அவருக்குப்பின் கி பி. 1770ல் ஸச்சிதாநந்த பாரதீ ஸ்வாமிகள் என்பவர் பீடத்திற்கு வந்து 44 வருஷகாலம் அதாவது 1814 வரை ஆசார்ய ஸ்தானத்தை நிர்வஹித்து வந்தார்கள். இவர் காலத்தில் ஹைதர்அலிகானின் மகனான டிப்புஸுல்தான் மைஸூர் ராஜ்யத்திற்கு அதிபதியாக இருந்துவந்தான். அவ்வரசரிடம் மந்திரி ஸ்தானம் பெற்று மிக்க செல்வாக்கும் ஸாமர்த்தியமும் பொருந்தி விளங்கியவர் பூர்ணய்யா என்பவர். அவர் மத்வமதத்தைச் சேர்ந்தவராக இருந்தும் பொதுவாக மற்றமதஸ்தர்களிடமும் விசேஷமாக சிருங்கேரி மடத்திலும் பற்றுள்ளவர். இந்த ஆசார்யர் முன்னுள்ளவர்களைப் போல வேதாந்த விசாரம், பூஜை, தபஸ், இவைகளில் அதிகருசியில்லாததுடன் சொக்கட்டான் ஆடுவதில் மிகவும் முனைந்திருப்பதாகக்கேட்டுத் துக்கமடைந்தார். ஆசார்யஸ்தானம் வஹித்து வருகிறவரிடம், தான் தர்மோபதேசம்செய்வது உசிதமில்லையென்றும் உணர்ந்தார். ஆனாலும் இவருக்குப் புத்தி போதிக்க வேண்டுமென்ற எண்ணமும் இருந்தது. வித்வான்களையெல்லாம் தருவித்து ஒரு பெரிய ஸதஸ் கூட்டி வைத்து அதில் ஆசார்யர் வாக்கியார்த்தம் சொல்லவேண்டு

மென்று கேட்டுக் கொண்டார். தனக்கு சாஸ்திர பரிசய மில்லையென்று வெட்கப்பட்டாவது இனி வாசிக்கட்டு மென்பது பூர்ணய்யாவின் அபிப்பிராயம். ஆனல் அவர் எதிர்பாராதபடி ஆசார்யர், 'சாஸ்திரங்களில் வாக்கியார்த்தம் சொல்லலாமென்றும் தன் பீடாதிபத்ய அந்தஸ்துக்கு இன்னொருவருடன் ஸமானமாய் உட்கார்ந்து கொண்டு வியவஹாரம் செய்வது உசிதமில்லையாதலால் மத்தியில் ஒரு திரை போட்டு விடவேண்டுமென்றும் சொன்னர். அப்படியே திரை போட்டுக்கொண்டு சாஸ்திர வியவஹாரம் வெகு அழகாக வெகு நுட்பமான விஷயங்களைக் குறித்து மேலான ரீதியில் நடந்துவரும் ஸமயத்தில், திரைக்குள்ளிருந்து வரும் த்வனி ஆசார்யருடையது இல்லையென்றும் ஏதோ பெண்மணியின் த்வனி யென்றும் பூர்ணய்யாவுக்குத் தென்படவே, அவர் மெதுவாக அத் திரையை ஒரு ஓரத்தில் தூக்கிப் பார்க்க, அங்கே ஸ்ரீசாரதாம் பாளே வீற்றிருக்கக்கண்டு வியந்தார். இவர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அம் மூர்த்தி மறைந்து ஆசார்ய ரூபமாக மாறியது கண்டு அளவில்லா ஆச்சர்யமும் பயமு மடைந்து அவர் பாத கமலங்களில் விழுந்து தான் செய்த அபசாரத்திற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பிறகு பூர்ணய்யாவும் டிப்பு ஸுல்தானும் சிருங்கேரி பீடத்தில் முன்னை விட ஜாஸ்தியான பக்தியுடனும் கௌரவபுத்தியுடனும் நடந்துகொண்டார்கள். அவர்கள் அடிக்கடி தங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்றும் தன்னுடைய சத்ருக்கள் தோல்வியடைவதற்காக ஸஹஸ்ர சண்டி யாகம் செய்து தனக்கு ஜயம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும், அதற்காக பிரதிதினம் ஆயிரம் பிராஹ்மணர்கள் வீதம் நாற்பது நாள்வரை தன் செலவில் ஸந்தர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் பலவிதமாகத் தங்கள் பக்தியைக்காட்டி மடத்திற்குக் கடிதங்கள் எழுதியிருக்

கிறார்கள். ஒரு ஸமயம் ஆசார்யர் புனாவுக்கு பீஷ்வாவின் அழைப்பின்பேரில் புறப்பட்டபோது தன் ராஜதானிக்கும் வந்து தன்னை அனுக்ரஹித்துவிட்டுப் போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். புனாவில் ஜாஸ்தி நாள் தாமஸம் ஏற்பட்டு விட்டபடியால், சீக்கிரமே மைஸூர் ராஜ்யத்திற்குத் திரும்பவேண்டுமென்று பிரார்த்தித்து எழுதின கடிதத்தில் விசேஷ பக்தியையும் அபிமானத்தையும் காட்டியிருக்கிறார். டிப்பு ஸுல்தான் இங்கிலீஷ்காரரிடம் தோல்வியடைந்த பிறகு முன்னுள்ள ராஜபரம்பரையே நிர்வாஹத்திற்கு வந்த ஸமயத்தில் பூர்ணய்யாவே மந்திரி ஸ்தானம் வஹித்து வந்தார். அவ்வரசரின் வேண்டுகோளின்படி கி. பி. 1811–12ல் மைஸூருக்கு விஜயம் செய்து அம்மஹாராஜரை விசேஷமாக அனுக்ரஹித்தார். இவ்வாசார்யர் கி. பி 1814ல் ஸித்தியடைந்தபிறகு அபிநவ ஸச்சிதானந்த பாரதி ஸ்வாமிகள் பீடத்திற்கு வந்து மூன்றே வருஷங்கள் அதாவது 1817 வரை ஆசார்யஸ்தானம் வஹித்தார்.

இவர் வரையுள்ள ஆசார்யர்களின் பூர்வாசிரம வரலாறுகள் தெரியவில்லை. ஒருக்கால் சிருங்கேரியிலுள்ள கணக்குகளையும் தஸ்தாவேஜுகளையும் பரிசிலனை செய்து பார்த்தால் விவரங்கள் அகப்படலாம். அது விஷயமாக யாரும் இதுவரை சிரமம் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. மடம் விஷயமாக உள்ள சில பொறுக்கின சாஸனங்களையும் கடிதங்களையும் வெகு காலத்திற்கு முன் மைஸூர் யூனிவர்ஸிடி ரிஜிஸ்டிராராயிருந்த பி. ஸுப்ரஹ்மண்ய அய்யர் முதலாவது வாலியூம் என்று அச்சிட்டிருக்கிறார். அதுவும் மடத்தின் சொந்த உபயோகத்திற்கே தவிர பொது ஜனங்களுக்கு கிடைக்கக்கூடிய முறையில் பிரசுரம் செய்யவில்லை. மேல் வாலியூம்களும் அச்சிடவில்லை. இவ் விஷயத்தில் மடம் அதிகாரிகள் கொஞ்சம் அக்கரையெடுத்துக்கொண்டால் எவ்வளவோ விஷயங்கள்

பொது ஜனங்களுக்கு தெரிந்து கொள்வதற்கு ஸெளகரியம் இருக்கும்.

இவ்வாசார்யருக்குப் பின் பீடத்திற்குவந்த ஆசார்யரை நேரில் தர்சித்திருக்கக் கூடியவர்கள் இன்னம் இருக்கிறார்கள். அவருக்குப்பின் வந்த இரண்டு ஆசார்யர்களைத் தர்சித்தவர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். ஆகையால் இம் மூன்று ஆசார்யர்களையும் பற்றி இக்காலத்தில் விபரங்கள் கொஞ்சம் அதிகமாகவே தெரிந்துகொள்ள அவகாசமிருக்கிறது. இந்தக் காரணத்தினாலேயே இவர்களைப் பற்றி கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்லமுடிகிறது. விஸ்தாரமாகச் சொல்ல முடியாததினால் முன்னோர்கள் ஞானத்திலாவது தபஸிலாவது இவர்களைவிட குறைந்தவர்கள் என்று வாசகர்கள் நினைத்துவிடக் கூடாதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். எல்லாருமே மஹான்கள். ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரின் பரம்பரையில் வந்து அவருக்குப் பிரதிநிதியாக அந்தந்த காலத்தில் பீடாதிபத்யம் வஹித்து வைதிகதர்மஸம்ரக்ஷணை செய்து இவர்கள் எல்லோருமே ஜனங்களுக்கு விசேஷமாக அனுக்ரஹம் செய்து வந்திருக்கிறார்கள்.

## அத்யாயம் 7

### ஸ்ரீ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள்

நம் பரதகண்டத்தில் எவ்வளவு விதமான ராஜ்ய க்ஷோபங்களும் கலகங்களும் மதச் சண்டைகளும் ஏற்பட்டிருந்தபோதிலும் அந்தந்தக் காலத்திலிருந்த அரசர்களும் பிரஜைகளும் சிருங்கேரி பீடாதிபத்யம் வஹித்து வந்திருக்கும் ஆசார்யரவர்களிடம் ஒரேவிதமாக பக்தியையும் மரியாதையையும் காட்டி வந்திருக்கிறார்கள். இதற்குக்காரணம் அவ்வாசார்யர்களுடைய தூய்மையான



ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்

நடத்தையினாலும், சாஸ்திரங்களில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த தெளிவான ஞானத்தினாலும், அத்யாத்ம விஷயமாக உள்ள ஆத்ம அநுபவத்தினாலும், ஸர்வப்ராணி வர்க்கங்களிலும் ஒரேமாதிரி வைத்துள்ள அன்பினாலும், அவர்கள் அடைந்த மேன்மை என்பதேயாகும். விஜயநகரம் ராஜ்யம் ஹிந்துக்களுடைய ஆளுகையில் இருக்கும் ஸமயத்திலும், பிற்பாடு உலைந்து பல சிற்றரசர்களாக ஏற்பட்ட ஸமயத்திலும், இவர்களுக்கு விரோதிகளாக ஏற்பட்ட முகமதியர்கள் முதலானவர்களால் கூட இப்பீடத்திற்கு எவ்வித இடைஞ்சலும் கெடுதலும் ஏற்பட்டதில்லை. தவிரவும், அவர்கள் கூட விசேஷமாக மரியாதை செய்து பலவிதத்தில் உதவிகளும் செய்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

இவ்விதம் மஹான்களால் அலங்கரிக்கப்பட்டு வந்திருக்கும் ஸ்ரீசாரதா பீடத்தில் 31வதாக ஆசார்ய ஸ்தானம் வஹித்த ஸச்சிதானந்த பாரதீ ஸ்வாமிகள் கி. பி. 1817ல் ஸித்தியடைவதற்கு முன்பாக சிருங்கேரியிலேயே பிறந்து வளர்ந்த ஒரு பாலகனை அழைத்து ஸந்யாஸம் கொடுத்து அவரையே இப்பீடாதிபத்யத்திற்கு நியமனம் செய்தார். அவருக்கு நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் என்ற யோக பட்டத்தையும் அளித்தார். இவர் 1797-பிங்கள வருஷத்தில் ஜனித்து, வெகு ஆசாரபரராகவும் தர்ம நிஷ்டராகவும் பிரம்ஹசாரியாக இருந்து வருகையில் கால் நடையாகவே காசிக்கு இரண்டு தடவை யாத்திரை செய்து பல பண்டிதர்களிடம் சுசுரூஷை செய்து சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டார். அக்காலத்தில் காசி க்ஷேத்திரத்தில் அதிபிரஸித்தராயிருந்த அஹோபல பண்டிதரின் சிஷ்யரான வாஞ்சேசுவர சாஸ்திரிகள் என்ற குட்டி சாஸ்திரிகளிடம் வேதாந்த சாஸ்திரம் அப்பியஸித்ததாகச் சிலர் சொல்கிறார்கள். இவர் உத்தரதேச யாத்திரையை முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிவந்த ஸமயம், எதிர்

பாராமல் இந்த பீடாதிபத்யமும் கிடைத்துச் சில நாட்களுக்குள் குருநாதரும் ஸித்தியடைந்துவிட்டபடியால், பீடத்திற்குரிய ஸம்பிரதாயங்களைக்கூடத் தெரிந்துகொள்வதற்கு அவகாசமில்லாமற் போய்விட்டது. ஆனாலும், அந்த ஸ்தானத்தை வஹிப்பதற்கு வேண்டிய யோக்யதை ஸம்பாதிக்க வேண்டுமென்ற அவா இருந்தபடியால் அநேக பண்டிதர்களைப் பல இடங்களிலிருந்து வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய வஸதிகளையெல்லாம் செய்து கொடுத்து அவர்கள் மூலமாகத் தன் சாஸ்திர ஞானத்தை விருத்தி செய்து கொண்டு வந்ததுடன் அதை அநுபவத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று பலவிதமாக தபஸும் யோகமும் அப்யஸித்து அவர் பலவித ஸித்திகளை அடைந்ததாகத் தெரிகிறது.

அவர் பீடாதிபத்யம் வஹித்துவந்த 62 வருஷகாலங்களில் 40 வருஷங்களுக்குமேல் ஸஞ்சாரத்திலேயே இருந்து வந்ததாகவும் தெரிகிறது. ஆஸேது ஹிமாசலம் உள்ள சிஷ்யர்களுக்கு வர்ணாசிரம தர்மங்களில் விசேஷ சிரத்தையும் அநுஷ்டானமும் ஏற்படுவதற்காகவே இவ்விதம் அவர் பரம கருணையுடன் ஸஞ்சாரம் செய்து வந்திருக்கிறார். அவருக்கு தேவபாஷையான ஸம்ஸ்க்ருதம், தாய் பாஷையான தெலுங்கு, தேச பாஷையான கன்னடம், இவைகளைத் தவிர சிஷ்யர்களுக்குப் போதிக்கவேண்டியதற்காகத் தமிழ், மஹாராஷ்டிரம், குஜராத்தி, இந்துஸ்தானி முதலான பாஷைகளிலும் நன்கு பரிசயம் ஏற்படுத்திக் கொண்டார் அவர் காலத்தில் இருந்த மன்னர்களான மைசூர், திருவனந்தபுரம், புதுக்கோட்டை, பூனா, இந்தூர், பரோடா, மால்வா முதலிய ஸம்ஸ்தானாதிபதிகள் விசேஷ பக்தியுடன் இவரை ஆராதித்துவந்ததாக அக்காலத்திய சாஸனங்களாலும் பத்திரிகைகளாலும் தெரியவருகிறது.

அவர் தன் நாற்பதாவது வயதிலிருந்து காய் கிழங்குகளையே ஆஹாரமாக வைத்துக்கொண்டு அதையும் வரவரக்

குறைத்துக்கொண்டு காலக்ரமத்தில் பாகற்காயை மட்டும் உபயோகித்து வந்தபடியால் அவருக்குப் பாகற்காய் ஸ்வாமிகள் என்ற பிரஸித்தியும் ஏற்பட்டது. ஆஹாரத்தைப்போல நித்திரையையும் ஜயித்துவிட்டார். பிரதிதினமும் மந்திர ஜபம், தேவதாராதனை, ஆத்ம நிஷ்டை, இவைகளில் 20 மணி நேரம் வரை இருந்துவருவது ஸஹஜமாகிவிட்டது. அவர் நித்திரை செய்ததாக யாரும் பார்த்ததில்லை. அவர் ஒரு சமயம் பங்களூருக்கு விஜயம் செய்திருந்தபொழுது மைஸூர் ஸம்ஸ்தானம் கமிஷனராயிருந்த பௌரிங் என்ற ஐரோப்பியர் முன்தகவலன்னியில் அர்த்த ராத்திரிக்குமேல் வந்து ஸ்ரீ ஸ்வாமிகள் சந்திரமௌளீசுவரர் பூஜையில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் பல கடிதங்கள் மூலமாகத் தன்னுடைய பக்தியைத் தெரிவித்திருக்கிறார்.

தான் ஸங்கல்பித்த எந்தக் காரியமாயிருந்தாலும், அதை நிறைவேற்றுவதில் எவ்வளவு இடைஞ்சலிருந்தாலும், இவ்வாசார்யர் கொஞ்சமேனும் கவனிக்காமல் அதை நிறைவேற்றியே விடுவார். இந்த ஸ்வபாவத்தை அப்பொழுது மைஸூர் மஹாராஜாவாயிருந்த மும்மடி ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் செய்திருக்கும் குரு அஷ்டோத்தர சத நாமாவளியில் 'ப்ரதிஜ்ஞாதார்த்த ஸாதக:' (प्रतिज्ञातार्थसाधकः) என்ற நாமாவினால் எடுத்துக்காட்டியிருக்கிறார். இவருக்கு வயதான பிறகு கொஞ்சம் காது மந்தம் ஏற்பட்டபோது இவரே 'நான் சொல்வதை எல்லாரும் கேட்கவேண்டும். மற்றவர்கள் சொல்வது என் காதில் விழாது' என்று விளையாட்டாகச் சொல்வாராம். இந்த நாமாவளி விஷயமாக நடந்த ஒரு ஸம்பவத்தையும் இங்கு காட்டுவது உசிதமாகும். நாமாவளியை மஹாராஜா ஆசார்யாரிடம் ஸமர்ப்பித்தபோது அவர் எவ்வித அபிப்பிராயமும் சொல்லாமல் இருக்கும் ஸமயத்தில் மஹாராஜா வற்புறுத்தியதின்பேரில் "இந்த ஸ்தோத்ரம் என்னைப்

பற்றித்தான் எழுதியிருக்கிறதென்று தெரியும்படி ஒரு நாமா போடவேண்டாமா?" என்று ஆசார்யார் கேட்டதற்கு 'உத்தரவானால் சேர்த்துக்கொள்கிறேன்' என்று சொன்னவுடன், "चण्डीश्वरकृपालब्धत्राधिर्यपरिभूषितः (சண்டிகேசுவரருடைய கிருபையால் கிடைத்த செவிட்டுத்தனத்தினால் அலங்கரிக்கப்பட்டவர்) என்று இருந்தால் என்னைப் பற்றினதுதான் இந்த ஸ்தோத்ரம் என்று தெரியும்" என்று புன்சிரிப்புடன் சொன்னார்.

ஒருஸமயம் இவர் பூனா பக்கம் யாத்திரை செய்து கொண்டிருக்கையில் நடுக்காட்டில் ராத்திரி பூஜையை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கும்போது திருடர்கள் சூழ்ந்துகொண்டார்கள். சந்திரமௌளீசுவரர் மேலுள்ள ஸகல ஆபரணங்களையும் எங்களுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று அவர்கள் சொன்னவுடன் ஆசார்யார் 'முடிந்தால் எடுத்துக்கொண்டு போங்கள்' என்று சொல்லி அவர்கள் விரித்திருந்த கருப்புக்கம்பளியில் எல்லாநகைகளையும் போட்டார். அப்படியே தூக்கப் பிரயத்னம் பண்ணுகையில் கனம் ஜாஸ்தியாயிருப்பதாகத் தெரிந்து, நாலு மூலைகளிலும் நாலுபேர் பிடித்துக்கொண்டு தூக்கினார்கள். கம்பளி கிழிந்துபோய்க் கையுடன் வந்துவிட்டது கம்பளியில் ஆபரணங்கள் பட்ட இடங்களெல்லாம் கருகியிருக்கக் கண்டு பீதியையடைந்தார்கள். திருடர்கள் தாங்கள் செய்த அபசாரத்திற்கு மன்னிப்புக் கேட்டபோது "பகவான் திருடர்களுக்கும் தலைவன் (तस्कराणां पतिः) என்பதை மறந்துவிடாதீர்கள்" என்று சொல்லி அவர்களுக்கு அபயங்கொடுத்தார்.

ஒரு ஊரில் அத்வைத மதத்திற்கு விரோதமாயிருப்பவர்கள் ஆசார்யார் போய்க்கொண்டிருக்கும் பல்லக்கின் மேல் கல் எறிந்தார்கள். அப்போது பரிஜனங்கள் "கல் எறிகிறார்களே, வேறு வழியாய்ப் போகலாமா?" என்று கேட்டதற்கு "எறியட்டும்" என்று ஸ்வாமிகள் சொல்லி

வாய் மூடுமுன் கல்லெறிந்தவர்களின் வீடுகளில் தீப்பற்றிக் கொண்டது. பெரியோர்களுக்கு ஸங்கல்பமில்லாமற் போனாலும் அவர்கள் வாக்குப் பலித்துவிடுமென்பதற்கு இதுவே நிதர்சனமாகும்.

இவர் மத்ய மாகாணத்தில் ஸஞ்சாரம் செய்யும்போது வழக்கப்படி அங்குள்ள அரசர் இவரை எதிர்கொண் டழைக்க வேண்டிய முறையை விட்டு கோட்டை வாசலுக்கு வரமுடியவில்லை என்று சொல்லியனுப்பிய ஸமயம் "அப்படியே இருக்கட்டும்" என்று ஆசார்யார் சொன்ன வுடன், அவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டு மிகவும் சிரமத் தையடைந்து, ஊருக்கு வெளியில் முகாம் செய்துகொண் டிருந்த ஸ்வாமிகளிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கிரமப் படி மரியாதை செய்தார். பிறகு ஆசார்யாரும் ஊருக்குள் விஜயம் செய்து அந்த ராஜனுக்கு ரோகமில்லாமல் செய்து அநுக்ரஹம் செய்தார்.

இவர் தக்ஷிண தேசத்தில் காளஹஸ்தி, திருப்பதி, காஞ்சீபுரம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம் வழியாக இராமேசுவரத்திற்கு கி பி. 1838ல் விஜயம் செய்தார்கள். அங்கு ஆலயத்திலுள்ள கோடி தீர்த்தம் என்பதில் ஸ்நானம் செய்யப்போனபோது, அங்குள்ள ஆர்ய பிராமணர் என்ற வகுப்பினர் தாங்கள்தான் ஜலத்தை எடுத்துக்கொடுக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்ததால், அந்தத் தீர்த் தத்தை உபயோகப்படுத்தாமல் ஸர்வதீர்த்தம் என்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துவிட்டுப் போனார்கள். அது முதல் அந்தக் கோடிதீர்த்தத்தை எல்லா ஆஸ்திக ஜனங் களும் பஹிஷ்காரம் செய்து விட்டபடியால் அவ்வகுப் பாருக்கு வரும்படி இல்லாமற் போனதுடன் பலவிதமான கஷ்டங்களும் அநுபவிக்கும்படி ஏற்பட்டது. மறு தடவை ஸ்ரீ ஸ்வாமிகள் கி. பி. 1873ல் தக்ஷிண யாத்திரையாகச் சென்ற ஸமயம் ஆசார்யாளிடம் வந்து தங்கள் அபசாரத்தை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும் என்று

இவ்வகுப்பார் கேட்டுக்கொண்டார்கள். உடனே கருணை யுடன் ஸர்வ தீர்த்தத்திலிருந்து தன் கமண்டலுவில் தீர்த்த மெடுத்துக்கொண்டு போய் கோடி தீர்த்தத்தில் சேர்த்து விட்டு இனி அங்கேயும் ஸ்நானம் செய்யலாமென்று ஆக்ஞாபித்தார்கள்.

1872ல் மதுரைக்கு வந்திருந்த ஸமயம், மீனாக்ஷியம்மன் கோவிலில் கர்பகிருஹத்திற்குச் சென்று நேரில் அர்ச்சனை செய்யக்கூடாதென்று சில அர்ச்சகர்கள் ஆக்ஷேபித்தபோது அவர் அந்த அம்மனுடைய கலையை இரண்டு தேங்காய் களில் ஆகர்ஷணம் செய்துகொண்டு தன் மடத்திற்குத் திரும்பிவந்து விட்டார். அதுமுதல் அவ்வாலயத்திற்குத் தரிசனத்திற்குப் போவது நின்றுவிட்டது. யாரேனும் போனாலும் அர்ச்சகர்களிடத்தில் கொடுக்காமல் பலி பீடத் திற்குச் சமீபத்தில் தாங்களே தேங்காயை உடைத்து நிவே தனம் செய்துவிட்டுக் கர்ப்பூர ஹாரத்தி செய்து திரும்பி விடுவார்கள். இந்தப் புது அநுஷ்டானத்தை நியமத் துக்குக் கொண்டுவந்தவர்களில் முக்யமானவர் மதுரையில் வக்கீலாகவிருந்து பிறகு சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜா யிருந்த ஸர். S. ஸுப்ரஹ்மணிய அய்யர். அவ்வர்ச்சகர் களுக்கும் பலவிதமான சிரமங்கள் ஏற்பட்டதன்பேரில், ஆசார்யார் முகாம் செய்திருக்கும் இடத்திற்குப் போய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். அதன்பேரில் மறு படியும் மதுரை வந்து தேங்காய்களில் ஆகர்ஷணம் செய் திருந்த கலையை மறுபடியும் கோயிலிலுள்ள மூர்த்தியில் ஆவாஹனம் செய்துவிட்டு, தாமும் விசேஷமான பூஜை களைத் தம் கையினாலேயே செய்தார். இந்த ஸம்பவத்தின் ஞாபகார்த்தமாக சிருங்கேரி மடத்திலும் மீனாக்ஷிஸுந்த ரேசுவரருக்குப் பிரதி தினமும் மஹா நிவேதனம் நடந்து வருகிறது.

இவர்கள் ஒரு ஊரில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு வீட்டில் ஜாகை வைத்துக்கொண்டிருக்கும்போது அர்த்த

ராத்திரியில் பூஜா ஸமயத்தில் ஒரு தூணில் சாய்ந்துகொண்டிருந்த ஒரு மனித ரூபத்தைக் கண்டு உற்றுப்பார்த்ததில் விஷயம் தெரிந்து வலதுகையில் கொஞ்சம் தீர்த்தமெடுத்து நரஸிம்ஹ மந்திரத்தினால் அபிமந்த்ரணம் செய்து அதன் பேரில் ப்ரோக்ஷணம் செய்தார். அது உடனே அலறிக்கொண்டு ஓடிப்போய்ப் பின்பக்கமுள்ள ஒரு கிணற்றில் பாய்ந்தது. அது ஒரு ப்ரம்ஹரக்ஷஸ் என்றும் இனிப் பயப்படவேண்டாம் என்றும் அங்குள்ளவர்களுக்கு ஆசார்யார் அபயங்கொடுத்தார்கள்.

சிருங்கேரியில் நடத்தவேண்டிய உத்ஸவங்களையுத்தேசித்து குவாலியர், இந்தூர், அக்கல்கோடு, தார் முதலான ஸம்ஸ்தானங்களிலிருந்து பிரதி வருஷமும் காணிக்கை கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். மைஸூருக்கு கி. பி 1827—28ல் விஜயம்செய்திருந்த ஸமயம் சில கிராமங்களை மைஸூர் மஹாராஜா தானம்செய்தார். இவரும் சாமராஜ நகரத்தில் உள்ள சிவாலயத்திற்கு ஒரு ரதம் செய்துகொடுத்தார். ஆசார்யார் உத்தரதேச யாத்திரை போய் வெகுநாள்கழித்துத் திரும்பிவந்தபோது மஹாராஜா கேட்டுக்கொண்டதற்கு இசைந்து மைஸூருக்கு ஆசார்யார் விஜயம்செய்து மஹாராஜாவுக்கு சிவகீதை உபதேசம் செய்தார். மஹாராஜாவும் தன் நன்றியைக் காட்டுவதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 12000 கொடுத்துவருவதாக ஏற்றுக்கொண்டார்.

யாத்திரையை முடித்துக்கொண்டு சிருங்கேரிக்குத் திரும்பி வந்தபோது தனக்கு 60 வயது ஆகிறபடியால் ஒரு சிஷ்யரை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றியதன்பேரில் சாரதாம்பிகையின் ஆக்ஞையைப்பெற்று யாத்திரையாக மைஸூருக்கு வந்தார். அவ்விடம் சிவஸ்வாமி என்கிற பையனுக்கு ஆசிரமம்கொடுத்து தன்னுடனேயே நஞ்சன்கோடு, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, மதராஸ், வட ஆற்காடு, கடப்பை, கர்நூல்

முதலிய ஜில்லாக்களின் வழியாக 12 வருஷ காலம் ஸஞ்சாரம் செய்துவிட்டு 1877ல் சிஷ்ய ஸ்வாமிகளுடன் சிருங்கேரிக்குத் திரும்பிவந்தார்.

திரும்பி வரும்போது அவருக்கு வயது 80. சிஷ்ய ஸ்வாமிகளுக்கு 20. வயது முதிர்ந்துவிட்டபடியால் நித்ய பூஜையையே சிஷ்ய ஸ்வாமிகளிடம் ஒப்பிக்கும்படி நேரிட்டது. அப்படியிருக்கையில் கோகர்ணம் போய் ஸ்ரீ மஹாபலேசுவரரைத் தரிசித்து வரவேண்டுமென்ற எண்ணம் ஆசார்யாருக்கு ஏற்பட்டது. அவருடைய தேக ஸ்திதியில் அதை நடத்திவைக்க யாருக்கும் தைரியமில்லை. அப்படியிருக்கையில் ஒருநாளிரவில் ஸ்ரீமத் ஆசார்யார் கோகர்ணத்திலிருந்து தன்னை அழைத்துப்போக பிராம்ஹணர் ஒருவர் வந்ததாகவும், அதற்கிசைந்து தான் போய்த் தரிசனம் பண்ணிவிட்டதாகவும் சொன்னவுடன் பேச்சு நின்றுவிட்டது. மறுநாள் (23—5—1879) விதேஹ கைவல்யத்தையடைந்தார். அவர் தரிசனம் செய்ததாகச் சொன்ன ஸமயம் கோகர்ணத்திலுள்ள சிருங்கேரி மடம் அதிகாரி கோபால சாஸ்திரிகள் என்பவர் மஹாபலேசுவரர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளைத் தரிசித்ததாக ஸ்வப்னம் கண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய அதிஷ்டானம் ஸ்ரீ சாரதாம்பிகையின் ஆலயத்திற்குத் தென்புறத்தில் இவருடைய குருவும் பரமகுருவுமான அபிநவ ஸச்சிதாநந்த பாரதீ ஸ்வாமிகள், ஸச்சிதாநந்த பாரதீ ஸ்வாமிகள், இவ்விருவருடைய அதிஷ்டானங்களுக்கும் மத்தியில் ஏற்பட்டு நித்திய பூஜாதிகள் நடந்துவருகின்றன. இவர் ஸித்தியான பிறகு தன் சிஷ்யர் மிகவும் துக்கப்படுவதைக்கண்டு "நான் எங்கே போய்விட்டேன்? இங்கேயேதான் இருக்கிறேன்" என்று ஸ்வப்னத்தில் அனுக்ரஹம் செய்தபடி இப்பொழுது பரமேசுவரரூபமாயிருந்து ஜனங்களுக்கு அனுக்ரஹம் செய்துகொண்டிருக்கிறார் என்பதில் ஸந்தேஹமில்லை.



ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள்

## அத்யாயம் 8

### ஸ்ரீ அபிநவ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள்.

ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகளுக்குப் பின் 33-வது ஆசார்யராக வந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகளை ஸ்ரீசங்கரபகவத்பாதரின் அவதார மென்றே சொல்வார்கள். அவர் மைஸூர் ஸம்ஸ்தானம் ஆஸ்தான வித்வானாயிருந்த சதகோடி ராம சாஸ்திரிகள் என்று மிகவும் பிரஸித்தராயிருந்த மஹானுடைய இளைய குமாரர். பால்யத்திலேயே இவருடைய தகப்பனாரும் தாயாரும் காலகதியடைந்துவிட்டபடியால் தமயனாரான லக்ஷ்மீநரஸிம்ஹசாஸ்திரிகளின் ஸம்ரக்ஷணையிலேயே இருந்து அவரிடத்திலேயே சாஸ்திரங்களை அப்யஸித்தார். இவருக்கு எட்டு வயதிருக்கும் ஸமயம் சிருங்கேரி ஆசார்யரான நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் சிஷ்ய பரிக்ரஹத்தை உத்தேசித்து யாத்திரையாகப் புறப்பட்டு மைஸூர் வந்த ஸமயம் லக்ஷ்மீ நரஸிம்ஹ சாஸ்திரிகளைத் தருவித்து சிரமப் பட்டு அவரை ஸம்மதிக்கும்படி செய்து இப்பாலகருக்கு கிரமப்படி ஸன்யாஸம் கொடுத்தார். அன்றிரவே ஸ்வப்நத்தில் பால ஸ்வாமிகள் "ஸர்வோऽஹம்" என்று மூன்று தடவை சொன்னதிலிருந்து இவருடைய அபார யோக்கியதையை அப்பொழுதே ஆசார்யர் உணர்ந்து வெகு ஸந்தோஷப்பட்டார். அவ்வருஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை மைஸூருக்கு ஸமீபத்திலுள்ள பச்சிம வாஹினி என்ற ஸ்தலத்தில் நடத்திவிட்டுப் பாலஸ்வாமிகளுடனேயே தக்ஷிண தேச யாத்திரை பன்னிரண்டு வருஷ காலம் நடத்தினார். யாத்திரையின் மத்தியிலேயே பால ஸ்வாமிகளுக்கு வேண்டிய வித்யாப்யாஸங்களைச் செய்வித்து அவருக்கு இப்பீடாதிபத்யம் வஹித்து வருவதற்கான வைதுஷ்யம், அனுஷ்டானம், ஆத்மானுபவம் முதலான யோக்கியதைகளை ஏற்படுத்திக்கொடுத்தார்.

சிருங்கேரிக்குத் திரும்பிவந்து இரண்டு வருஷங்களுக்குள் குருநாதர் ஸித்தியடைந்துவிட்டபடியால் இவரே அவ்வாசார்ய ஸ்தானத்தில் அபிஷேகம் செய்யப்பட்டார். பிறகு குருநாதருடைய பாதுகா பூஜை, தன் நித்திய ஆஹ்நிகங்களுடன் ஸ்ரீ சாரதா சந்திர மௌளீசுவரர் பூஜையைச் செய்துகொண்டும் தக்க சிஷ்யர்களுக்குத் தர்க்கவேதாந்த சாஸ்திரங்களில் பாடம் சொல்லிக்கொண்டும் வந்த போதிலும் ஏகாந்த வாஸத்திலும் யோக நிஷ்டையிலும் ஈடுபட்டவராக ஆறு வருஷ காலங்கள் சிருங்கேரியிலேயே தங்கியிருந்தார். பிறகு குருநாதரின் ஆக்ஞையைப் பெற்று 1886ல் புறப்பட்டு சிவமொக்கா மார்க்கமாக கோகர்ணம் போய் ஸ்ரீ மஹாபலேசுவரரைத் தர்சித்துக்கொண்டு தார்வர் வழியாக ஜம்கண்டி ஸம்ஸ்தானம் போய் அங்குள்ள ராஜாவான ராமசந்திர ராவ் அப்பாஸாகெப் என்பவரால் விசேஷ பக்தி புரஸ்ஸரமாக ஆராதிக்கப்பட்டார். அங்கிருந்து மீராஜ், சாங்கலி, குருந்துவாடா முதலான அரசர்களால் ஸத்காரம் செய்யப்பட்டு கோல்லாபுரம் சென்று மஹாலக்ஷ்மியைத் தர்சனம் செய்துகொண்டார். பிறகு சங்கேசுவர மடம் போய்விட்டு பூனா ஸமீபம் வரையில் சென்றவர் சோலாப்பூர், பீஜப்பூர் வழியாகத் திரும்பி பல்லாரிக்கு விஜயம் செய்தார்கள்.

பல்லாரியிலிருந்து புறப்பட்டுப் போகும்வழியில் பேலகுப்பே என்ற கிராமத்தில் தங்கின ஸமயம் ஸ்ரீசந்திர மௌளீசுவரர், ரத்னகர்ப்ப கணபதி இவர்கள் வைத்திருந்த பெட்டி முதலான ஸாமான்கள் திருட்டுப்போக, நான்கு நாள் உபவாஸமிருந்து நரஸிம்ஹ மந்திர ஜபத்திலேயே ஈடுபட்டு ஆசார்யர் இருந்துவிட, ஐந்தாவது தினம் நான்கு மைல் தூரத்தில் ஒரு வயலில் அப்பெட்டி மாத்திரம் கிடைத்ததாகத் தகவல் வந்தது. உடனே மடம் பல்லக்கை அனுப்பி ஸ்ரீ சந்திரமௌளீசுவரர் ரத்ன கர்ப்ப கணபதி இவர்களை வேதகோஷாதி வைபவத்துடன் ஊர்வலமாய்

எடுத்து வந்தார்கள். அம் மூர்த்திகளைக் கண்டவுடன் ஆசார்யரின் நேத்திர கமலங்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பிரவஹித்தது. உடனே ஸ்நானம் செய்து அன்றிரவு பூராவும் அப்பூஜையிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இந்த ஸம்பவம் ஏற்பட்டபிறகு வேறு இடங்களில் தாமதிக்க மனமில்லாமல் சீக்கிரமாக சிருங்கேரிக்கே திரும்பிவந்துவிட்டார்கள்.

அதன் பிறகு இரண்டு வருஷங்கள் சென்று, அதாவது 1889ல் மைஸூர் மஹாராஜா சாமராஜ உடையாரின் வேண்டுகோளின்படி மைஸூருக்கு விஜயம் செய்து அவரால் விசேஷமாக ஆராதிக்கப்பட்டு அவ்வருஷ சாதுர்மாஸ்யத்தையும் மஹாராஜாவின் செலவில் அங்கேயே நடத்தினார்கள். அப்பொழுது பிரஸித்தர்களாயிருந்த பண்டிதர்களைத் தருவித்து கணபதி ஸபையையும் அதிவிமர்சையாக நடத்தினார்கள். அப்பொழுது திவானாயிருந்த ஸர் K. சேஷாத்திரி அய்யர் முதலான பிரபுக்களாலும் மற்றும் ஸகல ஜனங்களாலும் போற்றப்பட்டுக் கொஞ்ச நாள் தங்கி விட்டு நஞ்சன்கூடு, சாமராஜ நகர், எடத்துரை, பாகமண்டலம் வழியாகத் தலைக்காவேரிக்குப் போய்விட்டு சாமராஜ நகரம் திரும்பிவந்து கணவாய் இறங்கி ஸத்யமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, கரூர் மார்க்கமாக அய்யம்பாளையம் போய்ச்சேர்ந்தார்கள். அங்கே தாண்டவராய பிள்ளையென்ற பக்தசிகாமணி கட்ட உத்தேசித்திருக்கும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி கோவிலுக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டி விட்டு இதர சிவ விஷ்ணுவாதி மூர்த்திகளையும் அங்கேயே பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கொழுமத்தில் சாதுர்மாஸ்யத்தையும் கடத்தூரில் நவராத்திரியையும் நடத்திக்கொண்டு பழனியில் தண்டாயுதபாணியைத் தர்சித்துக்கொண்டு திண்டுக்கல் வழியாக மதுரை வந்து சேர்ந்தார்கள். அங்கே மீனாக்ஷி ஸுந்தரேசுவரரை

ஸேவித்துக்கொண்டு ராமேசுவரம் போய்விட்டு பாஸ்கர ஸேதுபதி மஹாராஜாவின் வேண்டுதலின்படி ராமநாத புரத்திற்கு விஜயம்செய்து அம்மஹாராஜாவிற்குச் சொந்த மான ஆலயத்திலுள்ள ராஜராஜேசுவரியம்மனின் உக்கிர கலையைக் குறைத்துப் பூஜையையும் வைதிக பூஜையாக மாற்றிக்கொடுத்தார்கள். மற்றும் பல விதத்திலும் அம் மஹாராஜனுக்கு விசேஷமாக அனுக்ரஹம் செய்தார்கள். இதன் ஞாபகார்த்தமாக அம்மஹாராஜா மடத்திற்கு ஐந்து கிராமங்களை ஜாரி செய்து கொடுத்தார். பிறகு கோவிலூர், திருநெல்வேலி, பாணதீர்த்தம் முதலான இடங்களுக்கு அவஸரமாகவே விஜயம் செய்துவிட்டு 1895ல் அய்யம் பாளையம் திரும்பிவந்தபின் அவர்களுடைய ஆக்ஞைபெற்று அவர்களுடைய முன்னிலையில் ஸ்ரீஸுப்ரஹ்மண்யர் முதலிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அங்குள்ள தாண்டவராய பிள்ளையை விசேஷமாக அனுக்ரஹித்து விட்டு சேலம் ஜில்லா வழியாகப் பங்களூர் போய்விட்டு மைஸூர் வந்து கிருஷ்ணராஜப்பேட்டை மார்க்கமாக சிருங்கேரிக்குத் திரும்பி விட்டார்கள்.

சிருங்கேரிக்கு வந்ததும் வைதிக வித்யை தேசமெங்கும் குறைந்திருப்பதால் அதை விருத்திசெய்யவேண்டியது அவசியமென்று தோன்றி சிருங்கேரியில் "ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ" என்றதோர் பாடசாலையை ஆரம்பித்து வைத் தார்கள். தானும் நல்ல அதிகாரப்பெற்ற சிஷ்யர்களுக்கு பிரஸ்தானத்ரயபாஷ்யம் பாடம் சொல்லிவந்தார்கள். சிருங்கேரி ஊருக்கு அக்கரையிலிருந்த அரண்யத்தைச் சீர் திருத்தி "நரஸிம்ஹ வனம்" என்று பெயரிட்டு அங்கே ஒரு பர்ணசாலை கட்டச்சொல்லி அங்கேயே ஏகாந்த வாஸம் செய்ய ஆரம்பித்தார்கள். கொஞ்சநாள் சென்றவுடன் வெளி வியாபாரங்களில் ஈடுபடாமல் ஞானாப்பியாஸத் திலேயே ஊக்கமாயிருந்து வந்தார்கள். சில ஸமயம் வெகு தூரத்திலுள்ள நரஸிம்ஹ பர்வதத்திற்கே போய் அங்கு

யோகநிஷ்டையில் இருந்துவிடுவார்கள். இவருடைய அஹிம்ஸா நிஷ்டையைக்கண்டு புலிகள், ஸர்ப்பங்கள் முதலிய துஷ்ட பிராணிகள் கிட்ட நெருங்கா. அப்படியே ஸகல பிராணி வர்க்கங்களிலும் ஆத்ம திருஷ்டியை செய்து வரும் இம்மஹானிடம் பாமர ஜனங்களும் வித்வான்களும், தனிகர்களும் எளியார்களும், பாலர்களும் விருத்தர்களும், ஸ்திரீகளும் புருஷர்களும், ஹிந்துக்களும் இதர மதஸ்தர்களும், ஏகரீதியாய்ப் பக்தி செலுத்திவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது இவருடைய குருநாதர் இவர் ஸதாசிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் நிலையை அடைவாரென்று பலதடவை சொன்னதிற்குத் தக்கபடி இவர் ஆத்ம நிஷ்டையை அடைந்துவிட்டார். பூஜா காலங்களிலோ, ஆத்மவித்யா விலாஸம் முதலான அனுபவ கிரந்தங்களை வாசிக்கும் ஸமயத்திலோ, இவர் ஸமாதிநிலை அடைந்து விடுவார். மடம் கார்யங்கள் மேல் நடக்கவேண்டியதை உத்தேசித்து மணி முதலான சப்தங்களைக் கொண்டு இவரை பஹிர்முகமாகச் செய்யவேண்டிய ஸந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இவருக்குப் பலவிதமான ஸித்திகள் தானுகவே ஏற்பட்டனவென்று சொல்ல வேண்டும். விபூதியை மந்திரித்துக்கொடுத்துப் பல பேருக்கு வியாதிகளை நிவர்த்திசெய்து கொடுத்திருக்கிறுர், பிசாசாதி பாதைகளை விலக்கியிருக்கிறுர். பேசாத குழந்தையைப் பேசும்படி செய்திருக்கிறுர். மற்றும் எவ்வளவோ ஆச்சர்யகரமான அனுக்ரஹங்களைச் செய்திருக்கிறுர். இவருடைய ஞாபகசக்தி, கருணை, மற்றவர்களுடைய மனதிலுள்ள விருத்திகளை அறிவது, எதிரிலுள்ளவர்களின் ஸ்வபாவம் ஆத்யாத்மிக சுத்தி முதலானவைகளை ஸாக்ஷாத்கரிப்பது, முதலான விஷயங்களை நன்கு பரிசீலனை செய்து பார்த்தால் இவர் அவதாரபுருஷர்தான் என்பது ஸந்தேஹத்திற்கு இடமன்னியில் துலங்கும்.

இவ்வளவு மஹிமையும் தன்னுடைய தபோபலத்தால்

ஏற்பட்டதென்ற எண்ணம் கொஞ்சமேனும் இல்லாமல் எல்லாம் தன் குருநாதரின் அனுக்ரஹமென்றே எண்ணி வந்தார். எந்தக் காரியமானாலும் குருநாதருடைய உத்தரவு பெறாமல் ஆரம்பிக்கிறது கிடையாது. எது செய்தாலும் குருநாதரிடமே அர்ப்பணம் செய்துவிடுவார். இப்படியே தன்னிடம் வரும் யாவருக்கும் குருபக்தி நன்கு ஏற்படும்படி செய்வார். ஸ்ரீசங்கர பகவத்பாதர் அவதரித்து நமக்குச் செய்து கொடுத்திருக்கிற உத்தமமான வைதிகமத ஸம்ரக்ஷணத்திற்குத் தக்கபடி நாம் நன்றிகாட்டிவருவது போதாதென்று நினைத்து ஸ்ரீ சங்கரஜயந்தீ மஹோத்ஸவத்தை பிரதிவருஷமும் கொண்டாட ஆரம்பித்தார். அவருடைய ஸங்கல்பப்படி இப்பொழுது நாடெங்கும் அந்த உத்ஸவம் நடந்து வருகிறது.

இவ்வாசார்யருடைய காலத்தில் லௌகிக ரீதியிலும் மடம் எவ்வளவோ முன்னேற்றமடைந்தது. திவான் சேஷாத்திரி அய்யரின் ஸஹாயத்தின் பேரில் ஜாகீரில் தீர்வை வியவஸ்தை செய்யப்பட்டது. வெகுநாளாக இருந்துவந்த கடன்கள் தீர்க்கப்பட்டன. அநேகம் கட்டிடங்கள் புதிப்பிக்கப்பட்டன. வரும்படியும் இரண்டு பங்காக விருத்தியடைந்தது. இரண்டு பாடசாலைகளும் யாத்திரிகர்களுக்காகத் தர்மசாலைகளும் கட்டப்பட்டன. இவ்விதம் பல காரியங்களுக்கு மத்தியில் ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் ஜன்மபூமியான காலடியில் அவருக்கு ஓர் ஆலயம் கட்டி நித்யபூஜாதிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற விருத்தியும் ஏற்பட்டது. அப்பூமியைக் கண்டுபிடிப்பதில் நடுக்காவேரி பிரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளும் திவான் சேஷாத்திரி அய்யரும் செய்த ஸேவை அபரிமிதமானது. இடம் தீர்மானமானவுடன் அந்த சாஸ்திரிகளைக் கொண்டே அவ்விடத்தில் பிரதிவருஷமும் ஜயந்தி மஹோத்ஸவம் விமர்சையாகச் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். இவ்விரு பக்தர்களும் காலகதி அடைந்தபோதிலும்,

மைஸூர் மந்திராலோசனை ஸபையிலிருந்த வி. பி. மாதவ ராவ் என்பவர் திருவனந்தபுரம் திவானாக உத்யோகம் ஒப்புக்கொண்ட பிறகு ஆசார்யரின் ஸங்கல்பத்திற்கு இசைந்து சட்டபூர்வமாகவே அந்த ஸ்தலத்தை ஸ்வாதீனம் பெற்றவுடன் திருவனந்தபுரம் மஹாராஜா மூலம்திருநாள் ராமவர்மா அவர்கள் அந்த ஸ்தலத்தை சிருங்கேரி மடத்திற்கு விட்டுக்கொடுத்தார். காலடி க்ஷேத்திரத்தைப் பரிஷ்காரம் செய்து ஆலயப் பிரதிஷ்டைவரை ஸகல பொறுப்புகளையும் நிர்வஹிக்கும்படி மைஸூர் ஜட்ஜாயிருந்த A. ராமசந்திரய்யரை நியமனம் செய்தார்கள். அவரும் கொஞ்சமேனும் சிரமத்தைப் பாராட்டாமல் அங்கேயே போயிருந்துகொண்டு ஸகல கார்யங்களையும் கவனித்து நடத்திக்கொண்டு வந்தார்.

காலடியில் பிரதிஷ்டை செய்யவேண்டியதை உத்தேசித்து சிருங்கேரியை விட்டு ஆசார்யர் புறப்படுமுன், ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தைப் புதுப்பித்துக் கல் கட்டிடமாகவே கட்டவேண்டுமென்று தீர்மானித்திருந்ததையனுஸரித்து, அவ்வாலயத் திருப்பணிக்காக அஸ்திவாரக் கல்லை நாட்டிவிட்டு, வேலையைத் தொடங்கும்படி அனுக்ரஹம் செய்துவிட்டு 1907 ஜனவரியில் அங்கிருந்து புறப்பட்டார்கள். கிக்கம் என்ற ரிஷ்யசிருங்கபுரத்திற்கு விஜயம் செய்துவிட்டுப் பல கிராமங்களை அனுக்ரஹித்துக்கொண்டு பங்களூர் வந்து சேர்ந்தார்கள். அந்த ஸமயம் முன் சொன்ன வி. பி. மாதவராவ் மைஸூர் ஸம்ஸ்தானம் திவானாகவே வந்துவிட்டார். பங்களூரில் வைதிக வித்யா ப்ரசாரத்திற்கு அவசியம் ஒரு மடம் கட்ட வேண்டுமென்று அவர் ஆசார்யருடன் பிரஸ்தாபித்ததின்பேரில் அப்பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசார்யர் செய்த ஆக்ஞையைத் தலைமேலிட்டுத் தன் சொந்த சாமான்களையே அனுப்பிக்கொடுத்து இரண்டு வாரத்திற்குள் வெகு அழகாக ஒரு சங்கராலயம் கட்டிக்கொடுத்து விட்டார். இவருடைய

வும் மற்றும் அங்குள்ள பக்தர்களுடையவும் ஊக்கத்தைக் கண்டு ஆசார்யர் மிகவும் ஸந்தோஷித்து அமிருத சிலையில் தயாரித்திருந்த பகவத்பாத மூர்த்தியை அங்கே பிரதிஷ்டை செய்து கொடுத்தார்கள்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு மைஸூர் வந்து மஹாராஜரால் விசேஷமாக ஸத்காரம் செய்யப்பட்டு நஞ்சன் கூடு வழியாய்க் கணவாய் இறங்கித் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தார்கள். பிறகு முன்யாத்திரைபோலவே காவேரி தீரத்தில் விஜயம் செய்துகொண்டு ஜம்புகேசுவரம் வந்து அங்கு கானடுகாத்தான் சிதம்பரம் செட்டியார் செய் திருக்கும் திருப்பணியை மெச்சி அகிலாண்டேசுவரியைத் தர்சனம் செய்துவிட்டு வரும் ஸமயம், ஸ்ரீ சாரதா தேவாலய நிர்மாணப் பொறுப்பையும் தானே ஏற்று நடத்துவதாக அந்த செட்டியாரும் அவர் குமாரர் ராமஸ்வாமி செட்டியாரும் சொல்லியதைக் கேட்டு ஆசார்யர் ஸந்தோஷித்து அங்கீகரித்தார்கள். அங்கிருந்து ஸ்ரீரங்கம் போய் ரங்கநாதரைத் தர்சித்துவிட்டு அய்யம்பாளையம் போய் அங்கு தாண்டவராய பிள்ளையின் வேண்டுகோளின் படி ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்தார்கள். ஆசார்யரின் 50-வது வயது பூர்த்தி தினமான 1903 மார்ச்சு 28ல் அவருடைய அனுமதியைப் பெற்று தாண்டவராய பிள்ளையின் கோரிக்கைப்படி இந்த மூர்த்திக்கு வலது பக்கத்தில் இவ்வாசார்யருடைய மூர்த்தியையும் மடம் ஸர்வாதிகாரியான ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் பிரதிஷ்டை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கிருந்து புதுக்கோட்டை மார்க்கமாக கோவிலூர் கானடுகாத்தான் முதலிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கிராமங்களில் ஸஞ்சரித்து குன்னத்தூர் என்ற ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்திரத்தில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்து தாமஸித்துவிட்டு மதுரைக்கு விஜயம் செய்தார்கள்.

அங்குள்ள சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்துவிட்டு ராமனாதபுரத்தில் முத்துராமலிங்க ராஜராஜேசுவர ஸேது பதியால் ஸத்காரம் செய்யப்பட்டு ராமேசுவரம் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு திருநெல்வேலி ஜில்லாவில் விஜயம் செய்து பாபநாச க்ஷேத்திரத்தில் சாதுர்மாஸ்யத்திற்காகத் தங்கிவிட்டு திருநெல்வேலியில் நவராத்திரி உத்ஸவத்தை நடத்தினதுடன் அங்குள்ள சிருங்கேரி மடம் கட்டிடத்தைப் புதுப்பித்து அழகாகக் கல்லினாலேயே கட்டி ஸ்ரீசங்கர பகவத் பாதரின் மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்தார்கள். பிறகு திருச்செந்தூர், நாங்குனேரி, நாகர்கோவில் முதலான இடங்களுக்குப் போய்விட்டுத் திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார்கள். அங்கு ஸகல ராஜ மரியாதைகளுடன் மஹாராஜரால் வரவேற்கப்பட்டு அரண்மனையிலேயே தங்கி அங்குள்ள ராஜ குடும்பத்தவர்களுக்கும் மற்றும் ஸகல ஜனங்களுக்கும் விசேஷமாக அனுக்ரஹம் செய்தார்கள். அந்த ஸமயம் ஆஸ்தான வழக்கப்படி காணிக்கையாக மஹாராஜர் ரூ. 10000மும் ஒரு யானையையும், ஸமர்ப்பித்ததுடன் காலடி பரிஷ்காரத்திற்கென்று இன்னொரு 10000மும் கொடுத்தார். அங்கிருந்து ஜனார்த்தனம் வழியாகக் காலடிக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

காலடியில் ஸ்ரீ சங்கர பகவத்பாதருடைய ஆலயத்துடன் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஓர் ஆலயம் கட்டித்தயாராக விருந்தது: கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய ஸகல ஸாமான்களும் ஜாகை வஸதிகளும் ஏராளமாக ஏற்பாடாகச் செய்யப்பட்டிருந்தன. இவ்விஷயத்தில் எல்லா சிஷ்யர்களும் எடுத்துக்கொண்ட சிரத்தையையும், காட்டி வந்த ஊக்கத்தையும், சிரமம் பாராட்டாமல் உத்ஸாஹத்துடன் செய்துவந்த கைங்கர்யத்தையும் வர்ணிப்பது ஸாத்தியமில்லை. காடாகவிருந்த இடத்தை நகரமாக ஆக்கி க்ஷேத்திரமாக மாற்றிவிட்டார்கள். எல்லா ஏற்பாடுகளையும் ஆசார்யரே நேரில் கால்நடையாய்ப் போய்ப்பார்த்து ஸங்

தோஷித்து சிஷ்யர்களைப் பாராட்டி ஆசீர்வதித்தார்கள். 1910 பிப்ரவரி 14ல் யாகசாலையில் பிரதிஷ்டைக்கு வேண்டிய வைதிக கார்யங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஏழு நாட்கள் அதிக விமர்சையாக நடந்தன. 21ம் தேதி மாக சுக்ல துவாதசீ ஸோமவாரம், அபிஜித் முகூர்த்தத்தில் விதிவத்தாக இரண்டு ஆலயங்களிலும் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் நடந்தது. ஆசார்யர் அந்த மூர்த்திகளுக்கு விசேஷமாக பூஜாதிகள் செய்து அங்கு கூடியிருந்த லக்ஷக்கணக்கான சிஷ்யர்களுக்குத் தீர்த்தப் பிரஸாதம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். அன்று ஸாயங்காலம் விசேஷமாக வித்வத் ஸதஸ் கூட்டி ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் மஹிமையைப் பற்றி ஆசார்யர் விசேஷமாக எடுத்துச்சொல்லி இனி எல்லா சிஷ்யர்களும் அடிக்கடி இந்த க்ஷேத்திரத்திற்கு வந்து தர்சனம் செய்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று ஆக்ஞாபித்தார்கள். காலடி க்ஷேத்திர நிர்மாணத்தில் மிகவும் ஈடுபட்டு நிறைவேற்றிக்கொடுத்த A. ராமசந்திர அய்யருக்கு "குருபக்த கேஸரீ" என்ற பட்டம் கொடுத்து விசேஷமாக ஸம்மானித்து அனுக்ரஹித்தார்கள். ஆசார்யரின் ஆக்ஞைப்படி வெகு அழகாக ஸ்ரீசாங்கர கிரந்தாவளியை அச்சிட்டுக்கொடுத்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ் ஸ்வான்தாரான T. K. பாலஸுப்ரஹ்மண்ய அய்யருடைய ஆசார்ய ஸேவையை சிலாகித்து ஆசீர்வதித்தார்கள். பின்னால் அவருக்கு "குருபக்த சிகாமணி" என்ற பிருதையும் அளித்து அனுக்ரஹித்தார்கள்.

பிறகு மூன்று மாஸ காலம் காலடியிலேயே ஆசார்யர் தங்கியிருந்தார்கள். அந்த ஸமயம் பரதகண்டத்திலுள்ள பல பிரதேசங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து தர்சனம் செய்தார்கள். கொச்சி மஹாராஜா, மைஸூர் மஹாராஜா, சிவகங்கை மடாதிபதி, முதலிய லௌகிக வைதிக பிரஸித்தர்களும் ஸாமான்ய ஜனங்களும் க்ஷேத்திர தர்சனம் செய்து ஆசார்யப் பிரஸாதத்தையடைவதற்காக



காலடி கோவில்கள்

வந்துகொண்டிருந்தார்கள். அங்குமேல் செய்யவேண்டிய நிர்வாஹப் பொறுப்பையும் மேலேகண்ட A. ராமசந்திரய்யரிடத்திலேயே ஒப்புவித்துவிட்டுக் காலடியிலிருந்து புறப்பட்டுக் கிரமமாக அய்யம்பாளையம் வந்து சாதுர்மாஸ்யத்தை நடத்திக்கொண்டு சேலம் தர்மபுரி வழியாக மைஸூர் ராஜ்யத்தில் பிரவேசித்துக் கோலார் ஜில்லாவில் யாத்திரை செய்துவிட்டுப் பங்களூர் வந்து சேர்ந்தார்கள். அங்கு விஸ்தாரமாக வெகு அழகாகக் கட்டப்பட்டிருந்த சங்கர மடத்தில் தாமஸித்தார்கள். அங்கே மஹாராஜா, திவான், முதலான பெரிய உத்யோகஸ்தர்களும், வித்வான்களும் மற்றும் சிஷ்யர்களும் கூடியிருந்த பெரிய ஸதஸ்ஸில் அந்தவிடத்தில் "**பாரதீய கீர்வாண ப்ரௌட வித்யாபிவர்த்தனீ**" என்ற பெயருடன் ஒரு பாடசாலை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாக வெளியிட்டார்கள் இக்கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்த வி. பி. மாதவராவ் பிராஹ்மணர்களுக்குத்தானம் செய்ய உத்தேசித்திருந்த ஏழு கிருஹங்களை ஸ்ரீமத் ஆசார்யரிடமே அர்ப்பணம் செய்து இப்பாடசாலை அத்யாபகர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் உபயோகித்துக்கொண்டு தன்னை அனுக்ரஹிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே ஆசார்யர் அங்கீகரித்து மாதவராயரின் ஔதார்ய குணத்தை சிலாகித்து ஆசீர்வதித்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு அரிசிக்கரை, தரிக்கரை, மார்க்கமாக 1911 மார்ச்சு 16 காலையில் சிருங்கேரிக்குத் திரும்பி வந்து அங்குள்ள சிஷ்யர்களால் வெகு கோலாஹலமாய் வரவேற்கப்பட்டு மடத்தில் பிரவேசித்தார்கள். பின்னால் வள்ளூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளையும் பழமானேரி வைத்யநாத சாஸ்திரிகளையும் முறையே வேதாந்த மீமாம்ஸா அத்யாபகர்களாக நியமித்து, பங்களூர் பாடசாலையை, குணிகல் ராமசாஸ்திரிகளை அனுப்பி, திவான் ஸர் பி. என். கிருஷ்ணமூர்த்தியின் அத்யக்ஷதையில் ஸபை கூட்டி ஆரம்பித்து வைத்தார்கள்.

இவ்வாறு ஆலய நிர்மாணங்கள், பாடசாலைகள் ஏற்படுத்துதல், வித்வான்களை ஸம்மானித்தல், உபதேசங்களைச் செய்தல், முதலான பலவித ஸாதனங்களைக்கொண்டு எவ்வளவு பிரயத்தினம் செய்தாலும் ஆஸ்திக்யம் குன்றிக்கொண்டு ஆசாரங்கள் நழுவிக்கொண்டு ஜனங்களிடத்தில் வைதிக சிரத்தையும் அனுஷ்டானமும் நாளுக்கு நாள் குறைந்தே வருவதைக்கண்டு ஆசார்யர் மிகவும் வருந்தினார். வேதாந்த பாடம் சொல்வதில்கூட அவருக்கு உத்ஸாஹம் குறைந்து வந்தது. ஸதாசிவேந்திரர் மாதிரி நாம் ஏன் ஸகல லௌகிக வியாபாரங்களையும் விட்டு ஆத்மநிஷ்டையிலேயே இருந்துவிடக்கூடாது என்று நினைத்தார். சரீரத்தில் ஆரோக்கியம் குறைந்து வந்தது. இந்த ஆசார்ய ஸ்தானத்திற்கு ஒருவரை ஏற்படுத்தி இந்தக் குருபரம்பரை நீடித்திருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, தான் மறைந்துவிடவேண்டுமென்று தீர்மானித்தார்போலும்! பங்களூர் சங்கர மடத்தில் மீமாம்ஸா சாஸ்திரம் பயின்றுவந்த நரஸிம்ஹ சாஸ்திரிகளே இந்த ஸ்தானத்திற்குரியவரென்று அவரை அழைத்துவரும்படி குணிகல் ராம சாஸ்திரிகளை அனுப்பி வைத்தார். சரீரத்தில் இருமல் சிரமம் ஜாஸ்தியாக இருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல் கிரமப்படி ஸ்நாநதியானுதிகளை நடத்திக்கொண்டு சில ஸமயங்களில் ஸமாதி நிஷ்டையில் இருந்துவிடுவார். அப்படியிருந்து வருகையில் 1912 மார்ச்சு 20, சைத்ர சுக்ல த்விதீயை தினம், ஸ்நாநம் செய்து பத்மாஸனத்தில் அமர்ந்து ஸமாதியிலிருந்தார்கள். அப்படியே சிலகாலம் இருந்துகொண்டு வருகையில் ஆத்மானுஸந்தானத்தினால் ஏற்பட்ட ஆனந்தத்தின் அறிகுறியாயுள்ள மந்தஹாஸத்துடனேயே மத்யாஹ்ந ஸமயத்தில் அபரிச்சின்னமான பிரஹ்ம தத்வத்துடன் இரண்டறக் கலந்துவிட்டார்கள். இவ்வித நிர்யாணக்கிரமத்தை யாரும் இதற்குமுன் பார்த்திராததினால் இவர் கைவல்யமடைந்துவிட்டாரென்பதை யாரும் நம்புவதற்கில்லை. சரீரம் சாய்ந்துவிட்டது. எல்லோரும் எல்லையில்லாத் துக்கக்

கடலில் மூழ்கினார்கள். கிரமப்படி மேல் கார்யங்களை, ஸ்வப்னம்போல் நடத்தி, இவர் வஸித்துவந்த நரஸிம்ஹ வனத்திலுள்ள ஆசிரமத்திற்கு ஸமீபத்திலேயே இவருடைய அதிஷ்டானம் ஏற்படுத்தினார்கள். இவர் பிரதி தினம் விசேஷமாக ஆராதித்துவந்த ஒரு பெரிய மஹாலிங்கத்தை இந்த அதிஷ்டானத்தில் வைத்து நித்திய பூஜாதிகளைச் செய்தார்கள்.

மறுநாள் மத்யாஹ்நத்திற்கு மேல்தான் குனிகல் ராம சாஸ்திரிகளும் நரஸிம்ஹ சாஸ்திரிகளும் சிருங்கேரி வந்து சேர்ந்தார்கள். அதற்கு முன்னாலேயே ஆரம்பிக்கும்படி ஏற்பட்ட பூஜை மஹாபூஜை ஆராதனைவரை கிரமமாக நடந்த பிற்பாடு ஏப்ரல் 7ல் நரஸிம்ஹ சாஸ்திரிகளுக்கு விதிவத்தாக ஸன்யாஸம் கொடுத்து ஸ்ரீ சந்திரசேகர பாரதீ என்ற யோக பட்டத்துடன் விளங்கச்செய்து மறுநாள் ஸம்ஸ்தான வழக்கப்படி வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் பட்டாபிஷேகமும் செய்யப்பட்டது.

இவ்விதம் ஸித்தியடைந்த பரமாசார்யருடைய வைப வத்தை நன்கு அனுபவித்துக்கொண்டு அவர் கூடவே பால்யம் முதலிருந்துவந்து கைங்கர்யம் செய்துகொண்டு மடம் ஸர்வாதிகாரியாயிருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகள், அவ ருடைய சரித்திரத்தைக் கன்னடத்தில் எழுதியிருக்கிறார். அதைத் தமிழ்ப்படுத்தி ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸம் அச்சகத்தில் பிரசுரித்தனர். அதிலுள்ள சில விஷயங்களை யும் வேறு சில விஷயங்களையும் சேர்த்து "ஸ்ரீமத் ஆசார் யேந்த்ர விஜயம்" என்று அச்சிடப்பட்டிருக்கிறது. ஆகை யால் அவருடைய மஹிமை இதில் வெகு சுருக்கமாகவே காட்டப்பட்டிருக்கிறது. ஸர்வஜனங்களையும் ஆகர்ஷணம் செய்யக்கூடிய அவருடைய முகவிலாஸமும், பரம நாஸ்திக னையும் உடனே ஆஸ்திகனாகச் செய்யக்கூடிய அவருடைய மந்தஹாஸமும், அவரைத் தர்சித்த மாத்திரத்தில் எவருக் கும் ஆதிவியாதிகள் நிவர்த்தியாகி ஸந்தோஷத்தையளிக்கக்

கூடிய கருணா கடாக்ஷமும், சரீர சோபையும், கம்பீரத் தோற்றமும், ஒருதட்வை ஒருவனுக்கு அனுபவிக்க பாக்ய மேற்பட்டுவிட்டால் அவனுடைய ஜன்மம் ஸபலமாய் விட்டதென்றே சொல்லவேண்டும். அவரை ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் அவதாரமென்றே ஆஸ்திக ஜனங்கள் கருதியது எவ்விதத்திலும் மிகையாகாது.

## அத்யாயம் 9

### ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளென்ற திருநாமத்துடன் ஸ்ரீ சாரதா பீடத்தில் 34வது ஆசார்யாராக விளங்கின மஹான் சிருங்கேரியிலுள்ள வித்வத் பரம்பரையைச் சேர்ந்த கோபால சாஸ்திரிகளுக்குப் புத்திரராக அவதரித்தார். பெற்றோர்களுக்குப் பதினொன்கு குழந்தைகள் ஜனித்தும் இவர் ஒருவரே மிஞ்சியிருந்தார். தங்களுடைய பாப வசத்தால் இவருக்கும் கேடு ஏற்படக்கூடாதென்று பெற்றோர்கள் நினைத்து இவரை அநேகமாய் அப்பொழுது ஸர்வாதிகாரி ஸ்தானம் வஹித்துவந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் ஸம்ரக்ஷணையிலேயே விட்டிருந்தார்கள். அவரும் வெகு வாத்ஸல்யத்துடன் இவரைப் பரிபாலித்து வந்தார். இப்பாலகர் முதலில் கொஞ்சகாலம் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்தார். அப்பொழுது முன் ஆசார்யாருடைய விசேஷ கருணைக்குப் பாத்திரமாகி மடத்திய ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையிலேயே சேர்க்கப்பட்டு வித்யாப்யாஸம் செய்துவந்தார். பால்யம்முதற்கொண்டே இவருக்கு லௌகிக விஷயங்களில் பற்றுதல் கிடையாது. விசேஷமாக மூக கவியின் பஞ்சசதி ஸ்தோத்திரத்தில் மிகவும் ஈடுபட்டார், ஸாவகாசப்பட்ட போதெல்லாம்



ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு

**ஸ்ரீ சந்த்ரசேகரபாரதீ ஸ்வாமிகள்**

வித்யாசங்கரர் ஆலயத்துக்குச் சென்று ஏகாந்தமாய் அநுஸந்தானம் செய்துகொண்டேயிருப்பார். இவருடைய உத்தம ஸ்வபாவத்தையும், மேதையையும், சாஸ்திராப்யாஸத்திலுள்ள ஆர்வத்தையும் கவனித்துக் குருநாதர் இந்த என் பக்தனை ஸர்வக்ஞனாகச் செய்யவேண்டுமென்று சாரதாம்பிகையிடம் பிரார்த்தித்திருக்கிறார். ஒருஸமயம் இவர் உள்பட மூன்று சிஷ்யர்களுடன் ஆசார்யார் உட்கார்ந்துகொண்டிருக்கும் ஸமயம் "ஸம்ஸாரக் கடலைத் தாண்ட உத்தேசமிருக்குமானால் சிகா யக்ஞோபவீதாதிகளைத் தியாகம்செய்து பரமஹம்ஸாசிரமம் அடைந்து ஆத்ம தத்வ விசாரம் செய்யவேண்டும்" என்று மூன்று சுலோகங்களால் ஆசார்யார் சொன்னது தனக்குத்தான் என்று கிரஹித்துக்கொண்டார். வேதாந்த விசாரத்திற்கு மிகவும் அனுகூலமாயிருக்கும் மீமாம்ஸா சாஸ்திரத்தையும் இவர் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதித் தன்னால் பங்களூரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சங்கர மடம் பாடசாலைக்கு இவரை ஆசார்யார் அனுப்பிக் கொடுத்தார். அங்கு வித்யாப்பியாஸம் செய்யும்போது நடக்கும் பரீக்ஷைகளில் இவர் எழுதியிருக்கும் உத்தரங்களைக்கண்டு மிகவும் ஸந்தோஷித்துவந்தார். இவரையே தனக்குப்பின் இந்த பீடத்தில் நியமிப்பதாக அப்பொழுதே தீர்மானம் செய்ததாகத் தோன்றுகிறது. அப்படியே தன் நிர்யாணத்திற்கு முன்னால் இவரை அழைத்துவரும்படி குனிகல் ராமசாஸ்திரிகளையனுப்பிய ஸமயம், தாயாரின் ஸம்மதம் பெறுவதற்குக் கொஞ்சம் சிரமமும் தாமஸமும் ஏற்பட்டுவிட்டபடியால், குருநாதர் ஸித்தியான மறுநாள்தான் சிருங்கேரி வந்துசேரும்படி ஏற்பட்டது. பிற்பாடு கிரமப்படி இவருக்கு ஆசிரமம் கொடுக்கப்பட்டுப் பீடாதிபத்யத்தில் அபிஷேகம் செய்யப்பட்டது.

பீடத்திற்கு வந்ததுமுதல் அப்பீடத்தின் மஹிமைக்குத் தக்கபடி யோக்கியதை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டு

மென்ற ஆவலுடன் மஹாமஹோபாத்யாய விருபாக்ஷ சாஸ்திரிகளிடம் வேதாந்த சாஸ்திரத்தை அப்யஸித்தார்கள். இதர சாஸ்திரங்களிலும் அதிஸுலபமாகவே அபாரமான பாண்டித்யத்தை அடைந்துவிட்டார். குருநாதரால் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாமலிருந்த ஸ்ரீ சாரதாம்பாள் ஆலய நிர்மாணத்தைப் பூர்த்தி செய்துவிட வேண்டுமென்றும் குருநாதரின் ஸமாதி ஸ்தலத்தில் அழகாக ஓர் ஆலயம் கட்டவேண்டுமென்றும் ஸங்கல்பித்து அதற்கு வேண்டிய ஸகல கார்யங்களையும் நடத்திமுடித்தார். 1916ல் இரண்டு ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது காலடியில் குருநாதர் நடத்திய கும்பாபிஷேகவைபவத்தைப் போலவே இதையும் நடத்தினார்கள். மைஸூர் மஹாராஜா கிருஷ்ணராஜ உடையார் நேரில்வந்து தர்சித்துக்கொண்டார். மற்றும் நம் தேசத்திலுள்ள ஏராளமான பக்தஜனங்கள் திரள் திரளாக வந்து இவ்வுத்ஸவத்தைக் கண்டுகளித்து குருப் பிரஸாதத்திற்குப் பாத்திரரானார்கள். அன்று ஸாயங்காலம் ஸ்ரீசாரதாம்பாள் ஸன்னிதியில் நடந்த தர்பாரில் வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்த ஆசார்யரின் சோபையையும், பாண்டித்யத்தையும், மந்தஹாஸத்தையும், கண்டு மகிழாதவர் கிடையாது.

இவ்வுத்ஸவம் கோலாஹலமாய் நடந்த பிற்பாடு இனி வேதாந்த தத்வத்தை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற தீர்மானம் ஏற்பட்டது. சில சிஷ்யர்களுக்குத்தானே வேதாந்த பாடம் சொல்லிவந்தபோதிலும் ஆத்மானுஸந்தானத்திலேயே காலத்தைக் கழிப்பதில் ருசியுள்ளவரானார். அப்படியே வெகு சீக்கிரத்தில் மேலான நிலையை அடைந்துவிட்டார். இதையெல்லாம் கண்டு மிகவும் ஸந்தோஷித்து வந்த இவர் தகப்பனார் 1919லும், தாயார் 1922லும் பரமபதம் அடைந்தார்கள். இவ்விதம் வெகு லேசாக இருந்த இந்த லௌகிக பந்தமும் அவரை

விட்டு நீங்கிவிட்டது. மடத்துக்கார்யங்களைக்கூட கவனிக்காமல் அந்தர்முகமாக இருக்க ஆரம்பித்துவிட்டார். சிஷ்யர்களை அனுக்ரஹிக்கவேண்டிய கார்யம் மீதியிருக்கும் போது இவர் அப்படியிருந்துவிடுவது உசிதமில்லையென்று நினைத்து மஹாராஜா தன் ராஜதானிக்கு வரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டார். மிகக் கருணையுடன் அப்பிரார்த்தனையை அங்கீகரித்து 1924 ஜனவரியில் சிருங்கேரியை விட்டுப் புறப்பட்டு மைஸூருக்குப்போய் மஹாராஜரால் விசேஷமாக ஆதரிக்கப்பட்ட ஸமயம், தன் குருநாதருடைய அவதாரஸ்தலமான வீட்டையும் பக்க நிலங்களையும் மடத்திற்கு ஸ்வாதீனம் செய்துகொண்டு அங்கே அமிருத சிலையில் குருநாதருடைய மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் செய்துவைத்தார். அவ்வாலயத்தில் நித்ய பூஜைகளும் பாஷ்ய பாடங்களும் நடந்துவருகின்றன.

பிற்பாடு தக்ஷிண தேசத்து சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கணவாய் வழியாய் ஸத்யமங்கலம் வந்து ஈரோடு, திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, ராமனுதபுரம், மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூர் முதலான பிரதேசங்களில் யாத்திரை செய்துவந்தார். போகும் இடங்களிலெல்லாம் வெகு பக்திசிரத்தையுடன் ஸகல ஜனங்களாலும் விசேஷமாக ஆராதிக்கப்பட்டார்கள். இவருடைய பூஜா வைபவத்தைக் கண்டும், உபதேசங்களைப் பெற்றும், உபன்யாஸங்களைக் கேட்டும், தீர்த்தப் பிரஸாதம் வாங்கிக் கொண்டும், இவருடைய அன்பு நிறைந்த கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகியும், எண்ணிலடங்கா ஜனங்கள் கிருதார்த்தர்களாகியிருக்கிருர்கள். இவ்விதம் ராமேசுவரம், கன்யா குமாரி, திருவனந்தபுரம் முதலான க்ஷேத்திரங்களுக்கு விஜயம்செய்து யாத்திராக்கிரமமாக ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் அவதார பூமியான காலடி க்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தார்கள். அதை ஒரு பெரிய வித்யாஸ்தானமாகச் செய்ய

வேண்டுமென்று கருதி ஏற்கனவே ஏற்படுத்திய வேத பாட சாலையுடன் 1927ல் ஒரு வேதாந்த பாடசாலையையும் ஆரம்பித்துவைத்தார்கள். அப்பாடசாலைகளின் உபாத்யாயர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் தேவாலய பூஜை செய்கிறவர்களுக்கும் மற்றும் கைங்கர்யம் செய்யும் பிராஹ்மணர்களுக்கும் தர்சனார்த்தம் வருகிற யாத்திரிகர்களுக்கும் வேண்டிய ஜாகை வஸதிகள் செய்துகொடுப்பதற்காக ஒரு அழகான அக்ரஹாரமும் நிர்மாணம்செய்யத் தீர்மானித்தார்கள். அப்படியே அவர்கள் ஸங்கல்பப்படி கிரமமாகப் பாடசாலை, வீடுகள் எல்லாம் கட்டப்பட்டன. காலடியில் கொஞ்சநாள் தங்கி திருச்சூர், பாலக்காடு, கோயமுத்தூர் வழியாக நஞ்சன்கூடு போய் அங்கேயும் ஒரு பாடசாலை ஏற்படுத்திவிட்டு மைஸூர் மார்க்கமாக 1927 கடைசியில் சிருங்கேரிக்குத் திரும்பி வந்துசேர்ந்தார்கள்.

இவ்வாசார்யருடைய ஞான சக்தியும், ஞாபக சக்தியும் அபரிமிதமானது. இன்னொருவர் மனதிலிருப்பதைத் தெரிந்துகொள்வதில் மாத்திரமல்ல, பரிசயமேயில்லாத ஒருவர் முன் வந்து நின்றால் அவர் ஜாதி குணம் ஸம்ஸ்காரம் உபாஸ்ய தேவதை முதலிய யாவும் இவருக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிந்துவிடும். வருகிறவர்களுடைய மனோபாவங்களும் ஆஸ்தைகளும் பலவிதமாயிருந்தபோதிலும் ஒவ்வொருவரையும் ஸமாதானமாகவே திருப்தியுடன் திரும்பும்படி செய்துவிடுவார். பாலர் விருத்தர், பாமரர் வித்வான், ஆஸ்திகர் நாஸ்திகர் யாராயிருந்தாலும் இவருடன் சில நிமிஷங்கள் இருக்கும்படி நேரிட்டால் தனக்குத் தெரியாமலே ஒருவித மனஸ்சாந்தியையும் தெளிவையும் அடைவார்கள். சாஸ்திர விஷயமாகவோ அனுஷ்டான விஷயமாகவோ ஸந்தேஹம் கேட்க வேண்டுமென்று வருகிறவர்கள் தங்கள் ஸந்தேஹத்தை எடுத்துச் சொல்வதற்கு முந்தியே அவருடைய சில வார்த்தைகளால் ஸந்தேஹமற்றவர்களாக ஆகிவிடுவார்கள். இவருடைய கருணை

எல்லையற்றது. யாவரும் இவரைத் தனக்கு அத்யந்த ஆப்த ரென்றே பாவித்து வந்தார்கள். இவர் சாஸ்திரார்த்தத்தை எடுத்துப் போதிக்கும் முறையே வேறு. மிகவும் துரூஹ மான ஸூக்ஷ்ம விஷயங்களைக்கூட ஸாமான்ய ஜனங்கள் அறிந்துகொள்ளக்கூடிய ரீதியில் வெகு லலிதமாக எடுத் துரைப்பார்கள். அவரிடம் ஒரு தடவை கிரஹித்த விஷயம் ஆயுள்வரை மறந்து போகாது அவருக்கிருந்த குரு பக்தி யும் தைவ பக்தியும் நிகரற்றது. அவர் உருக்கமாய் சொல்லியிருக்கும் பல ஸ்தோத்திரங்களிலிருந்து அவருடைய மனோநிலை நன்கு வெளியாகிறது. ஸ்ரீசங்கர பகவத்பாதரின் விவேக சூடாமணிக்கு அவர் வியாக்யானம் எழுதி அருளி யிருப்பதைப் பார்த்தாலே இவர் ஆத்ம நிஷ்டையில் ஈடு பட்ட ஜீவன்முக்தர் என்பது நன்கு விளங்கும்.

இவர் ஸ்வபாவத்திலேயே ஏகாந்த வாஸத்தில் ருசி யுள்ளவர். தக்ஷிண தேச யாத்திரையை முடித்துக்கொண்டு சிருங்கேரிக்குத் திரும்பினது முதல் லௌகிக கார்யங்களி லிருந்து நிவிருத்தியடைந்து அநேகமாய்த் தபஸ்ஸிலும் ஆத்ம நிஷ்டையிலுமே காலத்தைக் கழிக்க ஆரம்பித்து விட்டார். உலக வியாபாரங்களை முற்றிலும் மறந்திருக்கக் கூடிய காலங்கள் அதிகப்பட்டன. இதனால் மடத்திற்குள்ள லௌகிக. கார்யங்களுக்கு இடஞ்சல் ஏற்படக்கூடுமென்று நினைத்து இந்த ஆசார்ய ஸ்தானத்திற்குத் தகுந்த ஒரு பாலகனை சிஷ்யராக எடுத்துக் கொள்வது அவசிய மென்று உணர்ந்துகொண்டார். அப்படியே 1931ல் ஒரு பாலகருக்கு ஸன்யாஸம் கொடுத்து அபிநவ வித்யா தீர்த்தர் என்ற யோக பட்டத்தை அளித்தார். இவருக்கு வித்யாப் பியாஸத்திற்கு வேண்டிய ஸகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துத் தானே நன்கு கவனித்து வந்தார். இவ்விதம் மடத்தின் கார்ய நிர்வாஹ விஷயத்திலும் கவலைக்கிட மில்லாமல் ஏற்பாடு செய்து விட்டபடியால் காலக்கிரமத்தில் முன்னைவிட ஜாஸ்தி காலம் உலகத்தை மறந்து அந்தர்முக

மாக இருக்க ஆரம்பித்துவிட்டார். அவர் அவ்விதம் அந்தர் முகமாயிருக்கும் காலத்தில் அவருடைய முககமலத்திலிருந்து வீசின அபாரமான வர்ச்சஸ்ஸை தர்சனம் செய்யும் பாக்கியம் கிடைத்தவர் சிலரே யாவர். பஹிர்முகமாயிருக்கும் ஸமயத்திலும் பேசுவதை மிகவும் குறைத்துக் கொண்டார். சில ஸமயம் ஸம்ஜ்ஞை, மந்தஹாஸம், இத்துடனேயே நிறுத்திவிடுவார். இதுவே பரம புருஷார்த்த ஸாதனமாகிப் பிரயோஜனத்தையடைந்த சிஷ்யர்களும் உண்டு. இவருடைய ஞானம் தேசத்தினுலாவது காலத்தினுலாவது வரையறுக்கப்படவில்லையென்பதை நெருங்கி பழகினவர்கள் நன்கு அனுபவித்திருக்கிறார்கள்.

இவ்விதமிருந்து வருகையில் சில பக்தர்களின் வேண்டுதலின்பேரில் 1938ல் பங்களூருக்கு விஜயம்செய்தார்கள். அந்தஸமயம் சங்கர மடத்திற்கு முன்பக்கம் ஏற்கனவே பூர்வாசார்யாரால் ஏற்படுத்தப்பட்ட சங்கர பகவத்பாதருடைய ஆலயத்திற்கு எதிராக ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஓராலயம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். பிறகு அங்கிருந்து கோயமுத்தூர் மார்க்கமாய்க் காலடி சென்று அங்கே பத்து மாஸம்வரை தாமஸித்தார்கள். அப்பொழுது அவர் அங்கே தங்கியிருக்கும்வரை எல்லா ஸௌகர்யங்களையும் திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்திலிருந்தே செய்துகொடுத்தார்கள். இவ்விதமாக மறுபடியும் தக்ஷிண தேசத்திலுள்ள சிஷ்யர்களுக்கு ஆசார்ய ஸேவைசெய்து கிருதார்த்தர்களாவதற்கு இடம் கிடைத்தது. ஏராளமாக நானாபக்கங்களிலிருந்தும் ஜனங்கள் தர்சனத்திற்கு வந்தார்கள். அவ்விதம் கொஞ்சகாலம் தங்கிவிட்டு 1940 ஆரம்பத்தில் சிருங்கேரிக்கு திரும்பி விட்டார்கள். அங்கே சிஷ்ய ஸ்வாமிகளும் இவருடைய வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

சிருங்கேரிக்குத் திரும்பிவந்ததுமுதல் முன்னைவிட ஜாஸ்திகாலம் அந்தர்முகமாகவே இருக்க ஆரம்பித்து

விட்டார்கள். இவருடைய தர்சனம் கிடைப்பதே மிகவும் துர்லபமாகிவிட்டது. மௌன வியாக்யானத்தின் மூல மாகவே ஆலமரத்தடியில் பகவான் உபதேசம் செய்துவரு கிறரென்ற நியாயப்படி இவரும் மௌனமாயிருந்தபோதி லும் தன்னுடைய ஆத்மநிஷ்டையின் வைபவத்தினல் தன்னை நம்பியுள்ள ஸகல ஜனங்களுக்கும் க்ஷேமத்தை யளித்துவந்தார். சில புண்ணியசாலிகளுக்கு இவரை இந்த உன்னதமான அந்தர்முக நிலையிலும் நேரில் தர்சித்து அனுக்ரஹம்பெறும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. சிருங் கேரிக்கே போகாமல் இவருடைய திவ்ய மூர்த்தியையும் மந்தஹாஸத்தையும் சில ஸமயங்களில் அருளியிருந்த வார்த்தைகளையும் தங்கள் இடத்தில் இருந்துகொண்டே அனுஸந்தானம்செய்து பலர் கிருதார்த்தர்களாயிருக்கிறர் கள் என்பதும் அனுபவஸித்தம். இவருடன் பழகினவர் யாவரும் இவரை ஸாமான்ய மனுஷ்யராகக் கருதாமல் அவதார புருஷரென்றே பாவித்து வந்தார்கள். இவர் யாத்திரைசெய்த ஸமயங்களிலும் சிருங்கேரியில் இருக்கும் ஸமயம் பஹிர்முகமாயிருக்கும்போதும் அந்தர்முகமா யிருக்கும்போதும் அவருடைய மந்திரசக்தி, யோகஸித்தி, கருணை முதலிய பெருமைகளை நன்கு அனுபவித்தவர்கள் பலர். அந்த அனுபவங்களில் சிலவற்றைத் தொகுத்து "ஸ்ரீ சந்த்ரராஜ வைபவம்" என்ற சிறிய நூலில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதால், அவைகளை இதில் காட்டவில்லை.

இவ்வாசார்யர் அவதரித்து அறுபது வருஷங் களானதும் அதை விசேஷமாகக்கொண்டாட வேண்டு மென்று சில பக்தர்கள் உத்தேசித்ததற்கு இவர் கொஞ்ச மேனும் இடம்கொடுக்கவில்லை. ஆனல் அவர்கள் உத்தே சித்த அதிருத்ர யாகம், ஸஹஸ்ர சண்டீ ஹோமம் முதலிய ஸத்கர்மாக்களை லோக க்ஷேமத்தையுத்தேசித்து நடத்துவது நியாயம்தான் என்று இவர் அங்கீகரித்ததால் இவருக்கு 60 வயது பூர்த்தியாய்க் கொஞ்ச நாட்களுக்குப்பின் 1953

ஏப்ரல் மாஸத்தில் அதிகோலாஹலமாக ஆசார்யருடைய அனுக்ரஹத்தைக் கொண்டு நடத்தப்பட்டது. அப்பொழுது பரதகண்டத்திலுள்ள எல்லா பிரதேசங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு கிருதார்த்தர்களாக வேண்டுமென்று வந்து சேர்ந்தார்கள். ஆசார்யரின் தர்சனமும் கிடைக்குமென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர் உத்ஸவ விபரங்களை மாத்திரம் கேட்டுத் தெரிந்து கொண்டாரே தவிர, தான் வெளியில் வராமல் அந்தர்முகமாகவே இருந்துகொண்டுவிட்டார். சிஷ்ய ஸ்வாமிகளையே எல்லாக் கார்யங்களையும் கவனித்து நடத்தும்படி அனுக்ரஹித்தார்கள். யாகாதி கர்மா யாவும் பகவானுக்குத் திருப்திகரமாகவேயிருக்குமென்றும் அதற்கு அறிகுறியாக மழை பெய்யுமென்றும் ஆசீர்வதித்தார்கள். அப்படியே பூர்ணாஹுதி ஸமயத்தில் கொஞ்சம்கூட எதிர்பாராத நிலையில் எங்கிருந்தோ மேகங்கள் கூடிக்கொண்டு துந்துபி வாத்தியம்போல் இடி இடித்துக்கொண்டு பெருமழைபெய்ய ஆரம்பித்துவிட்டது. அந்த ஸமயத்தில் நடந்த ஸம்பவங்கள் ஒவ்வொன்றிலும் ஆசார்யருடைய வைபவம் நன்கு தெரிந்தது

இவ்வுத்ஸவம் நடந்து கொஞ்ச நாட்களுக்குப் பின் ஆசார்யர் வெளியில் வந்து முன்போல் சிஷ்யர்களுக்குத் தர்சனம் கொடுத்து அனுக்ரஹிக்க ஆரம்பித்தார்கள். ஸ்ரீ மடம் நித்திய பூஜாதிகளையும் முன்போலவே நடத்தி வந்தார். இந்த ஸமயத்தில்தான் நம் பரதகண்டத்திற்கு அத்யக்ஷராயிருக்கும் ஸ்ரீராஜேந்திர பிரஸாத் என்ற பிரபு சிருங்கேரிக்கு வந்து ஆசார்யரைத் தர்சித்து அவருடன் கொஞ்சநேரம் ஸம்ஸ்கிருதத்திலேயே ஸம்பாஷணை செய்துவிட்டு ஆசார்யரின் பரமானுக்ரஹத்திற்குப் பாத்திரமானார். இதன் பிறகு சில நாட்கள் சென்றபின் இம்மஹான் தனக்கு இந்த ஜன்மத்தில் அனுபவிக்க வேண்டிய

பிராரப்த கர்மாவையும் அனுபவித்துவிட்டபடியால் இனி கர்மசேஷம் ஒன்றுமேயில்லையென்ற தீர்மானத்துடன் இச் சரீரத்தைத் தியாகம் செய்துவிட்டுக் கைவல்யம் அடைந்துவிட வேண்டுமென்ற உத்தேசத்துடன் 1954 ஸெப்டம்பர் 26ம் தேதி ஜய வருஷம் பாத்திரபத அமாவாஸ்யை, அதிகாலையில் எழுந்து துங்காநதி சென்று ஸ்நானம்செய்து விசேஷ ஸங்கல்பம் செய்துகொண்டு அப்படியே சரீரத்தைப் பிரவாஹத்தில் மிதக்கவிட்டு விட்டார்கள். பக்கத்திலிருந்தவர்கள் இதைக்கண்டு பிரமித்து சரீரத்தைக் கரைக்குக் கொண்டுவந்து உயிர்மூட்டப் பல விதப் பிரயத்தினங்கள் செய்துபார்த்தார்கள். சரீரத்திற்குள் ஒரு துளி ஜலம்கூடப் போகாமலிருந்தபடியால் ஜலத்தில் மூழ்கிப் பிராணன் போய்விட்டதென்று நினைப்பதற்கு இடமேயில்லை. இவ்விதம் ஸ்வாதீனமாய் யோகிகள் ஜல ஸமாதியடையலாமென்ற விஷயம் ஸாமான்ய ஜனங்களுக்குத் தெரியாததினால் இவருடைய ஸித்தியின் ரீதியைக் கண்டு ஆச்சர்யப்படாதவர் இல்லை. இவர் உயிருடன் இருக்கும்போது இவருடைய நிலையை எப்படித் தீர்மானிக்க முடியவில்லையோ அப்படியே இவருடைய மறைவுதலும் யாருக்கும் பிடிபடவில்லை. ஸ்ரீ சாரதாம்பாளுக்கு நவராத்திரி உத்ஸவத்தை முன்னிட்டு அபிஷேகம் செய்விப்பது இந்த அமாவாஸ்யையில்தான். அதேதினத்தில் இவருக்கும் அபிஷேகம்செய்து ஸமாதியேற்படுத்தும்படி ஏற்பட்டதே ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் இவ்வாசார்யருக்கும் ஸ்வரூபத்தில் பேதமில்லையென்பதை ஜனங்களுக்குப் போதிக்கிறது. பின்னால் தொடர்ந்து மஹாபூஜை ஆராதனைகள் கிரமப்படி விமர்சையாக நடந்தன. இவருடைய அஸாதாரணமான குருபக்திக்குத் தகுந்தபடி இவருக்கு அதிஷ்டானம் அவர் குருநாதரான பரமாசார்யார் ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்திற்கு ஸமீபத்திலேயே இடதுபக்கத்தில் ஏற்பட்டது. இப்பொழுது அவர் பரிச்சின்னமான உடலைவிட்டு அகண்ட

மான பகவத் ஸ்வரூபத்துடன் ஒன்றுகலந்து உலகத்திற்கு க்ஷேமத்தையளித்து வருகிறார்கள்.

ஏற்கனவே 1931ல் இவருடைய சிஷ்யராகயேற்பட்ட ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் கிரமப்படி சிருங்கேரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் பட்டாபிஷேகம் செய்யப்பட்டு ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக விளங்கி வருகிறார்கள்.

---

## அத்யாயம் 10

### ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகள்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதிஸ்வாமிகளவர்களிடம் 1931 லேயே ஸன்யாஸம் பெற்று இப்பொழுது இப்பீடத்தில் 35வது ஆசார்யராக ஜகத்குரு ஸ்தானம் வஹித்து வருகிற ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகளவர்கள் பங்களூர் கைம்பு ராமசாஸ்திரிகளின் ஜ்யேஷ்ட புத்திரர். பூர்வாசிரமத்தில் ஸ்ரீநிவாஸன் என்ற பெயருடைய இப்பாலகர் அதிபால்யத்தில் பங்களூரில் கொஞ்சம் வித்யாப்யாஸம் செய்தார். இவருக்கு உபநயனமே சிருங்கேரியில் ஸ்ரீ சாரதாம்பாள் ஸந்நிதியிலேயே நடந்ததென்பது குறிப்பிடத்தக்கது. அம்பாளின் பிரேரணையின்பேரில் சாஸ்திராப்யாஸத்திற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு பூர்வாசார்யார் இவரை சிருங்கேரிக்கே வரவழைத்துக்கொண்டார். இவருடைய 14வது வயதில் கிரமப்படி ஸன்யாஸம் கொடுத்து சிஷ்யராக ஏற்றுக்கொண்டு ஸ்ரீ மடம் வித்வான் ஸ்ரீராமசந்திர சாஸ்திரிகள் மூலமாக தர்க்க வேதாந்தாதி சாஸ்திரங்களில் பாண்டித்யம் ஏற்படுத்திக் கொடுத்ததுடன் இவருடைய வித்யாப்யாஸத்தில் தானும் விசேஷமான அக்கரை எடுத்துக்கொண்டும் சில ஸமயங்களில் தானே நேரில் பாடம் சொல்லியும் அநுக்ரஹித்து வந்தார். அவர் ஸ்ரீ மடம் லௌகிக நிர்வாஹத்தில் ஈடுபடாமலே



ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்

யிருந்துவிட்டபடியால் அந்தப் பொறுப்பையும் அநேகமாய் இவரே ஏற்கும்படி ஏற்பட்டுவிட்டது. அநேகமாய் ஸ்ரீ சந்திரமௌளீசுவராதி தேவதைகளின் நித்திய பூஜைகளையும் இவரே செய்யும்படியிருந்தது. இவ்விதமாக இப் பீடாதிபத்யத்தை வஹிப்பதற்கு வேண்டிய ஸகல யோக்கியதைகளையும் வெகு சீக்கிரமாகவே ஸம்பாதித்துக் கொண்டுவிட்டார்.

இவருக்குத் தன் குருநாதரிடமுள்ள விசேஷ பக்தியினால் பரமாசார்யாருக்கு நரஸிம்ஹ வனத்தில் கட்டப்பட்டிருக்கும் விசாலமான ஆலயத்திற்கும் அமிருத சிலையில் வைத்திருக்கும் மூர்த்திக்கும் ஸமானமாக குருநாதருக்கும் ஏற்பாடு செய்துவிட வேண்டுமென்ற ஸங்கல்பம் ஏற்பட்டு அவ்விதமே அழகாக விஸ்தாரமாக பரமாசார்யாரின் அதிஷ்டானத்தையொட்டியே கல்லில் அதிஷ்டானம் கட்டுவதற்கு வேண்டிய ஸாமக்ரிகளை சேகரித்து கட்டிக் கொண்டு வரப்படுகிறது. அத்துடன் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தின் முன்புறத்தில் கோபுரம் இல்லாமலிருந்து வருவதைக்கண்டு அதையும் கட்டி முடிக்கவேண்டுமென்றும், அவ்வாலயத்தில் சிலவிடங்களில் பழுது பார்த்துப் புதுப்பிக்க வேண்டுமென்றும், ஸங்கல்பம் தோன்றி அத்திருப்பணிகளும் வெகு விமர்சையாக நடந்து வருகின்றன.

குருநாதர் ஸித்தியடைந்து ஒரு வருஷ காலமானவுடன் அவருடைய ஆராதனையை இவர் மிகச்சிறப்பாக நடத்தி, கொஞ்சகாலம் கழிந்தபின், 1956 ஆரம்பத்தில் சிஷ்யர்களின் பிரார்த்தனையின்பேரில் சிருங்கேரியை விட்டு யாத்திரையாகப் புறப்பட்டார்கள். அங்கிருந்து மேற்கு திசையாக கலாஸா, கொல்லூர், தர்மஸ்தலம், மங்களூர், கோழிக்கோடு முதலான இடங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள சிஷ்யர்களுக்கு அநுக்ரஹம் செய்தார்கள்.

இதற்கு முன்னுள்ள இரண்டு ஆசார்யர்களும் அந்தப் பிரதேசங்களில் யாத்திரை செய்திருப்பதில்லையாதலால், அந்த சிஷ்யர்கள் விசேஷமான ஊக்கத்துடனும் பக்தியுடனும் இவருக்கு ஸத்காரம் செய்து தன்யரானார்கள். அப்படியே தென்திசை நோக்கி குருவாயூர், திருச்சூர், முதலான க்ஷேத்திரங்களுக்குப் போய்விட்டுக் காலடி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அங்கு விசேஷமாக நடந்த வரவேற்பை ஏற்று அவ்வருஷத்திய வியாஸ பூஜா மஹோத்ஸவத்தை அதிவிமர்சையாக நடத்தி சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்து அங்கேயே இருந்துவந்து கணபதி ஸபை நவராத்திரி முதலான வைபவங்களையும் நடத்தினார். சாதுர்மாஸ்ய ஸமயத்தில் திருவனந்தபுரம் மஹாராஜரான சித்திரைத் திருநாள் பாலராமவர்மா அவர்கள் காலடிக்கு வந்து ஆசார்யாரை தர்சித்து சாதுர்மாஸ்ய செலவுக்காகவும் சிருங்கேரி குருநாதரின் அதிஷ்டான நிர்மாணச் செலவுக்காகவும் ரூ. 16000 காணிக்கையாக ஸமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது. அவருடைய ஸாத்விக ஸ்வபாவம் முதலிய மேலான குணங்களைக்கண்டு ஆசார்யர் மிகவும் ஸந்தோஷித்து அனுக்ரஹம் செய்தார். காலடியில் மூன்று மாஸ காலம் ஆசார்யர் தங்கியிருக்கும் ஸமயம் தக்ஷிண தேசத்திலிருந்து ஏராளமான சிஷ்யர்கள் வந்து தர்சனம் செய்து கிருதார்த்தர்களானார்கள். அங்கிருந்து கொச்சி மஹாராஜாவின் வேண்டுகோளின் பிரகாரம் அவருடைய அரண்மனைக்கு விஜயம் செய்து அவரால் விசேஷமாக ஸத்காரம் செய்யப்பட்டார். அவருக்கு தர்க்க சாஸ்திரத்திலுள்ள பாண்டித்தியத்தைக்கொண்டாடி அவருக்கு "அபிநவ தர்க்க வாகீசர்" என்ற பிருதையளித்து அனுக்ரஹித்தார்கள்.

பிறகு ஆல்வாய், பரூர், கொச்சி, கோட்டயம், ஆலப்புழை, கொல்லம், ஜனார்த்தனம் வழியாக திருவனந்தபுரம் விஜயம் செய்தார்கள். அங்கு மஹாராஜராலும் கவர்னர்

B. ராமகிருஷ்ணராவினாலும் ஸகல மரியாதைகளுடனும் வரவேற்கப்பட்டு ஸ்ரீபத்மநாபரை தர்சித்துவிட்டு கன்யா குமாரிபோய் அங்கே அம்பிகையை ஆராதித்தார். பிறகு நாகர்கோவில், களக்காடு வழியாக திருநெல்வேலி ஜில்லாவில் ஸஞ்சாரம் செய்தார். அங்குள்ள சேரன்மஹாதேவி, கல்லிடைக்குறிச்சி, கடயம் முதலான கிராமங்களில் விசேஷமாக ஸத்கரிக்கப்பட்டு திருநெல்வேலிக்கு வந்து ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவத்தை நடத்தினார். அங்கிருந்து திருச்செந்தூர், தூத்துக்குடி முதலான இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு குற்றாலம் வந்து 1957ம் வருஷத்திய வியாஸ பூஜை சாதுர்மாஸ்ய ஸங்கல்பாதிகளை நடத்தினார். அங்குள்ள மௌனஸ்வாமிகள் மடத்திலுள்ள ஸித்தேசுவரீ பீடாதிபதி ஸ்ரீத்ரிவிக்ரம ராமாநந்த பாரதீஸ்வாமிகள் அடிக்கடி வந்து ஆசார்யரை தர்சித்தார். பிறகு அவ்வருஷ நவராத்திரி உத்ஸவத்தை செங்கோட்டையில் நடத்திவிட்டு கடயநல்லூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், வர்த்தராயிருப்பு, முதலான ஊர்களிலுள்ள சிஷ்யர்களை அனுக்ரஹித்துவிட்டு ராமநாதபுரம் வழியாக ராமேசுவரம் போய் ராமநாதரை தர்சித்துக்கொண்டு ஸேது யாத்திரையை முடித்துக்கொண்டு சிவகங்கை, தேவகோட்டை, கோவிலூர், குன்னக்குடி, முதலிய கிராமங்களடங்கிய செட்டி நாட்டில் விஜயம் செய்து அங்குள்ள நாட்டுக்கோட்டை செட்டியார்களுடையவும் மற்றும் பக்தர்களுடையவும் விசேஷ ஸத்காரத்தைப் பெற்றுக்கொண்டு அப்படியே ஆவுடையார்கோவில் புதுக்கோட்டை மேலூர் முதலிய இடங்களுக்குப் போய்விட்டு மதுரை வந்து சேர்ந்தார்கள். அங்கேயும் விசேஷமாக பக்தர்களால் வரவேற்கப்பட்டு அங்கே சில நாள் தாமஸித்தார்கள். வழக்கம் போல் மீனாக்ஷியம்மன் ஸுந்தரேசுவரரை தர்சித்துவிட்டு அவ்வருஷத்திய சங்கர ஜயந்தீ உத்ஸவத்தை மதுரையிலேயே வெகு விமர்சையாக நடத்தினார்,

பிறகு சோழவந்தான், திண்டுக்கல், பழனி மார்க்கமாய் 1958 வியாஸ பூஜைக்காக காலடி க்ஷேத்திரத்திற்கே விஜயம்செய்து அந்த சாதுர்மாஸ்யத்திற்காக தங்கினார்கள். அங்கே நடந்த கணபதி ஸதஸ்ஸில் மஹாவித்வானை கொச்சி மஹாராஜா அபிநவ தர்க்க வாகீச ஸ்ரீ ராமவர்மா பரீக்ஷித் கலந்துகொண்டது விசேஷ சோபையை அளித்தது. பிறகு கொல்லங்கோடு, பாலக்காடு வழியாக கோயமுத்தூர் போய் அங்கு நவராத்திரி மஹோத்ஸவத்தை அங்குள்ள பின்னி ஸுப்பராவ் முதலான சிஷ்யர்களின் உத்ஸாஹத்திலும் ஊக்கத்திலும் அதிகோலாஹலமாக நடத்தினார். பிறகு அங்கிருந்து உதகமண்டலம் போய் மைஸூர் மஹாராஜா ஜயசாமராஜ உடையாரையும், C. P. ராமஸ்வாமி அய்யரையும் விசேஷமாக அனுக்ரஹித்துவிட்டு மேட்டுப் பாளையம், ஸத்யமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு வழியாக கரூர் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து கிருஷ்ணராஜபுரம், மஹாதானபுரம், மணத்தட்டை, நங்கவரம் முதலிய கிராமங்களுக்கு விஜயம் செய்து திருச்சிராப் பள்ளிக்கு வந்து ஸ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவத்தை அதி விமர்சையாக நடத்திவிட்டு பிக்ஷாண்டார் கோவிலில் சில நாள் தங்கினார்கள். பிறகு திருவையாறு, மன்னார்குடி, நாகப்பட்டணம், மாயவரம், சிதம்பரம், நெய்வேலி, கும்பகோணம், தஞ்சாவூர், முதலான ஊர்களுக்கு விஜயம் செய்துவிட்டு ஸ்ரீரங்கம், அய்யம்பாளையம், ஸ்ரீநிவாஸ நல்லூர், காட்டுப்புத்தூர், மார்க்கமாக அகண்ட காவேரி வடகரையிலுள்ள அயலூர் என்கிற ஸ்ரீராமஸமுத்திரம் கிராமத்தில் இந்த 1959 வியாஸ பூஜையை நடத்தி சாதுர் மாஸ்ய ஸங்கல்பம் செய்து அங்கே வாஸம் செய்துகொண்டு தன்னை ஆசிரயிக்கும் சிஷ்யர்களுக்கு பரமானுக்ரஹம் செய்துகொண்டு ஆனந்த பரிதர்களாக இருந்து வந்தார்கள். அங்கிருந்து விசுவரூப யாத்திரையாகப் புறப்பட்டு காட்டுப் புத்தூருக்கு விஜயம் செய்து அங்கிருந்து தொட்டியம் மோஹனூர் முதலான கிராமங்களுக்குப் போய்விட்டு



ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஊர்வலம்

சேலத்திற்கு விஜயம் செய்து அங்கு தன் குருநாதரின் ஆராதனையையும் நவராத்திரி மஹோத்ஸவத்தையும் அதி விமர்சையாக நடத்தினார்கள்.

இவ்வாசார்யர் தர்க்கத்திலும் வேதாந்தத்திலும் நிகரற்றவர் என்பதில் ஸந்தேஹமில்லை. இவருடைய குரு பக்தியைப்பற்றி முன்னமேயே கொஞ்சம் பிரஸ்தாபிக்கப் பட்டது. அவர் விஜயம் செய்யும் இடங்களிலெல்லாம் தர்மானுஷ்டானத்தின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்திச் சொல்வதுடன் ஸ்ரீ சங்கர பகவத்பாதருடையவும் பூர்வா சார்யர்களுடையவும் தன் குருநாதருடையவும் மஹிமை யைப்பற்றிச் சொல்லாமலிருப்பதில்லை. தெற்கு கன்னட ஜில்லாவிலுள்ள அசுவத்தபுரம், உல்லால், என்கிற இரண்டு ஸ்தலங்களிலும் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் மூர்த்திகளை பிரதிஷ்டை செய்வித்தார். சிவகங்கையில் கணபதியையும் வீரவநல்லூரில் ஸ்ரீ சாரதாம்பாளையும் பிரதிஷ்டை செய் வித்தார் இவருடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு ஆந்திர பிரதேசத்தின் பிரதான நகரமான ஹைதராபாத்தில் ராஜா வெங்கடராவ் லிம்பேகர் என்கிற பிரபுவின் விசேஷ உதவி யாலும் முயற்சியாலும் கருங்கல்லினாலேயே விஸ்தாரமாக ஸ்ரீ சங்கர பகவத்பாதருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஆலயங்களும் ஸ்ரீ சங்கர மடமும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆசார்யரின் விஜய ஸமயத்தில் மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது.

இவர் வஹித்துவரும் ஸ்தானம் வைதிகத்திலும் லௌகிகத்திலும் அதிஉன்னதமாயிருந்தபோதிலும் இவ ருடைய கருணைப் பெருக்கினால் இவர் யாரிடமும் ஸஹஜ மாகப் பேசிக்கலந்துகொண்டு அவர்களுடைய அன்பைக் கவர்ந்துகொண்டு விடுகிறார். இவருக்கு தெலுங்கு மாத்ரு பாஷை; கன்னடம் தேச பாஷை. தென்தேசத்திலுள்ள சிஷ்யர்களிடம் உள்ள விசேஷ அனுக்ரஹ புத்தியால் தமிழ் பாஷையையும், மற்றும் பரத கண்டத்திலுள்ள சிஷ்யர்

களிடம் ஸல்லாபம் செய்யவேண்டிய ஸௌகர்யத்திற்காக ஹிந்தியையும் அதிசீக்கிரமாக பரிசயம் செய்துகொண்டு விட்டார்கள். இவ்வெல்லா பாஷைகளிலும் வெகு தெளிவாக யாவரும் ஸுலபமாய் அறிந்துகொள்ளக்கூடிய ரீதியில் உபன்யாஸங்கள் செய்து வருகிறார். இவர் விஜயம் செய்யும் இடங்களிலெல்லாம் விசேஷ பக்திசிரத்தையுடன் ஏராளமான ஜனங்கள் இவர் செய்யும் பூஜா வைபவத்தைக் கண்டும் உபதேசமொழிகளைக் கேட்டும் தங்கள் ஆத்யாத்மிகாதி தாபங்களை தீர்த்துக்கொண்டும் அத்யாத்ம மார்க்கத்தில் முன்னேறுவதற்குள்ள ஸாதனங்களை அறிந்துகொண்டும் பலவிதமாய் கிருதார்த்தர்களாகிறார்கள். இம் மஹான் இப்படியே சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்து கொண்டு, ஸ்ரீ சங்கர பகவத்பாதர் இப்பீடத்தையேற்படுத்திய உத்தேசத்திற்கேற்ப, ஆஸேது ஹிமாசலம் வைதிக தர்மத்தை நிலைநிறுத்திக்கொண்டும் அத்யாத்ம தத்வஜ்ஞானத்தை பரவச்செய்து கொண்டும் நீடூழிகாலம் இவ்வியாக்யான ஸிம்ஹாஸனத்தை அலங்கரிக்க வேண்டுமென்று ஸகல பக்தர்களும் பகவானை பிரார்த்திக்கிறார்கள்.

## அத்யாயம் 11

### ஸ்ரீ சிருங்ககிரி ஸம்ஸ்தானம்

மைஸூர் ராஜ்யத்தில் மலை நாட்டுப் பிரதேசத்தில் நான்கு திக்குகளிலும் மலைகளால் சூழப்பட்டிருக்கும் ஒரு பள்ளத்தாக்கில் சிருங்கேரி இருந்து வருகிறது. ஆதிசங்கர பகவத்பாதர் இந்த ரமணீயமான இடத்தை ஸ்ரீ சாரதாம்பாளின் பிரதிஷ்டைக்குத் தகுந்த ஸ்தலமென்று தீர்மானித்ததே அவர் அவதார புருஷர் என்பதற்குச் சான்றாகும். இப்பொழுதும் அவ்வூருக்கு

ஸமீபத்தில் ரயில் ஸௌகர்யம் கிடையாது. சிவமொக்கா, தரிக்கரை, பீரூர், கடூர் முதலான இடங்களில்தான் ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அவைகளிலிருந்து மலைகள் வழியாகவும் காடுகள் வழியாகவும் அறுபது எழுபது மைல் போனால்தான் சிருங்கேரிக்குப் போய்ச்சேர முடியும். இப்பொழுது சில வருஷங்களாக மோட்டார்க் கார் ஸௌகர்யமேற்பட்டிருக்கிறது. முன் காலத்தில் மாட்டு வண்டியில் போவதென்றால் மூன்று நான்கு நாட்கள் வேண்டியிருக்கும். போகும் வழியில் ஒரு பக்கம் செங்குத்தான மலை, மற்றொரு பக்கம் கண்ணுக்குத் தெரியாதவரை பள்ளம். காடுகளில் புலி, யானை முதலிய மிருகங்களின் ஸஞ்சாரமும் ஜாஸ்தி. ஆதி சங்கரபகவத் பாதர் யாத்திரை செய்ததெல்லாம் பாதசாரியாகவேதான். அவர் ஸரஸ்வதியின் அவதாரமான உபயபாரதியை ஜயித்து வனதுர்க்கா மந்திரத்தினால் அவளைக் கட்டித் தன்னுடனேயே வரவேண்டுமென்று கேட்டதற்கு அவளும் ஸம்மதித்தாள்; ஆனால் "நான் வருகிறேனாவென்று திரும்பிப் பார்க்கக்கூடாது" என்ற நிபந்தனையும் போட்டாள். அப்படியே ஒப்புக்கொண்டு இருவரும் சிருங்கேரிக்கு வரும் ஸமயத்தில் அம்பிகையின் கால் சலங்கை சப்தம் கேட்காததைக் கண்டு ஆசார்யர் ஸந்தேஹித்துத் திரும்பிப் பார்த்துவிட்டார். அதனால் "நான் இனி வரமுடியாது, இங்கேயே தங்கிவிடப்போகிறேன்" என்று அம்பாள் சொல்லிவிட்டாள். உடனே அவள் நின்றுகொண்டிருந்த இடத்தில் அவள் கலையை ஆகர்ஷணம் செய்து ஸ்ரீ சக்ரரூபமாகப் பாறையிலேயே பிரதிஷ்டை செய்து சந்தனக்கட்டையினால் ஒரு பிம்பத்தையும் ஏற்படுத்தி ஆலயம் கட்டிவைத்தார் என்று ஒரு பழைய வதந்தியும் உண்டு. பிரஸவித்துக்கொண்டு சிரமப்பட்ட ஒரு தவளைக்கு ஸர்ப்பம் தன் படத்தை விரித்து நிழல் கொடுத்ததைப் பார்த்து சாந்தி நிறைந்த இடம் இதுவே என்று சங்கரபகவத்பாதர் இந்த ஸ்தலத்தில் அம்பிகையை

பிரதிஷ்டை செய்தார் என்ற விருத்தாந்தத்தைப்பற்றி முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸர்ப்பம் படமெடுத்த துங்காநதிக்கரையில் இந்த ஸம்பவத்தின் ஞாபகார்த்தமாக ஒரு சிவலிங்கம் பாறையில் அடிக்கப் பட்டு இன்றும் அந்த ஸ்தலம் காண்பிக்கப்படுகிறது

சங்கரபகவத்பாதர் வைதிக தர்மத்தை இவ்வளவு பரிஷ்காரம் செய்து ஸகலரும் அனுஷ்டிக்கும்படி பலவித மான ஏற்பாடுகள் செய்திருந்தும், இந்த தர்மம் தன்னுல் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு மடங்களிலுள்ள சிஷ்ய பரம்பரை மூலமாக சாசுவதமாக பரிபாலிக்கப்பட்டு வர வேண்டுமென்று ஸங்கல்பித்திருந்தும், கலியுக மஹிமை யினுல் தர்மத்தில் ஜனங்களுக்குப் பற்றுதல் குறைந்தே வந்தது. அதைக்கண்டு மறுபடியும் அவர்களுக்கு ஊக்க மும் பக்தியும் ஏற்படவேண்டுமென்று நினைத்து வித்யா ரண்யர் லௌகிக அந்தஸ்தையும் ஆடம்பரங்களையும் இப் பீடாதிபதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்தார். அதே ஸமயத் தில், ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தையும் புதுப்பித்து அங்கே அம்பாளுக்கு ஒரு ஸ்வர்ண விக்ரஹத்தையும் ஸ்தாபித்து ஆராதனக் கிரமங்களை விஸ்தரித்துக்கொடுத்தார், அநேகம் அரசர்களும் பிரபுக்களும் ஈடுபட்டுப் பலவிதமான கைங்கர் யங்கள் செய்தும் மானிப நிலங்களை ஜாரிசெய்தும் தங்கள் பக்தியைக் காட்டி பகவானுடைய கிருபைக்கு பாத்திர மானுர்கள். வித்யாரண்யரால் ஏற்படுத்தப்பட்ட ஆலய மும் இக்காலத்திய ஜனங்களுக்கு ஆவர்ஜகமாயிராதென்று தோன்றி பரமாசார்யரான ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் அவ்வாலயத்தை நல்ல கல்லிஞு லேயே கட்டிவிடவேண்டுமென்று ஸங்கல்பித்து 1907-ல் அஸ்திவாரம் போட்டுக் கொடுத்தபடி கட்டிடம் வெகு அழகாகக் கட்டி முடிந்து 1916ல் ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளால் அதிவிமர்சையாக கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது. மத்தியிலுள்ள கர்ப்பகிருஹம் நன்கு இழைக்கப்



ஸ்ரீ சாரதாம்பாள் (சிருங்கேரி)

பட்ட கருங்கல்லினால் கட்டப்பட்டு வெகு ரமணீயமாக அமைந்திருக்கிறது. முன் மண்டபத்தில் ஒவ்வொரு தூணிலும் செதுக்கப்பட்டிருக்கிற அத்புதமான சிற்பங்களும், சுற்றிவரும் விஸ்தாரமான பிராகார நடைபாதையும், அதையொட்டியிருக்கிற மேடான திண்ணையும், அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற விக்னேசுவர மூர்த்தியும், மற்றும் மனோஹரமாயிருக்கிற அம்சங்கள் யாவும் மூல ஸ்தானத்திலுள்ள அந்த அம்பாளின் ஸாந்நித்ய விசேஷத்தினால் மஹத்தான அத்யாத்ம சோபையையடைந்து தர்சிக்கிறவர்களின் மனதைப் பார்த்த மாத்திரத்தில் தூய்மைப் படுத்துகின்றன. இப்பொழுது அத்திண்ணையின் மேல் மாடியில் கட்டிடமும், ஆலயத்தின் முன்வாசலில் கோபுரமும், இப்பொழுதுள்ள ஆசார்யருடைய ஸங்கல்பப்படி கட்டிக்கொண்டு வரப்படுகின்றன. இவைகளும் கட்டி முடிந்தவுடன் இவ்வாலயமே ஒரு புதுசோபையை அடையுமென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த சோபைக்கெல்லாம் காரணம் சங்கரபகவத்பாதரின் வேண்டுகோளின்படி இங்கே ஸாந்நித்யம் அடைந்து பக்தர்களைத் தன் கருணை கடாக்ஷத்தினால் அனுக்ரஹித்துவருகிற ஸ்ரீசாரதாம்பாளின் மஹிமை என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆதி ஆசார்யர் முதற்கொண்டு இதுவரை இந்த பீடத்தில் அமர்ந்து பக்தி புரஸ்ஸரமாய் இவ்வம்பாளை ஆராதித்து வந்த மஹான்களின் பரம்பரையினாலேயே அந்த ஸாந்நித்யம் கொஞ்சமேனும் குன்றாமல் நாளுக்குநாள் விருத்தியடைந்து வந்திருக்கிறது. இந்த ஆலயத்தின் மூல ஸ்தானத்தில் அம்பிகை தான். பிரஸித்தமான மற்ற கோவில்களிலெல்லாம் அம்பாளுக்கு எவ்வளவு பிராதான்யமிருந்தபோதிலும், அவளை சக்திரூபிணியாகப் பாவித்து சக்திமானாக பகவானுடைய மூர்த்தியையும் வைத்தே ஆராதிப்பது வழக்கமாயிருக்கிறது. இங்குள்ள சாரதாதேவீ சக்திரூபிணிகளான துர்க்கா, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ இவர்

களுக்கு அதீதமாகவும், ஸகுணமான பிரஹ்மா, விஷ்ணு, மஹேசுவரர் இவர்களுக்கு அதீதமாகவும் உள்ள கேவலம் பிரஹ்மசைதன்யமான தத்வமே என்று பாவிக்கப்படுகிற படியால் இங்கு தனித்தே இருக்கிருள். ஸகல ஸகுண ரூபங்களையும் அவளிடத்திலேயே அந்தந்த தேவதைகளின் விசேஷ பூஜாகாலத்தில் கல்பித்துக்கொண்டு பூஜை செய்வார்கள். இவ்விதமாகவே பரமாசார்யார் இவளை ஸ்துதித்து பலவிதமாகச் சொல்லியிருக்கும் சுலோகங்களில் இவளை ஸர்வதேவதா ஸ்வரூபிணியாகவும் சுத்த பிரஹ்மமாகவும் பாவித்தே வந்திருக்கிருர்களென்பது நன்கு துலங்கும்.

சிருங்கேரியிலுள்ள மற்ற ஆலயங்களில் வித்யாசங்கரர் ஆலயத்தைப்பற்றி முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வடபுறமுள்ள ஜனார்த்தன ஆலயமானது வெகு பிராசீனமாகத் தெரிகிறது. ஸுரேசுவராசார்யரின் அதிஷ்டானம் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திற்குத் தென்புறமிருக்கிறது. முன் ஆசார்யர்களின் அநேக அதிஷ்டானங்கள் சிறுசிறு ஆலயங்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சரித்திரவிமர்சகர்கள் ஸ்ரீமடம் ஆதாரங்களைப் பரிசிலனைசெய்து எந்த ஆலயம் யாருடைய அதிஷ்டானம் என்று நிர்ணயிக்க வேண்டிய ஸ்திதியிலிருக்கிறது. முன் சொன்னபடி ஐந்து தலைமுறை வரையுள்ள பூர்வாசார்யர்களின் அதிஷ்டானங்கள் உள்பட சில அதிஷ்டானங்கள்தான் ஸந்தேஹமன்னியில் தெரிகின்றன. இவ்வாலயங்களைத் தவிர, ராமர், பிரஹ்மா, பைரவர், துர்க்கா, காளி, ஹநுமான் முதலான பல மூர்த்திகளுக்கு அங்கங்கே சிறு ஆலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சங்கரபகவத்பாதரின் ஆலயம் பழைய மடம் கட்டிடத்தின் மத்தியிலுள்ள விசாலமான முற்றத்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஆசார்யருடைய வாஸத்திற்காகத் துங்கையின் தென்கரையில் ஸச்சிதாநந்த விலாஸம் என்றும், வடகரையில் சந்திரமௌளீசுவர தொட்டி

என்றும் வெகு அழகாக கட்டப்பட்டிருக்கின்றன. அவை களிலேயே, ஸ்ரீ சந்திரமௌளீசுவரர், ரத்னகர்ப்பகணபதி, காமேசுவரர் முதலான மூர்த்திகளுக்கு நித்திய பூஜை நடப் பதால், அவைகளையும் ஆலயங்களாகவே பாவிக்க வேண்டியது நியாயம்.

சிருங்கேரி யென்பது சிருங்ககிரி என்ற சப்தத்தின் மருவினால் ஏற்பட்டது. அதுவும் ரிஷ்ய சிருங்ககிரி என்ற பூராப்பெயரின் சுருக்கமேயாகும். புராணப் பிரஸித்தராய் ராமாவதாரத்திற்கு வேண்டிய புத்திரகாமேஷ்டி யாகத்தைத் தசரதருக்குச் செய்வித்தவரான ரிஷ்யசிருங்க மஹர்ஷியின் தகப்பனாரான விபண்டகருடைய ஆசிரமம் தான் இப்பொழுதுள்ள சிருங்கேரியாகும். இங்கேயே பால்யத்தில் ரிஷ்ய சிருங்கர் இருந்து வந்ததால் அவர் பெய ராலேயே பிரஸித்தியடைந்து விட்டது. அவர் தகப்பனார் ஆராதித்து வந்து ஐக்யமடைந்த மஹாலிங்கம் மலஹானி கரேசுவரர் என்ற பெயருடன் ஊருக்கு மத்தியிலுள்ள மலையின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தில் விளங்கி வருகிறது. ரிஷ்யசிருங்கர் ஆராதித்து ஐக்யமடைந்த லிங்கம் சிருங்கேரியிலிருந்து ஆறு மைல் தூரத்திலுள்ள கிக்க என்ற ரிஷ்யசிருங்க புரத்திலுள்ள ஆலயத்தில் இருந்து வருகிறது. இவர் அந்த லிங்கத்தில் அந்தர்பாவ மடைந்ததற்கு அறிகுறியாக அந்த லிங்கத்தின் சிரஸில் கொம்பு போல ஒரு முண்டு தெரிகிறது. மழையில்லாமல் ஜனங்கள் வருந்தினால் இம்மூர்த்திக்கு விசேஷ அபிஷேகாதி கள் செய்தவுடன் மழை பெய்கிறதென்பது இப் பொழுதும் பிரத்யக்ஷ ஸித்தம்.

சிருங்கேரி மடத்திற்கு சிருங்கேரியிலுள்ள பலவித ஸ்தாபனங்களைத் தவிர பங்களூரில் சங்கரமடமும் காலடி யில் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களும் முன்னமேயே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே மைஸூர் மடத்தைப்பற்றியும், நஞ்சன் கூடு மடத்தைப்பற்றியும்

பிரஸ்தாபிக்கப்பட்டது. இவைகள் தவிர பரதகண்டத்தில் அநேக இடங்களில் மடத்திற்கு சொந்தமான கட்டிடங்களும் ஸ்தாபனங்களும் இருந்துவருகின்றன. ஹரித்வாரம் காசி, கயா, காஞ்சீபுரம், சென்னை, திருப்பதி, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர், கோபிசெட்டிப் பாளையம், ஸத்யமங்கலம், கோகர்ணம், நாஸிகம், முதலான பலவிடங்களில் இருக்கின்றன. இவ்வாசார்யர் பீடத்திற்கு வந்தது முதல் அந்தந்த இடங்களிலுள்ள சிருங்கேரி மடம் கட்டிடங்களை பழுதுபார்த்தும் புதுப்பித்தும் வருகிறார்கள். காசியிலுள்ள விஸ்தாரமான மடத்தை பூராவும் புதுப்பித்துப் பெரிதாகக்கட்டி வருகிறார்கள். அப்படியே கோயமுத்தூரில் உள்ள சங்கரமடம் ஓட்டுக்கட்டிடமாயிருந்ததை எடுத்துவிட்டு பங்களூர் சங்கரமடம் மாதிரியே பெரிதாக வெகு அழகாகக் கட்டும்படி ஆக்ஞாபித்தவாறு, அங்குள்ள சிஷ்யர்கள் வெகுசீக்கிரத்தில் மிகுந்த ஊக்கத்துடன் கட்டி முடித்திருக்கிறார்கள்.

விஜய நகரம் ஸம்ஸ்தானத்திலிருந்து 1346 முதல் பல அரசர்களும் அந்த ஸம்ஸ்தானம் உலைந்த பிறகு ஏற்பட்ட சிற்றரசர்களும் பிரபுக்களும் இம்மடத்திற்குப் பலஸமயங்களில் நிலங்கள் ஜாரிசெய்திருப்பதாகவும் அவைகளுக் கேற்பட்ட தீர்வை விஷயமாக அடிக்கடி அதிகாரிகள் மூலமாய்த் தீர்மானம் செய்துகொள்ள அவசியம் ஏற்பட்டதாகவும் முன்சொல்லப்பட்டது. அந்தந்த தானசாஸனங்களில் குறிப்பிட்ட தர்மங்களுக்காகவே அவை கொடுக்கப்பட்டதாகக் கண்டிருக்கிறபடியால் ஆசார்யர் அந்நிலங்களின் வரும்படியை இஷ்டப்படி செலவழிக்கமுடியாது. வரும்படிகளை வசூலிப்பதும் சிரமமான கார்யம். சிருங்கேரிமடத்துச் சொத்துக்களின் நிர்வாஹம் ஆசார்யரிடமே இருப்பதாகச் சொன்னாலும், லௌகிக கார்யங்களைக்கவனிக்க ஒரு ஸர்வாதிகாரி அவசியமாகும். பூர்வாசார்யார் லௌகிக கார்யங்களைக் கொஞ்சமேனும் கவனிக்க இடமில்லாமல் அடிக்




ஸ்ரீ சங்கர மடம், கோயமுத்தூர்.

கடி அந்தர்முகமாகவிருக்க ஆரம்பித்து விட்டபடியால் மடத்தின் சொத்துக்களைச் சரியானபடி பரிபாலிக்க வேண்டிய அவசியத்தை உத்தேசித்து மைஸூர் ஸம்ஸ்தானத்திலிருந்து ஒரு உத்யோகஸ்தரை நியமித்து இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு சிலகாலமாக நடத்திக் கொண்டு வந்தார்கள். இவ்வாசார்யார் பீடத்திற்கு வந்த பிறகும் அதே நிலை இருந்து வந்தது. இதன் மத்தியில் இந்திய ஸர்க்கார் ஜமீன்தார்களிடத்திலிருந்தும் ஜாகீர்தார்களிடத்திலிருந்தும் சொத்துக்களை எடுத்து மற்ற அயன் நிலங்களைப்போல இவைகளையும் குடிகளுக்கே பாத்தியப் படுத்திக்கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பிரவிருத்தி செய்ததின் பலனாக மைஸூர் ராஜ்யஸர்க்காரும் அதற்குத்தகுந்த சட்டங்கள் இயற்றும்படி ஏற்பட்டது. அந்த சட்டங்களின் கீழ் சிருங்கேரி மடத்திற்கு பாத்தியப் பட்ட இனும் ஜாகீர் நிலங்களும் வந்து விட்டபடியால் அந்த ஜாகீர் பூராவையும் மைஸூர் ஸர்க்காரில் இப்பொழுது ஏடுத்துக்கொண்டு விட்டார்கள். இந்த ஜாகீரிலிருந்து மடத்திற்கு வருஷாவருஷம் வசூல்செலவுபோக வருமானம் வரக்கூடியதை ஒருவிதமாய்க்கணக்கிட்டு மைஸூர் ஸர்க்காரிலிருந்து வருஷம் ஒன்றுக்கு ஒன்றரை லக்ஷரூபாய் மடத்திற்கு மொத்தமாய்க் கொடுத்துவிடுவது என்று தீர்மானித்து சட்டம் இயற்றியிருக்கிறார்கள். இவ்விதம் மைஸூர் ஸர்க்காரால் எடுத்துக்கொண்ட சொத்துக்களைத் தவிர, மைஸூர் ராஜ்யத்திலும் மைஸூர் ராஜ்யத்திற்கு வெளியிலும் மடத்திற்கு அநேக சொத்துக்கள் இன்னமும் இருந்து வருகின்றன. அவைகளின் சுருக்கமான விவரம் அனுபந்தத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

சிருங்கேரியில் ஸத்வித்யா ஸஞ்ஜீவினி என்கிற ஸ்ரீ மடத்துப் பாடசாலையில் சுமார் 80 மாணவர்களுக்கு ருக் வேதமும் யஜுர் வேதமும் அத்யயனமும், தர்க்கம், வியாகரணம், ஸாஹித்யம் முதலான சாஸ்திரங்களில் பாடமும்

சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. பங்களூர் ஸ்ரீ சங்கர மடம் பாடசாலையில் பூர்வமீமாம்ஸையிலும் வேதாந்தத்திலும் மேல் க்ரந்தங்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. காலடி வேதபாடசாலையில் வேதாத்யயனமும், வேதாந்த பாடசாலையில் வேதாந்தபாடங்களும் கற்பிக்கப் பட்டுவருகின்றன. அப்படியே நஞ்சங்கூடிலும் மைஸூரிலுமுள்ள ஸ்ரீ சங்கரமடங்களில் வேதாத்யயனமும் சாஸ்திர பாடமும் சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இடத்திலும் அத்யாபகருக்கும், வித்யார்த்திகளுக்கும் வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றன. இப்பாடசாலைகளின் நிர்வாஹத்திற்காக வருஷமொன்றுக்கு சுமார் ரூ. 50000 செலவாகிறது. இதைத்தவிர பல இடங்களில் தர்மபிரசாரத்திற்காக பண்டிதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரதான உத்ஸவஸமயங்களான ஸ்ரீ சங்கரஜயந்தி, நவராத்ரி, விநாயகசதுர்த்தி முதலான ஸந்தர்ப்பங்களில் விசேஷமாக பண்டித ஸதஸ்ஸைக்கூட்டி, அவர்களைக்கொண்டு வாக்யார்த்தங்களும், உபந்யாஸங்களும் நடத்த ஏற்பாடு செய்து எல்லா பண்டிதர்களுக்கும் யோக்யதைக்குத் தக்கவாறு ஸன்மானங்களும் செய்யப் பட்டு வருகின்றன. ஸ்ரீ மடத்திற்குட்பட்ட அந்தந்த தேவாலயங்களில் நித்ய பூஜைகளுடன் விசேஷ உத்ஸவங்களும் நடைபெறுகின்றன.

மடத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிடங்களையும் சொத்துக்களையும்விட மிகவும் மதிப்புள்ள ஆஸ்தி சிஷ்யர்களின் குருபக்தியேயாகும். இதனாலேயே ஆசார்யருக்கு வெகு ஸந்தோஷமும் திருப்தியும் ஏற்படுகிறது. குருபக்தி என்பது அவருக்கு விசேஷமாக தனத்தினால் ஸத்காரம் செய்வதும் வாக்கினால் ஸ்தோத்திரம் செய்வதுமேயாகுமென்று ஸாமான்ய ஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் குரு நம்முடைய சிரேயஸ்ஸை உத்தேசித்துச் செய்யும் உபதேசங்களைக் கேட்டு அவை

களின்படி அவரவர்கள் யோக்யதையை அநுஸரித்து சாஸ்திரீயவழியில் நடப்பதே தான் குருபக்தியாகும். ஆதிசங்கர பகவத்பாதர் முதற்கொண்டு இதுவரை இந்த உத்தமமான சாரதாபீடத்தில் அமர்ந்து சிஷ்யர்களுக்குப் போதித்ததெல்லாம் வைதிகமார்க்கத்தை சிரத்தாபக்தியுடன் அனுஷ்டித்து ஸகலரும் இஹபரசிரேயஸ்ஸை அடையவேண்டுமென்பதே. அதையே இக்காலத்திலும் ஜனங்களுக்குத் தெளிவாய் எடுத்துச்சொல்லிக்கொண்டு உலகக்ஷேமத்தைக் கருதி ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவரரை ஆராதித்து வரும் **ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளின்** பாத ஸேவையைச்செய்து அவருடைய பரமகிருபைக்குப் பாத்திரராவோமாக!

**சுபம்**

அநுபந்தம்-1.

॥ श्रीगुरुभ्यो नमः ॥

# ஸ்ரீ ஜகத்குரு பரம்பரை

| | | ஸன்யாஸ தினம் | | | முக்தி தினம் | | | பீடாதிபத்ய காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கி. பி. | | | கி. பி. | | | |
| 1. | ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார் | | | ... | | | ... | ... |
| 2. | ,, ஸுரேசுவராசார்யார் | | | ... | 773 | பிரமாதீச | மாக சு. 12 | ... |
| 3. | ,, நித்யபோதகஞாசார்யார் | 757 | விளம்பி | ஆசு. சு. 12 | 848 | விபவ | பாத்ர சு. 13 | 75 |
| 4. | ,, ஞானகஞாசார்யார் | 846 | அக்ஷய | கார். சு. 12 | 910 | பிரமோதூத | ஆஷா. கிரு. 5 | 62 |
| 5. | ,, ஞானோத்தமாசார்யார் | 905 | க்ரோதன | வைசா. சு. 7 | 953 | ப்ரமாதீச | பால். சு. 7 | 43 |
| 6. | ,, ஞானகிரியாசார்யார் | 949 | ஸெளம்ய | பௌஷ. சு. 11 | 1038 | பகுதான்ய | ச்ரா. கிரு 10 | 85 |
| 7. | ,, ஸிம்ஹகிரியாசார்யர் | 1036 | தாது | ஆசு. கிரு. 3 | 1098 | பகுதான்ய | வை. கிரு. 8 | 60 |
| 8. | ,, ஈசுவரதீர்த்தர் | 1097 | ஈசுவர | சை. கிரு. 5 | 1146 | அக்ஷய | சைத்ர. சு. 1 | 48 |
| 9. | ,, நரஸிம்ஹதீர்த்தர் | 1146 | க்ரோதன | மாக. சு. 11 | 1228 | ஸர்வதாரீ | பால். சு. 6 | 82 |
| 10. | ,, வித்யாசங்கரதீர்த்தர் | 1228 | ஸர்வதாரீ | கார். சு. 11 | 1333 | ஸ்ரீமுக | கார். சு. 7 | 105 |
| 11. | ,, பாரதீகிருஷ்ணதீர்த்தர் | 1328 | விபவ | சைத்ர சு. 7 | 1380 | ரௌத்ர | பாத்ர சு. 12 | 47 |
| 12. | ,, வித்யாரண்யர் | 1331 | ப்ரஜோத்பத்தி | கார். சு. 7 | 1386 | அக்ஷய | சைத்ர சு. 13 | 6 |
| 13. | ,, சந்திரசேகரபாரதீ I. | 1368 | கீலக | ஆஷாட சு. 5 | 1389 | சுக்ல | வை. கிரு. 10 | 3 |
| 14. | ,, நரஸிம்ஹபாரதீ I. | 1387 | ப்ரபவ | மாக சு. 2 | 1408 | ஸர்வதாரீ | பௌஷ சு. 8 | 19 |
| 15. | ,, புருஷோத்தமபாரதீ I. | 1406 | வ்யய | வை. சு. 15 | 1448 | விபவ | ச்ரா. சு. 11 | 40 |
| 16. | ,, சங்கரானந்தபாரதீ | 1428 | கீலக | மாக சு. 11 | 1454 | பவ | மாக சு. 8 | 6 |
| 17. | ,, சந்திரசேகரபாரதீ II. | 1449 | சுக்ல | ஆஷாட சு. 6 | 1464 | தாரண | மார். கிரு. 5 | 10 |
| 18. | ,, நரஸிம்ஹபாரதீ II. | 1464 | தாரண | மார். சு. 11 | 1479 | விகாரி | ஆசு. கிரு. 5 | 15 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19. | ஸ்ரீ புருஷோத்தமபாரதி II. | 1472 நந்தன | பால். சு. 13 | 1517 ஈசுவர | ஜ்யே. கிரு. 13 | 38 |
| 20. | ,, ராமசந்திரபாரதி | 1508 விபவ | வை. கிரு. 10 | 1560 ரௌத்ரி | பௌஷ கிரு. 8 | 43 |
| 21. | ,, நரஸிம்ஹபாரதி III. | 1557 பிங்கள | ஜ்யே. கிரு. 2 | 1573 ஸ்ரீமுக | ஆஷாட கிரு. 5 | 13 |
| 22. | ,, நரஸிம்ஹபாரதி IV. | 1563 ருதிரோத்காரி | ச்ரா. கிரு. 12 | 1576 தாது | சைத்ர சு. 11 | 3 |
| 23. | ,, நரஸிம்ஹபாரதி V. | 1576 தாது | சைத்ர சு. 11 | 1599 விகாரி | மாக கிரு. 12 | 23 |
| 24. | ,, அபிநவநரஸிம்ஹபாரதி I. | 1599 விகாரி | ஆசு. கிரு. 7 | 1622 துந்துபி | பால். கிரு. 7 | 23 |
| 25. | ,, ஸச்சிதாநந்தபாரதி I. | 1622 துந்துபி | பாத்ர. கிரு. 3 | 1663 சோபக்ருத் | ஆஷா. கிரு. 6 | 41 |
| 26. | ,, நரஸிம்ஹபாரதி VI. | 1663 சோபக்ருத் | ஜ்யே. சு. 10 | 1705 பார்த்திவ | பால். கிரு. 6 | 42 |
| 27. | ,, ஸச்சிதாநந்தபாரதி II. | 1705 பார்த்திவ | பால். சு. 15 | 1741 துர்மதி | ஜ்யே. சு. 10 | 36 |
| 28. | ,, அபிநவ ஸச்சிதாநந்தபாரதி I. | 1741 துர்மதி | ஜ்யே. சு. 3 | 1767 ஸர்வஜித் | மார். சு. 6 | 26 |
| 29. | ,, அபிநவநரஸிம்ஹபாரதி II. | 1767 ஸர்வஜித் | மார். சு. 6 | 1770 விக்ருதி | பாத்ர. சு. 12 | 3 |
| 30. | ,, ஸச்சிதாநந்தபாரதி III. | 1770 விக்ருதி | பாத்ர. சு. 12 | 1814 பவ | அதிபாத்ர சு. 14 | 44 |
| 31. | ,, அபிநவ ஸச்சிதாநந்தபாரதி II. | 1814 பவ | அதிபாத்ர சு. 13 | 1817 ஈசுவர | பால். கிரு. 6 | 3 |
| 32. | ,, நரஸிம்ஹபாரதி VII. | 1817 ஈசுவர | பால். கிரு. 1 | 1879 பிரமாதி | ஜ்யே. சு. 2 | 62 |
| 33. | ,, ஸச்சிதாநந்த சிவ அபிநவநரஸிம்ஹபாரதி | 1866 அக்ஷய | ஆஷா. சு. 6 | 1912 பரிதாபி | சை. சு. 2 | 33 |
| 34. | ,, சந்திரசேகரபாரதி III. | 1912 பரிதாபி | சை. கிரு. 6 | 1954 ஜய | ப்ரோ. கிரு. 15 | 42 |
| 35. | ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் | 1931 ப்ரஜோத்பத்தி | ஜ்யே. சு. 5 | | | |

அனுபந்தம் 2.

## A. ஸ்ரீ மடம் கட்டிடங்கள்

| ஊர் | ஜில்லா |
|---|---|
| ஸ்ரீநிவாஸபுரா | மைஸூர் |
| நஞ்சன் கூடு | ,, |
| குக்கே ஸுப்ரஹ்மண்ய, | தென் கன்னடம் |
| கோகர்ணம் | வட கன்னடம் |
| சென்னைப்பட்டணம் | மதராஸ் |
| காஞ்சீபுரம் | செங்கல்பட்டு |
| மதுரை | மதுரை |
| திண்டுக்கல் | ,, |
| பெரியகுளம் | ,, |
| ராமநாதபுரம் | ராமநாதபுரம் |
| ராமேசுவரம் | ,, |
| திருநெல்வேலி | திருநெல்வேலி |
| கோடகநல்லூர் | ,, |
| வீரவநல்லூர் | ,, |
| ஸத்யமங்கலம் | கோயமுத்தூர் |
| கோபிசெட்டிப்பாளையம் | ,, |
| பவானி | ,, |
| ஈரோடு | ,, |
| கோயமுத்தூர் | ,, |
| திருப்பதி | சித்தூர் |
| ராஜமஹேந்திரம் | கிழகோதாவரி |
| நாஸிகம் | பம்பாய் |
| காசி | உத்தரபிரதேசம் |
| பஞ்சகங்கா | ,, |
| ஹரித்வாரம் | ,, |
| கயா | பீஹார் |

## B. ஸ்ரீ மடம் நிலங்கள்

| ஊர் | ஜில்லா |
|---|---|
| ஹரக்கேரே | சிவமொக்கா |
| அகஸநஹள்ளி | ,, |
| மொஜப்பன்ஹோஸூர் | ,, |
| கல்லூர் | ,, |
| மண்டலீ | ,, |
| கோபீசெட்டிகொப்பா | ,, |
| ஆனந்தவல்லி | ,, |
| சிரகாஜி | சிக்கமகளூர் |
| பெலவாடி வகையரு 12 கிராமங்கள் | ,, |
| ஹோஸ்நகர் | சிவமொக்கா |
| ரணகட்டா | ஹாஸன் |
| ஸூரடிரா | ,, |
| கிருவாலே | ,, |
| சிருங்கேரி வகையரு 23 கிராமங்கள் | சிக்கமகளூர் |
| தீர்த்தஹள்ளி 13 கிராமங்கள் | சிவமொக்கா |
| பேகூர் | ,, |
| உர்கடூர் | ,, |
| ஹரிஹள்ளி | ஹாஸன் |
| ப்ரஹ்மபுரா | ஸ்ரீரங்கப்பட்டணம் |
| குடுபள்ளி | ,, |
| மேகூர் | சிக்கமகளூர் |
| சாவல்மனே | ,, |
| தனயங்கன்புரா | பங்களூர் |
| அரளகரே | ,, |
| தல்யஸந்த்ரா | ,, |

| ஊர் | ஜில்லா |
|---|---|
| ஹரேஹள்ளி | மைஸூர் |
| கல்ஹள்ளி | ,, |
| ஹட்ரி வகையரு 3 கிராமங்கள் | தார்வார் |
| கங்காபுர | ,, |
| பலகூர் | தென்கன்னடம் |
| ஹாவிபஸபுரா | பெல்லாரி |
| சின்னம்மாபேட் | சித்தூர் |
| பெம்பல்கன் | அஹமத்நகர் |
| தவதரேந்தல் | ராமநாதபுரம் |
| புள்ளங்குடி வகையரு 5 கிராமங்கள் | ,, |
| கொழுமம் | கோயமுத்தூர் |
| கணியூர் | ,, |
| கடத்தூர் | ,, |
| தொனப்பவூர் வகையரு 5 கிராமங்கள் | ,, |
| மேல்சித்திரை சாவடி | ,, |
| காங்கயம் | ,, |
| குமாரவயலூர் | திருச்சிராப்பள்ளி |
| அயலூர் | ,, |
| தேடாவூர் | சேலம் |
| ஆலபுரம் | ,, |
| வெள்ளப்பட்டி | ,, |
| கீழ்மங்கலம் | மதுரை |
| பாப்பாக்குடி | திருநெல்வேலி |
| கீழப்பாவூர் | ,, |
| சிந்துப்பூந்துரை | ,, |
| முன்னீர்பள்ளம் | ,, |
| கீழநத்தம் | ,, |
| கோடகநல்லூர் | ,, |

## ॥ श्रीशंकराचार्याष्टोत्तरशतनामावलिः ॥

## ஸ்ரீ சங்கராசார்ய அஷ்டோத்தர சதநாமாவளி

ओं श्रीशंकराचार्यवर्याय नमः
ஓம் ஸ்ரீஶங்கராசார்ய வர்யாய நம:
ब्रह्मानन्दप्रदायकाय नमः
ப்ரஹ்மானந்தப்ரதாயகாய நம:
अज्ञानतिमिरादित्याय नमः
அக்ஞான திமிராதித்யாய நம:
सुज्ञानाम्बुधिचन्द्रमसे नमः
ஸுஞானாம்புதி சந்த்ரமஸே நம:
वर्णाश्रमप्रतिष्ठात्रे नमः
வர்ணாஶ்ரம ப்ரதிஷ்டாத்ரே நம:
श्रीमते नमः
ஸ்ரீமதே நம:
मुक्तिप्रदायकाय नमः
முக்திப்ரதாயகாய நம:
शिष्योपदेशनिरताय नमः
ஶிஷ்யோபதேஶநிரதாய நம:
भक्ताभीष्टप्रदायकाय नमः
பக்தாபீஷ்டப்ரதாயகாய நம:
सूक्ष्मतत्त्वरहस्यज्ञाय नमः
ஸூக்ஷ்மதத்வரஹஸ்யக்ஞாய நம: 10
कार्याकार्यप्रबोधकाय नमः
கார்யாகார்ய ப்ரபோதகாய நம:
ज्ञानमुद्राञ्चितकराय नमः
ஞான முத்ராஞ்சிதகராய நம:
शिष्यहृत्तापहारकाय नमः
ஶிஷ்ய ஹ்ருத்தாபஹாரகாய நம:

ओं परिव्राजाश्रमोद्धर्त्रे नमः
ஓம் பரிவ்ராஜாஶ்ரமோத்தர்த்ரே நம:
सर्वतन्त्रस्वतन्त्रधिये नमः
ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரதியே நம:
अद्वैतस्थापनाचार्याय नमः
அத்வைதஸ்தாபநாசார்யாய நம:
साक्षाच्छंकररूपभृते नमः
ஸாக்ஷாத்ஶங்கர ரூபப்ருதே நம:
षण्मतस्थापनाचार्याय नमः
ஷண்மதஸ்தாபநாசார்யாய நம:
त्रयीमार्गप्रकाशकाय नमः
த்ரயீ மார்கப்ரகாஶகாய நம:
वेदवेदान्ततत्त्वज्ञाय नमः
வேதவேதாந்த தத்வக்ஞாய நம: 20
दुर्वादिमतखण्डनाय नमः
துர்வாதி மதகண்டநாய நம:
वैराग्यनिरताय नमः
வைராக்யநிரதாய நம:
शान्ताय नमः
ஶாந்தாய நம:
संसारार्णवतारकाय नमः
ஸம்ஸாரார்ணவதாரகாய நம:
प्रसन्नवदनाम्भोजाय नमः
ப்ரஸந்நவதநாம்போஜாய நம:
परमार्थप्रकाशकाय नमः
பரமார்த்த ப்ரகாஶகாய நம:
पुराणस्मृतिसारज्ञाय नमः
புராண ஸ்ம்ருதிஸாரக்ஞாய நம:

ओं नित्यतृप्ताय नमः

ஓம் நித்யத்ருப்தாய நம:

महते नमः

மஹதே நம:

शुचये नमः

ஶுசயே நம: 30

नित्यानन्दाय नमः

நித்யானந்தாய நம:

निरातङ्काय नमः

நிராதங்காய நம:

निःसङ्गाय नमः

நிஸ்ஸங்காய நம:

निर्मलात्मकाय नमः

நிர்மலாத்மகாய நம:

निर्ममाय नमः

நிர்மமாய நம:

निरहंकाराय नमः

நிரஹங்காராய நம:

विश्ववन्द्यपदाम्बुजाय नमः

விஶ்வவந்த்ய பதாம்புஜாய நம:

सत्त्वप्रधानाय नमः

ஸத்வப்ரதானாய நம:

सद्भावाय नमः

ஸத்பாவாய நம:

संख्यातीतगुणोज्ज्वलाय नमः

ஸங்க்யாதீத குணோஜ்வலாய நம: 40

अनघाय नमः

அநகாய நம:

ओं सारहृदयाय नमः

ஓம் ஸாரஹ்ருதயாய நம:

सुधिये नमः

ஸுதியே நம:

सारस्वतप्रदाय नमः

ஸாரஸ்வதப்ரதாய நம:

सत्यात्मने नमः

ஸத்யாத்மநே நம:

पुण्यशीलाय नमः

புண்யஶீலாய நம:

सांख्ययोगविचक्षणाय नमः

ஸாங்க்யயோகவிசக்ஷணாய நம:

तपोराशये नमः

தபோராஶயே நம:

महातेजसे नमः

மஹாதேஜஸே நம:

गुणत्रयविभागविदे नमः

குணத்ரயவிபாகவிதே நம: 50

कलिज्ञाय नमः

கலிக்ஞாய நம:

कालकर्मज्ञाय नमः

காலகர்மஞாய நம:

तमोगुणनिवारकाय नमः

தமோகுணநிவாரகாய நம:

भगवते नमः

பகவதே நம:

भारतीजेत्रे नमः

பாரதிஜேத்ரே நம:

ओँ शारदाह्वानपण्डिताय नमः
ஓம் ஶாரதாஹ்வாநபண்டிதாய நம:
धर्माधर्मविभागज्ञाय नमः
தர்மாதர்ம விபாகக்ஞாய நம:
लक्ष्यभेदप्रदर्शकाय नमः
லக்ஷ்யபேதப்ரதர்ஶகாய நம:
नादबिन्दुकलाभिज्ञाय नमः
நாதபிந்துகலாபிஞாய நம:
योगिहृत्पद्मभास्कराय नमः
யோகிஹ்ருத்பத்மபாஸ்கராய நம: 60
अतीन्द्रियज्ञाननिधये नमः
அதீந்த்ரியஞானநிதயே நம:
नित्यानित्यविवेकवते नमः
நித்யாநித்யவிவேகவதே நம:
चिदानन्दाय नमः
சிதானந்தாய நம:
चिन्मयात्मने नमः
சின்மயாத்மனே நம:
परकायप्रवेशकृते नमः
பரகாயப்ரவேஶக்ருதே நம:
अमानुषचरित्राढ्याय नमः
அமானுஷசரித்ராட்யாய நம:
क्षेमदायिने नमः
க்ஷேமதாயினே நம:
क्षमाकराय नमः
க்ஷமாகராய நம:
भव्याय नमः
பவ்யாய நம:

ॐ भद्रप्रदाय नमः

ஓம் பத்ரப்ரதாய நம: 70

भूरिमहिम्ने नमः

பூரிமஹிம்நே நம:

विश्वरञ्जकाय नमः

விஶ்வரஞ்ஜகாய நம:

स्वप्रकाशाय नमः

ஸ்வப்ரகாஶாய நம:

सदाधाराय नमः

ஸதாதாராய நம:

विश्वबन्धवे नमः

விஶ்வபந்தவே நம;

शुभोदयाय नमः

ஶுபோதயாய நம:

विशालकीर्तये नमः

விஶாலகீர்த்தயே நம:

वागीशाय नमः

வாகீஶாய நம:

सर्वलोकहितोत्सुकाय नमः

ஸர்வலோகஹிதோத்ஸுகாய நம:

कैलासयात्रासंप्राप्तचन्द्रमौलिप्रपूजकाय नमः

கைலாஸயாத்ரா ஸம்ப்ராப்த சந்த்ரமௌளி

ப்ரபூஜகாய நம: 80

काञ्च्यां श्रीचक्रराजाख्ययन्त्रस्थापनदीक्षिताय नमः

காஞ்ச்யாம் ஶ்ரீ சக்ரராஜாக்ய யந்த்ரஸ்தாபன

தீக்ஷிதாய நம:

श्रीचक्रात्मकताटङ्कतोषिताम्बामनोरथाय नमः

ஶ்ரீசக்ராத்மகதாடங்கதோஷிதாம்பாமனோரதாய நம:

ओं श्रीब्रह्मसूत्रोपनिषद्भाष्यादिग्रन्थकल्पकाय नमः

ஓம் ஸ்ரீப்ரஹ்மஸூத்ரோபநிஷத்பாஷ்யாதிக்ரந்தகல்பகாய

चतुर्दिक्चतुराम्नायप्रतिष्ठात्रे नमः

சதுர்திக்சதுராம்நாயப்ரதிஷ்டாத்ரே நம:

महामतये नमः

மஹாமதயே நம:

द्विसप्ततिमतोच्छेत्रे नमः

த்விஸப்ததிமதோச்சேத்ரே நம:

सर्वदिग्विजयप्रभवे नमः

ஸர்வதிக்விஜயப்ரபவே நம:

काषायवसनोपेताय नमः

காஷாயவஸநோபேதாய நம:

भस्मोद्धूलितविग्रहाय नमः

பஸ்மோத்தூளிதவிக்ரஹாய நம:

ज्ञानात्मकैकदण्डाढ्याय नमः

ஞானாத்மகைகதண்டாட்யாய நம: 90

कमण्डलुलसत्कराय नमः

கமண்டலுலஸத்கராய நம:

गुरुभूमण्डलाचार्याय नमः

குருபூமண்டலாசார்யாய நம:

भगवत्पादसंज्ञकाय नमः

பகவத்பாதஸம்ஞகாய நம:

व्याससन्दर्शनप्रीताय नमः

வ்யாஸஸந்தர்ஶனப்ரீதாய நம:

ऋष्यशृङ्गपुरेश्वराय नमः

ருஷ்யசிருங்கபுரேஶ்வராய நம:

सौन्दर्यलहरीमुख्यबहुस्तोत्रविधायकाय नमः

ஸௌந்தர்யலஹரீமுக்யபஹுஸ்தோத்ரவிதாயகாய

ओं चतुःषष्टिकलाभिज्ञाय नमः
ஓம் சதுஷ்ஷஷ்டிகலாபிக்ஞாய நம:

ब्रह्मराक्षसमोक्षदाय नमः
ப்ரஹ்மராக்ஷஸமோக்ஷதாய நம:

श्रीमन्मण्डनमिश्राख्यस्वयंभूजयसंनुताय नमः
ஸ்ரீமந் மண்டநமிஶ்ராக்ய ஸ்வயம்பூஜயஸந்நுதாய நம:

तोटकाचार्यसंपूज्याय नमः
தோடகாசார்ய ஸம்பூஜ்யாய நம: 100

पद्मपादार्चिताङ्घ्रिकाय नमः
பத்மபாதார்சிதாங்க்ரிகாய நம:

हस्तामलकयोगीन्द्रब्रह्मज्ञानप्रदायकाय नमः
ஹஸ்தாமலகயோகீந்த்ரப்ரஹ்மஞானப்ரதாயகாய நம:

सुरेश्वराख्यसच्छिष्यसंन्यासाश्रमदायकाय नमः
ஸுரேஶ்வராக்யஸச்சிஷ்ய ஸந்யாஸாஶ்ரமதாயகாய

नृसिंहभक्ताय नमः
ந்ருஸிம்ஹபக்தாய நம:

सद्रत्नगर्भहेरम्बपूजकाय नमः
ஸத்ரத்நகர்பஹேரம்பபூஜகாய நம:

व्याख्यासिंहासनाधीशाय नमः
வ்யாக்யாஸிம்ஹாஸநாதீஶாய நம:

जगत्पूज्याय नमः
ஜகத்பூஜ்யாய நம:

श्रीजगद्गुरवे नमः
ஸ்ரீ ஜகத்குரவே நம: 108

इति श्रीमच्छंकराचार्याष्टोत्तरशतनामावलिः संपूर्णा ॥

# ॥ गुरुपरंपरास्तोत्रम् ॥

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

शुद्धस्फटिकसंकाशं शुद्धविद्याप्रदायकम् ।
शुद्धं पूर्णं चिदानन्दं सदाशिवमहं श्रये ॥ १ ॥

सीमातीतमनाद्यन्तं नामोच्चारणभेषजम् ।
कामिताशेषफलदं श्रीमद्विष्णुमहं श्रये ॥ २ ॥

योगिहृत्पद्मनिलयं नतजीवहिते रतम् ।
श्रुतीनां जन्मभूमिं त्वां चतुर्मुखमहं श्रये ॥ ३ ॥

प्रसमाहितमत्यन्तं प्रथिमामिततेजसम् ।
वशीकृतपरानन्दं वसिष्ठं गुरुमाश्रये ॥ ४ ॥

शुक्तौ रूप्यमिवाभाति यद्रूपं मयि कल्पितम् ।
शक्त्या परिहृतं येन शक्तिं तं गुरुमाश्रये ॥ ५ ॥

करणातीतचिद्रूपं परिपूर्णं परायणम् ।
परमानन्दसंतुष्टं पराशरमहं श्रये ॥ ६ ॥

वेदव्यासं स्वात्मरूपं सत्यसन्धं परायणम् ।
शान्तं जितेन्द्रियक्रोधं सशिष्यं प्रणमाम्यहम् ॥ ७ ॥

त्रिकालातीतचिन्मात्रप्रशान्तस्वान्तसंयुतम् ।
विकाराद्यैरसंस्पृष्टं शुकं गुरुमहं श्रये ॥ ८ ॥

गूढा माया यस्य वाक्यैर्व्रीडिता विलयं गता ।
क्रीडन्तं विद्यया सार्धं गौडपादं तमाश्रये ॥ ९ ॥

जीवेशभेदरहितं नाविकं भववारिधेः ।
भावाभावविदूरस्थं गोविन्दं गुरुमाश्रये ॥ १० ॥

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किंकरी यस्य सा माया शंकराचार्यमाश्रये ॥ ११ ॥

विश्वं मायामयत्वेन रूपितं यत्प्रबोधतः ।
विश्वं च यत्स्वरूपं तं वार्तिकाचार्यमाश्रये ॥ १२ ॥

अनाद्यविद्यामुत्सार्य प्रज्ञानघनरूपताम् ।
यो बोधयति सच्छिष्यान् तं बोधघनमाश्रये ॥ १३ ॥

सिताघनादिदृष्टान्तैर्यत्स्वरूपं श्रुतिर्जगौ ।
प्रज्ञानघन एवेति तं ज्ञानघनमाश्रये ॥ १४ ॥

ज्ञानानामुत्तमं ज्ञानं ज्ञानिनामुत्तमो यतः ।
ज्ञानोत्तम इति ख्यातं गुरुं तमहमाश्रये ॥ १५ ॥

ज्ञाननिश्रेणिमालम्ब्य ब्रह्माख्यं गिरिमुन्नतम् ।
आरुह्य कृतकृत्यो यस्तं ज्ञानगिरिमाश्रये ॥ १६ ॥

दुर्वादिदुष्टमातङ्गविदारणपटीयसे ।
नमः श्रीसिंहगिरये गुरवे दिव्यचक्षुषे ॥ १७ ॥

ईप्सितार्थप्रदो नित्यं प्रणतानां च देहिनाम् ।
यतिरीश्वरतीर्थाख्यः तं नमामि गुरुं शिवम ॥ १८ ॥

श्रुतिमस्तककूटस्थमज्ञानद्विपभेदिनम् ।
श्रीमन्त्रराजमूर्तिं तं नृसिंहं गुरुमाश्रये ॥ १९ ॥

अविद्याच्छन्नभावानां नृणां विद्योपदेशतः ।
प्रकाशयति यस्तत्त्वं तं विद्यातीर्थमाश्रये ॥ २० ॥

अज्ञानं जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥ २१ ॥

अविद्यारण्यकान्तारे भ्रमतां प्राणिनां सदा ।
विद्यामार्गोपदेष्टारं विद्यारण्यगुरुं श्रये ॥ २२ ॥

विद्याविद्याविवेकेन पारं संसारवारिधेः ।
प्रापयत्यनिशं भक्तान् तं विद्यारण्यमाश्रये ॥ २३ ॥

अविद्यारण्यसंक्लेशक्लेशातुभृशतापितः ।
संश्रये सततं भूत्यै चन्द्रशेखरचन्द्रिकाम् ॥ २४ ॥

अविद्याख्यद्विपद्वेधीभावे दक्षं समाश्रये ।
नृसिंहभारतीशाख्यहरिं श्रुतिगुहाश्रयम् ॥ २५ ॥

पुरुषोत्तमतां यान्ति यमाश्रित्य जनाः श्रये ।
क्षराक्षरावतीतं तं पुरुषोत्तमयोगिनम् ॥ २६ ॥

किंकरीकृतभूपालं पङ्केरुहसमाननम् ।
तं कारुण्यपयोराशिं शंकराख्यं गुरुं श्रये ॥ २७ ॥

चन्द्रिकाधवलोदारसान्द्रकीर्तिच्छटाधरम् ।
इन्द्रियैर्दुर्जयं नौमि चन्द्रशेखरभारतिम् ॥ २८ ॥

प्रसिद्धविद्यानिलयं लसमानगुणोत्कटम् ।
बिसजाक्षार्चकं भक्त्या नृसिंहं तीर्थमाश्रये ॥ २९ ॥

पुरुहूतादिदेवौघपौरुषेयगुणोत्कटम् ।
पुरुषार्थप्रदं नौमि पुरुषोत्तमयोगिनम् ॥ ३० ॥

कामद्विरदपञ्चास्यरामणीयकमन्दिरम् ।
सोमोपमाननं श्रीमद्रामचन्द्रगुरुं भजे ॥ ३१ ॥

सुरसिन्धुलसत्कीर्तिं स्मरसिन्धुघटोद्भवम् ।
नारसिंहार्चकं श्रीमन्नारसिंहयतिं भजे ॥ ३२ ॥

सारासारविवेकज्ञं मारकाननकुञ्जरम् ।
शूरं दाने च निरतं नारसिंहयतिं भजे ॥ ३३ ॥

नृसिंहतां प्रयान्त्याशु यमाश्रित्य जना भुवि ।
नृसिंहभारतिं वन्दे द्विगुणोपपदं सदा ॥ ३४ ॥

तं सर्वभूताभयदं विभवैरन्वितं परम् ।
नारसिंहं गुरुं चापि नवं ज्ञानार्णवं भजे ॥ ३५ ॥

सत्यस्वरूपं सद्ज्ञाननिष्ठं साक्षाच्छिवं परम् ।
सदा दानरतं दान्तं सच्चिदानन्दमाश्रये ॥ ३६ ॥

महामेरुसमं धैर्ये माधुर्येऽप्यमृतोपमम् ।
ऊहापोहार्थनिष्णातं नारसिंहं गुरुं भजे ॥ ३७ ॥

सच्चित्ताम्बुजमित्राय सच्चरित्रयुजे नमः ।
सच्चिदानन्दभारत्यै सच्चिदानन्दमूर्तये ॥ ३८ ॥

सच्चिदानन्दभारत्यै नव्यायास्तु नमोऽनिशम् ।
अध्यात्मज्ञाननिर्धूताविद्याकार्योपलब्धये ॥ ३९ ॥

मारमातङ्गपञ्चास्यं मदसर्पद्विजर्षभम् ।
नृसिंहभारतिं वन्दे जिताक्षतुरगं सदा ॥ ४० ॥

तत्त्वमस्यादिवेदान्तवाक्यार्थज्ञानवारिधेः ।
पूर्णचन्द्रमसं वन्दे सच्चिदानन्दयोगिनम् ॥ ४१ ॥

अभिनवपदपूर्वान् सच्चिदानन्दसंज्ञान्
निगमशिखरवेद्यान् नित्यकल्याणरूपान् ।
त्रिभुवनजनवन्द्यान् सर्वलोकैकहृद्यान्
हृदयकमलमध्ये भावयाम्यम्बुजास्यान् ॥ ४२ ॥

प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥ ४३ ॥

श्रीसच्चिदानन्दशिवाभिनव्य-
नृसिंहभारत्यभिधान्यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्म-
निष्ठान् भजे मानवशंभुरूपान् ॥ ४४ ॥

सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥ ४५ ॥

विद्यातीर्थाभिधाचार्यो ह्यद्याभिनवपूर्वकः ।
शृङ्गेरीशारदापीठे विराजति जगद्गुरुः ॥ ४६ ॥

इति गुरुपरंपरास्तोत्रं संपूर्णम् ॥

## சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் ஸம்பந்தமான வேறு புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| गुरुवंशकाव्यम् 1—7 सर्गाः | | *1–75* |
| श्रीशंकराचार्याष्टोत्तरशतनामावलिः | | *0–12* |
| स्तोत्राणि | | *1–00* |
| भक्तिसुधातरङ्गिणी | Superior Edn. | *10–00* |
| ,, | Ordinary Edn. | *2–50* |
| *காலடி க்ஷேத்ர மஹிமை* | | *0–75* |
| *ஸ்ரீ குருராஜ வைபவம்* | | *0–75* |
| *தேன் மொழிகள்* | | *3–00* |
| *அமிருத மொழிகள்* | | *2–00* |
| *உபதேச ரத்னமாலா* | | *1–50* |
| The Greatness of Sringeri | | *00–75* |
| The Life of Sri Sachidananda Sivabhinava Narasimha Bharati Swamigal | | *2–00* |
| The Saint of Sringeri | | *0–75* |
| Dialogues with the Guru | | *5–00* |
| The call of the Jagadguru ( Sringeri ) | | *4–00* |
| Sparks from a Divine Anvil | | *2–00* |
| The Throne of Transcendental Wisdom | | *5–00* |